336

# [illegible] சிரித்திரன்

கார்த்திகை 1982

5 11

JL
Y5925G~211,N28
N32-5-11
158903

336

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

| தொகுதி ௫ | பிரஜோற்பத்தி ௵ கார்த்திகைமீ | பகுதி ௧௧ |
| --- | --- | --- |

10 SEP 1952

## உள்ளடக்கம்

கடவுள் வாழ்த்து .... 273
பத்திரிகாசிரியர் முன்னுரை .... 276
செங்குந்தர் கல்விநிதி அறிக்கைகள் .... 277
ஆராய்ச்சிப் பகுதி:—நமது புராதன வழக்க ஒழுக்கங்கள் ... 281
மாதர் பகுதி:—இன்பவல்லி .... 285
அறிவியல் பகுதி:—பூமிசாஸ்திரம் .... 287
சுகாதாரப் பகுதி:—குன்றைக் கூழாங்கல் லாக்கினேன் .... 289
இலகு வைத்தியம் ... 290
என்றும் மறையாத இன்மொழிகள் .... 291
ஆன்றோர் அமுத மொழிகள் .... 292
ஐ. சி. எஸ். வர்க்கத்தினரின் சம்பளம் .... 294
விகடத் துணுக்குகள் ... 295
காந்தியார் படலம் .... 300
வர்த்தமானம் .... 301
செங்குந்த யாத்திரைவாசி .... 302
கிளர்ச்சி

காரியாலயம்:—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாடு

சென்னை மயிலாப்பூரில் 1931௵ டிசம்பர்௴
கடைசி வாரம் கூடும்

தலைவர்கள்:—

சமூக மகாநாடு: திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B.A.,
வக்கீல், அம்பாசமுத்திரம்.

வாலிபர் மகாநாடு: திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
B.A., B.L., வக்கீல், திருநெல்வேலி.

திறப்போர்: சென்னை துரைத்தன மந்திரிகளுள் ஒருவர்.

கொடி யேற்றுவோர்: திரு. தி. க. ச. கலியாண சுந்தர முதலியார்
அவர்கள், திருவாரூர்.

ரவேற்புத் தலைவர்: திரு. V. இரத்தின முதலியார் அவர்கள், B.A.,B.L.
வக்கீல், மயிலாப்பூர்.

ரியதரிசி: திரு. S. K. விநாயக முதலியார் அவர்கள், B.A., B.L.,
வக்கீல், மயிலாப்பூர்.

ரக்கிஷதார்: திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்.

| | |
|---|---|
| வரவேற்புச் சபையினர்க்குக் கட்டணம் | ரூ. 2 |
| பிரதிநிதிகளுக்குக் கட்டணம் | அணா. 8 |
| சாப்பாட்டுச் சீட்டு இரண்டு வேளைக்கு | அணா. 8 |

லைச் சங்கங்களும் கிராமங்களும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து
பர்௴ 10௳க்குள் தலைச்சங்கத்துக்கு அறிவிக்க வேண்டும். மகாநாட்
தீர்மானங்கள் கொண்டுவர விரும்புவோர் டிசம்பர்௴ 10௳க்குள்
னங்களின் நகல்களை அனுப்ப வேண்டும்.


336

# செங்குந்தமித்திரன்



30 SEP 1932



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—ரு] பிரஜோற்பத்தி௵ கார்த்திகை௴ [பகுதி—கக


## கடவுள் வாழ்த்து

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆநந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

—திருவாசகம்.

---

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### நம்மவர் மூன்றாவது மகாநாடு: மயிலாப்பூரில் டிசம்பர்௴ கூடும்

நாளது நவம்பர்௴ 8௳ ஞாயிற்றுக்
கிழமை திரு. S. குழந்தைவேல்
முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய
நமது தலைச்சங்கத்தின் நிருவாக சபைக்
கூட்டத்தில் அடுத்த டிசம்பர் மாதம் கடைசி
வாரம் கிருஸ்துமஸ் விடுமுறை சமயம் நம்
மவர் மூன்றாவது மகாநாட்டினைச் சென்னை
மயிலாப்பூரில் கூட்ட வேண்டுமெனத் தீர்
மானமாயுள்ளது. இத் தீர்மானத்துக்கு
அடிப்படையா யிருந்தது, காஞ்சியில் நடந்த
இரண்டாவது மகாநாட்டின்போது தலை
வர்கள் கலந்து ஆலோசித்து நான்காவது மகா
நாட்டினைக் கூட்டத் தஞ்சாவூர் ஜில்லா வாசி

கள் 1932-இன் இறுதியில் ஏற்றுக்கொள்வ
தென்றும், அதற்கிடையே சென்னையில்
தலைச்சங்கத்தாரே மூன்றாவது மகாநாட்டி
னைக் கூட்டிவைக்க வேண்டுமென்றும், அதற்
குதவியாகத் தலைச்சங்கத்துக்குக் கோயம்புத்
தூர் ஜில்லா வாசிகளின் சார்பாகத் திரு. வா.
செ. செங்கோட்டையா முதலியார் அவர்
கள் நூறு ரூபாய் நன்கொடை அளிப்ப
தென்றும், தஞ்சை ஜில்லா வாசிகளின் சார்
பாகத் திருவாரூர் திரு. தி. க. ச. கலியாணசுந்
தர முதலியார் அவர்கள் நூறு ரூபாய் நன்
கொடை அளிப்பதென்றும், உன்னியூர் திரு.
R. மாணிக்க முதலியா ரவர்கள் தமது சொந்

தப் பொறுப்பில் இருபத்தைந்து ரூபாய் நன்கொடை அளிப்பதென்றும் முடிவு கட்டி வைத்ததேயாகும். தலைச்சங்கத்தின் தற்காலப் பொருளாதார நெருக்கடியில் இப் பெருங் காரியத்தினைக் குறைவற நடத்தி வைப்பதற்கு மற்ற ஜில்லா வாசிகளின் ஆதரவும் பொருளுதவியும் மிக்க அவசியமாக இருப்பதால், அதற்கு இதர ஜில்லா வாசிகளும் தம்மாலான பண ஒத்தாசையைச் செய்ய முன் வருமாறு வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர். மூன்றுவது மகாநாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள வரவேற்புச் சபைத் தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், தலைவர்கள் ஆதியோர் பெயர்களும், வரவேற்புச் சபை அங்கத்தினரும் பிரதிநிதிகளும் செலுத்த வேண்டிய கட்டணங்களும் மற்றோரிடத்தில் விளம்பரஞ் செய்யப்பட்டுள்ளன.

## தலைச்சங்கத்தின் நான்காவது பொதுக் கூட்டம் அதே சமயம் நடைபெறும்

தலைச்சங்கத்தின் நான்காவது பொதுக் கூட்டமும் மூன்றுவது மகாநாட்டின்போதே சென்னை மயிலாப்பூரில் நடைபெறும். பழைய அங்கத்தினர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் நமது தலைச்சங்கத்தின் சட்ட திட்டங்களின்படி ஏற்பட்டுள்ள மூன்று வருஷ கால வரையறை அடுத்த ஜெனவரி மாதத்தோடுமுடிவடைகிறபடியால் கிளைச்சங்கப் பிரதிநிதிகளின் தேர்தலையும், தலைச்சங்க நிருவாக சபை அங்கத்தினர் உத்தியோகஸ்தர்களின் தேர்தலையும் இம் மகாநாட்டின்போதே நடத்திவிடவேண்டுமென்று நிருவாக சபையினர் தீர்மானித்துள்ளனர். இது சம்மந்தமான விளம்பரம் ஒன்று மற்றோரிடத்தில் பிரசுரிக்கப் பெற்றுள்ளது. அதைக் கவனித்து அதன்படித் தலைச் சங்கத்தோடு இணைக்க மனு அனுப்புதல், கட்டணஞ் செலுத்துதல், தேர்தல் நடத்துதல், கூட்டத்தில் பிரேரேபிக்க உத்தேசித்துள்ள தீர்மானங்களின் நகலை முன்னதாக அனுப்பி வைத்தல் ஆகிய விஷயங்களைச் சிறிதும் கால தாமதமின்றிச் செய்யும்படிக் கிளைச்சங்கத்தினரை வேண்டிக் கொள்ளுகிறோம். பள்ளி யெழுச்சிக் குரிய மார்கழி மாதத்தில் இம் மகாநாடும் தலைச்சங்கக் கூட்டமும் கூடுவதால், துயில் கொண்டிருக்கும் சங்கங்களும் இச்சமயம் துயிலுணர்ந் தெழுந்து சுறுசுறுப்போடு வேலை செய்யத் துவக்குமென எதிர்பார்க்கிறோம்.

158903

## அசனம்மாபேட்டை சங்கத்தின் ஆண்டு விழா: கட்சி ஒழிந்தது

இவ்விழா வைபவத்தின் விவரங்கள் அடுத்த மாத மித்திரனில் பிரசுரிக்கப்பெறும். எனினும், அதைப்பற்றி இரண்டொரு விவரங்கள் வரைய விரும்புகிறோம். தலைச்சங்கத் தலைவரில் பெரும்பான்மையோர் ஒன்றுகத்திரண்டு சென்ற ஆண்டு விழா இது ஒன்றேயாகும். சங்க ஆண்டு விழாவென இது விளம்பரஞ் செய்யப்பட்டதேனும், இதை அநேகமாகச் சேயாறு தாலுக்கா செங்குந்தர்களின் மகாநாடென்றே கருதவேண்டும். ஏனெனில், இதற்குச் சேயாறு தாலுக்காவாசிகள் அநேகம்பேர் வந்திருந்தனர். பெருங் கூட்டம், வாத்திய முழக்கத்துடன் வரவேற்பு, ஊர்வலம், வரவேற்கும் இன்னுரைகள் நிறைந்த தோரணங்கள், கொடி யேற்றல், புகைப்படங்கள் எடுத்தல், அறுசுவை யுண்டியுடன் விருந்தோம்பல், மகோபந்நியாஸங்கள், விஷயாலோசனைக் கூட்டம், தீர்மானங்கள் நிறைவேற்றுதல் ஆதிய மகாநாடுகளுக் குரிய சிறப்பங்கங்க ளெல்லாம் இவ்விழாவில் காணப்பெற்றன. குழுமியிருந்த கூட்டத்தினரின் ஊக்கமும், ஆர்வமும், முன்னேற்ற உணர்ச்சியும் அளவிடற்பாலனவல்ல. எல்லாவற்றினும் மகிழ்ச்சியும் திருப்தியும் உற்சாகமும் அளிக்கக் கூடிய அரிய சம்பவமொன்று இவ்விழாவுக்கு எவரும் மறக்க முடியாத பெருமையை அளித்துள்ளது. அதாவது, அது சமயம் அசனம்மா பேட்டையில் நம்மவரிடையே இரண்டு மூன்று வருஷங்களாக இருந்து வந்த கட்சிகள் ஒற்றுமைப்பட்டதேயாம். கட்சி விசாரணை நவம்பர் 1௳ ஞாயிற்றுக்கிழமை இரவு முழுதும் நடந்து, காலை 4-மணிக்கு அந்நியோந்நிய ஒற்றுமை யேற்பட்டது. உடனே மேள தாளங்களுடன் இரு கட்சியினரும் தலைவர்களும் ஊர்வலம் வந்து சந்தன தாம்பூல புஷ்பங்களை ஒருவருக் கொருவர் வழங்கிக்கொண்டு, பொழுது விடிந்ததும் தண்டோரா மூலம் ஊர் முழுவதும் கட்சிகள் ஒழிந்து சமரசம ஏற்பட்டுவிட்ட சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவித்துவிட்டனர். ஒற்றுமைப்பட்ட அசனம்மாபேட்டைச் செங்குந்தர்கள் நீடூழி காலம் ஒற்றுமையினுல் உண்டாகவல்ல நலங்களனைத்தினையும் பெற்றுச் சீரும் சிறப்பும் பெருவாழ்வு முற்று இன்புறுவாராக!

இந்தக் கட்சிச் சமரசம் ஏற்பட்ட சமயம் மற்றொரு முக்கிய விஷயமும் அறுபட்டது. இந்தக் கட்சிப் பிளவுக்கு மூல காரணங்களுள் ஒன்றுயிருந்தது திருவோத்தூரில் நம்மவரிடையே 47, 13 என்று அங்குள்ள அறுபதுள் ஏற்பட்டிருக்கும் ஒரு பிளவேயாகும். 47-ஓடு சம்பந்தம் பண்ணிக்கொள்வதா 13-ஓடு சம்பந்தம் பண்ணிக்கொள்வதா என்னும் விஷயமாகத் திருவோத்தூருக்கு அருகிலுள்ள அசனம்மா பேட்டையில் அபிப்பிராய பேதமேற்பட்டது. ஆனல் இனி, தலைச்சங்கத் தலைவர்களின் புத்திமதியின்படி திருவோத்தூரிலுள்ள 47, 13 என்ற வித்தியாசத்தால் அசனம்மாபேட்டை செங்குந்தர்கள் பிளவுபட வேண்டியதில்லை யென்றும், இரு பகுதியினருள்ளும் இஷ்டப்பட்ட இடங்களில் சம்பந்தம் செய்துகொள்ளலாம் என்றும், இதற்காக இனிக் கட்சி ஏற்படக்கூடாதென்றும் எல்லாரும் ஒத்துக்கொண்டனர். இது மிக்க பெருந்தன்மையான தீர்மானமேயாம். அசனம்மாபேட்டை செங்குந்தர்களின் விசால நோக்கங்களையும் முன்னேற்றப் பக்குவத்தினையும், கட்சிகளால் ஆங்காங்கே பிளவுபட்டுள்ள நம் மக்கள் விரைவில் பெறுமாறு அருள்புரிய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

## தலைச்சங்கச் சட்டதிட்டங்களுள் மாறுதல்

காஞ்சிபுரத்தில் நடந்த சென்ற பொதுக்கூட்டத்தில் நமது தலைச்சங்கத்தின் சட்டதிட்டங்களுள் சில கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளன. மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சங்கங்களும், கிராமங்களும், மற்றையோரும் அவற்றைக் கவனிக்கவும்:—

பக்கம் 2: (7)-இல் 'ஒரு பொது உபகாரநிதி ஸ்தாபித்தல்' என்பது 'ஒரு பொது உபகார நிதியையும் இன்ஷுரன்ஸ் கம்பேனியையும் ஸ்தாபித்தல்' எனவும்;

பக்கம் 3: 4-இல் 'பொதுக் கூட்டத்துக்குப் பிரதிநிதிகளாக அதன் காரியதரிசியையும் மற்றொரு அங்கத்தினரையும்' என்பது 'அதன் தலைவரையும், காரியதரிசியையும், மற்றும் மூன்று அங்கத்தினரையும்' எனவும்;

பக்கம் 5: 6-இல் 'இரண்டு அமைச்சர்கள்' என்பது 'ஒரு அமைச்சர்' எனவும்; (இதன்படி மற்ற இடங்களிலும் 'அமைச்சர்கள்' என்பது 'அமைச்சர்' என ஒருமையாகவும்);

பக்கம் 7: கடைசி பத்தியில் 'வருஷ முடிவில் கூடும்' என்பது 'வருஷாந்தா' எனவும் மாற்றப்பட்டன.

பக்கம் 8: பொருட்காப்பாளர் என்னும் தலைப்பில் பொருட்காப்பாளர் கடமைகட்குப் பின்,

'அமைச்சரும் பொருட்காப்பாளரும் தங்கள் பொறுப்புக்களைச் செவ்வனே தாங்கும் வண்ணம் அவர்கட்கு உதவி புரியவும், சங்கக் காரியாலயத்தின் தினசரி விவகாரங்களைக் கவனித்து அதனை ஒழுங்காக வைத்துக்கொள்ளவும், 'மித்திரன்' விஷயங்களைக் கவனிக்கவும் ஒரு குமாஸ்தாவை நிருவாக சபையார் மாதச் சம்பளத்துக்கு நியமித்துக்கொள்ளலாம்' என்பது சேர்க்கப்பட்டது.

அதே பக்கத்தில் 9-மகாநாடு என்னும் தலைப்பில் 'பிரதி வருஷமும்' என்பது 'கூடுமான வரையில் பிரதி வருஷமும்' எனவும், ஒவ்வொரு கிளைச்சங்கமும் 'ஐந்துக்குக் குறையாத' என்பது 'பதினைந்துக்குக் குறையாத' எனவும், ஒவ்வொரு கிராமமும் குறைந்தது 'ஒரு பிரதிநிதியை' என்பது 'ஐந்து பிரதிநிதிகளை' எனவும் மாற்றப்பட்டன.

பக்கம் 9: சிறப்பு மகாநாடு என்னும் தலைப்பிலுள்ள விஷயம் நீக்கப்பட்டது.

பக்கம் 10: வரவேற்புச் சபையாரிடம் மிகுதியாக ஏதாவது பொருள் நிற்குமாயின் 'அதைத் தலைச்சங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டும்' என்பது 'அதை அவர்கள் விருப்பப்படி செங்குந்தர் கல்விநிதியிற் சேர்த்துவிடலாம்' என மாற்றப்பட்டது.

...து
...றல் எவ்

# செங்குந்தர் கல்வி நிதி

## நன்கொடை வாக்களித்தவர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இரண்டாவது மகாநாட்டின்போதும் மற்றச் சமயங்களிலும் நமது கல்வி நிதிக்கு நன்கொடைகள் வாக்களித்த கனவான்கள் தாம் வாக்களித்த தொகைகளைத் தாமத மின்றி அனுப்பிவைக்க வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர். வாக்களித்த தொகைகள் இன்னும் நிதியில் சேராம லிருப்பதால் நிதியின் வட்டி வருமானம் குறைவுபடுவதோடு நல்ல யோக்கியதையுள்ள ஏழை மாணுக்கர்கள் பலருக்கு ஒத்தாசை புரிய முடியாதிருப்பதை அன்பர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, வாக்களித்த தொகைகளை என்னிடம் நேரிலே என் விலாசத்துக்கு இன்சூரன்ஸ் மூலமாகக் கூடிய சீக்கிரம் அனுப்பிவைக்குமாறு அன்பர்களை வேண்டிக் கொள்கிறேன்.

மா. பா. கந்தசாமி முதலியார், பி. ஏ., பி. இ.,
அமைச்சர், செங்குந்தர் கல்விநிதி,
7, காமாட்சி விலாசம், போஷ்டல் காலனி, மாம்பலம்,
தேனாம்பேட்டை போஸ்டு, சென்னை.

## உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்களுக்கு அறிக்கை

இரண்டாவது தவணையாக அனுப்ப இருக்கும் உபகாரச் சம்பளம் மாணுக்கர்களின் தலைமை யாசிரியர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் மார்க்குகள் முதலியவை கிடைக்கப்பெற்ற பின்னரே அனுப்பப்பெறும். ஆகவே, கூடிய சீக்கிரத்தில் மார்க்குகளையும் நற்சாக்ஷிப் பத்திரங்களையும் வாங்கி அனுப்புமாறு கல்வி நிதியின் உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் எச்சரிக்கப் பெறுகின்றனர்.

13-11-31 அமைச்சர்.

### காஞ்சிபுரம் முனிசிபாலிடி தலைவர்

திரு. மா. த. சாமிநாத முதலியார் அவர்கள் (காஞ்சிபுரத்தில் நடந்த நம்மவர் இரண்டாவது மகாநாட்டின் வரவேற்புத் தலைவர்; முதல் மகாநாட்டில் கொடியேற்றிய பெரியார், காஞ்சிபுரம் நகரபரிபாலன சபையின் தலைவராகவும், தேவஸ்தான சபைத் தலைவராகவும் நெடுங்காலம் இருந்தவர்) போட்டியின்றி ஷை ஸ்தானத்தைப் பெற்றதற்கு மிகவும் மகிழ்கின்றோம்.

### சைதாப்பேட்டை முனிசிபல் தேர்தலில் வெற்றி

6-11-31-ல் திரு. S. இரத்தினவேல் முதலியார் தோப்பேட்டை, திரு. அருணசல முதலியார், திரு. S. சடையப்ப முதலியார், திரு. தொ. சா. துரைசாமி முதலியார் இவர்கள் நால்வரும் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது கேட்டு மகிழ்கிறோம்.

### சேலம் நகரசபை

சேலம் நகர சபை 27-வது வார்டுக்குத் திரு. S. P. பொன்னுசாமி முதலியாரவர்கள் போட்டியும் வீணை பணவிரையமுமின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டது கேட்டு மிகவும் மகிழ்கின்றோம். (ப-ர்.)

### இங்கிலாந்தில் புதிதாகக் கூடிய மந்திரி சபையில்

திரு. ராம்சே மெக்டனல்ட் பிரதம மந்திரியாகவும், ஸர். சாம்யுவல் ஹோர் இந்தியா மந்
வும், சாங்கி பிரபு சான்செலராகவும் வந்துள்ளனர்.



# ஆராய்ச்சிப் பகுதி

## நமது புராதன வழக்க ஒழுக்கங்களின் ஆராய்ச்சி

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

(தொகுதி 4, 384-ம் பக்கத் தொடர்ச்சி)

### வடக்கு நோக்கிப் பூஜை செய்தல்

“பூசை வடக்கு போஜனம் தெற்கு” என்பது நந்தமிழ் நாட்டில் பூர்வீகமாய் வழங்கிவரும் பழமொழிகளில் ஒன்று. பூசை செய்யுங் காலத்தில் தேவ சொரூபத்தைக் கிழக்குமுகமாக இருத்தித் தான் வடக்கு முகமாக உட்கார்ந்துகொள்ள வேண்டுமென்பது நமது வேதாகம புராணேதிகாசங்களில் கூறப்பட்ட முக்கியமான விதி. இதற்குக் காரணம் யாதெனத் தெளிவாக வாராயுமிடத்து, வட திசையிலிருந்து தெற்கு நோக்கி மகா வேகமாய்ச் செல்லும் பூமியின் மகாசக்தியானது (Electric power) அந்த பிம்பத்தில் தாக்கிப் பின் பூசை செய்யும் புருஷனின் சரீரத்தில் படும் என்பதே யாம். அவ்விதம் நிகழ்வதால் பிம்பத்தில் ஆவாஹனஞ் செய்யப்பட்ட பரமான்மாவின் தெய்வீக சக்தியாலும், பௌதிக ஔஷத பாசுகங்களின் சக்தியாலும், உலோக சம்பந்தத்திலுண்டாகும் (இயக்கும் சக்தி) மின்சார சக்தியாலும், மந்திரோச்சாரணம் முதலிய கிரியைகளினாலும், நமது சரீரத்திலுள்ள நாடிகளில் ஒரு வகையான அசைவுண்டாகின்றது. அதனால் வாயு மலபந்தங்களும் சுக்கிலக் கட்டும் ஒழிகின்றன. உதராக்கினியும் விருத்தியாகின்றது. தவிர, பூஜா காலத்தில் ஏற்றப்படுகின்ற அலங்கார திருவிளக்காதிகளின் தரிசனத்தால் கண்மலம் ஒழிகின்றது. நேத்திர ரோகாதிகள் விலகிக் கண்களுக்குக் குளிர்ச்சியும் பிரகாசமு முண்டாகின்றன. கடவுளுக் காராதிக்கப்படும் கற்பூர வாசனையாலும், அதன் புகையைக் கண்களி லொற்றிக் கொள்வதினாலும், சாம்பிராணி, சந்தன அறுப்புத் தூள் முதலிய தூப சுகந்தத்தினாலும், உமது தேகத்திற்கு அநேக நன்மைக ளுண்டாகின்றன. விக்கிரகத்துக்குச் சாத்தப்படுகின்ற, வில்வம், துளசி, சங்கம், பாலுடன் கலந்த நீர் முதலியவற்றைப் பிரசாதமாக வுட்கொள்வதால், நம்மைப் பீடிக்கும் அநேக வியாதிக ளொழிவது மல்லாமல் நமது நாடிகளுஞ் சுத்தமுறுகின்றன. கற்பூரப் புகை யுட்செல்லுவதால் வயிற்றில் அபக்குவமா யிருக்கிற அன்னம் பக்குவப்படும். ஜீரண சக்தி மிகும். அது அஜீரணத்தி லுண்டாகும் சகல ரோகங்களையும் வாயுக்களையு மொழிக்கும். விஷ ஜுராதிகள் அணுகாமல் தடுக்கும். காலை முதல் ஆகாரமேது மில்லாமலிருந்து, தேவாராதனை செய்து பூசை முடித்து மேற்கூறிய புகைகளை முகர்ந்து பத்திரங்களை யுட்கொள்ளுதலால், அநேக விதமான நோய்கள் நீங்குகின்றன. தேகாரோக்கிய முண்டாகின்றது. அன்றியும் வீட்டிலண்டும் விஷ வாயுக்கள், கற்பூர சாம்பிராணிப் புகையாதிகளால் ஒழிக்கப்படுகின்றன. அநேக விதமான விஷப் பூச்சிகளும் கிருமிகளும் மடிகின்றன. காலரா, வாந்திபேதி, விஷஜுரம், அம்மை முதலிய கொள்ளை நோய்களும் வாராமல் தடுக்கப்படுகின்றன. காலரா வென்னுங் கொடிய நோய் பரவியிருக்குங் காலத்தில் பலர் கைக்குட்டைகளில் கற்பூரத்தை முடிந்து அதனை யடிக்கடி முகர்ந்து கொண் டிருப்பதை நீங்கள் பலதரம் நேரில் கண்டிருப்பீர்கள். இதனால் கற்பூரத்தின் அரிய குணம் நன்கு விளங்கக் கிடக்கின்றது. ஒரு நாளைக்கே இவ்வளவு குணமுண்டானால், தினந்தோறுந் தவறாமல் பூசை செய்து வருவதினால் எவ்வளவு நன்மை யுண்டாகு மென்பதை வாசகர்களாகிய நீங்களே யூகித் தறியுங்கள்? ஒவ்வொரு நாளுந் தவறாமல் கர்ப்பூரா ரார்த்திகத்தோடு கூடிய, இவ்வித பூசையை நியமமாகச் செய்வதால் எவ்வளவோ நன்மைக ளேற்படுகின்றன வென்று, பல வைத்திய நிபுணர்களும் கலா வல்லுநராய பல மேதாவிகளும், சைவப் புராணிகர்களும் கண்டு பிடித்திருக்கின்றனர். இகலோகத்திற்கும் பரலோகத்திற்கும், சாதகமாயுள்ள விசேஷ பயனை இச்சிவ பூசையினாலடையலா மென்பதே முற்காலத்திய பெரியோர்களின் முடிவான துணிபு. பண்டைக் காலத்தில் நமது நாட்டில் தேவாராதனையில்லாத வீடுகளைக் காண்பது மிகவும் அருமையாயிருந்தது. எங்கணும் இப்பூசை நியமமாக நடந்து கொண்டு வந்தது. சிவபூசை முடிந்த பின்னரே போஜனம் அருந்தும் வழக்கத்தை நம்மவர்கள் மேற்கொண் டிருந்தார்கள். அவ்வமயம் அவர்கள் இரண்டு வேளை போஜனத்தையே அருந்திவந்தனர். நாஸ்திகமும், நவீன நாகரிகங்களும் பரவி, தலை விரித்தாடு மிந்தக் காலத்தில் மேற்கண்ட விதிக்கு மாறாக, ஒரு நாளைக்குக் காலை ஆறு மணி முதல் இரவு படுக்கைக்குப் போகிற வரையில் சுமார் எழெட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் பல ஆகாரங்களும், சிற்றுண்டிகளும், தேநீர், காபி, முதலிய சில பான வகைகளும் உடனுக்குடன் கொடுக்கப்படுகின்றன. இது கலிகாலத்தின் கொடுமை போலும். இதனால் எவ்

வளவோ மக்கள் பலவிதமான நோய் வாய்ப்பட்டு மிகவும் மெலிந்து துன்புறுகிறார்களென்பது நாம் அனைவரும் நேரே கண்கூடாகக் கண்டறிந்த விஷயம். கால வரையறை யின்றிப் புசிக்கப்படுகின்ற ஆகாராதிகளால் எவ்வளவோ கெடுதிகள் சம்பவிக்கின்றன வென்பதை நம்மவர்கள் சற்று முணர்வதேயில்லை. இவ்வித கெடுதிகள் நேராதிருக்கவே தேவ பூசை செய்து முடித்த பின்னரே ஆகாரம் அருந்தும் சிறந்த வழக்கத்தை நமது முன்னோர்கள் கையாண்டு வந்தனர். அக்காலத்தில் அவர்கள் எவ்வளவோ சுகதேகிகளா யிருந்தார்களென்பதைச் சரித்திர வாயிலாய் இப்போது நாம் படித்தறிகிறோம். ஆகையால் இம்மை யம்மை நலன்களுதவ வல்ல இத்தேவ பூசையை நீங்கள் அனைவரும் அனுட்டான முறையிற் கைக்கொண்டொழுகுவீர்களாக! இதனால் நீங்கள் அடையும் பலனோ, அளவு படுத்திச் சொல்லுந் தரத்ததன்று.

## அடிக்கடி உபவாச மிருத்தல்

உபவாசம் என்பதற்குப் பட்டினி யென்றும் பெயர். ஒருவன் சாப்பிடாமல் சும்மா விருந்தால், அவன் 'உபவாச மிருக்கிறான்' என்று சொல்வது நம்மிந்தியர்களின் வழக்கம். உபவாசம் என்னும் சொல் தற்காலத்தில் விரத நாட்களில் பட்டினியிருத்தல் என்னும் பொருளில் வழங்கப்பட்டு வருகிறது. இந்துக்களுக்குக் கிருத்திகை, அமாவாசை, ஏகாதசி, சிவராத்திரி முதலியன விரத நாட்களாகும். இன்னும் எண்ணிக்கையி லடங்காஎவ்வளவோ விரதங்க ளிருக்கின்றன. எந்த விரதத்தை ஒருவன் அனுஷ்டித்தாலும் அந்த விரதம் பட்டினி கிடத்தலென்னும் உபவாசத்தோடு இணைக்கப்பட் டிருக்கிறது. உபவாசமில்லாத நோன்பே நமது மதத்தில் இல்லை யெனலாம். பட்டினி கிடத்தலால் வரும் பயன் யாதென நீங்கள் கருதலாம். அப்படி நம் பெரியோர்கள் எதையும் ஆலோசியாமல் கண்மூடித் தனமாக ஏற்படுத்தவில்லை. நம்முடைய இம்மை யம்மை வாழ்வின் நன்மைக்கும், தேகாரோக்கியத்திற்குமே, இத்தகைய வுபவாசங்களை நமது முன்னோர்கள் ஏற்படுத்தி யிருந்தனர். சிறிது நேரம் தாங்கள் பட்டினி கிடப்பதால், பசியின் கொடுமை இத்தன்மையதென் றுணர்கிறார்களாகையால், உண்ண உணவின்றி வருந்தி யலையும் பசியாளர்களைக் காணின், கன்னெஞ்சரா யிருப்போருங்கூட மனமிரங்கி அன்னதானஞ் செய்வார்கள். அதனா லவர்கள் ஏராளமான புண்ணிய பலனை யடைகிறார்கள். இதனால் இம்மையில் புகழும், மறுமையில் மோக்ஷமும் சித்திக்கின்றன. உபவாச மூலம், கொடுந் துன்பமாகிய பசிப்பிணியைச் சகித்துக்கொண் டிருக்கப் பழகுவதால், வேறெவ்விதத் துன்பங்கள் நேரிடினும், அவற்றைச் சகித்துப் பொறுத்துக்கொள்ளுந் தன்மை நமக்குண்டாகின்றது. மேலும், உபவாசம் அஜீரணத்தை யொழித்து உடலுக்கிதஞ் செய்ய வல்லது. உபவாச மிருத்தலினால், மந்தம், சோம்பல், முதலியனவின்றி, உடலில் பசி யுணர்ச்சி யிருந்துகொண்டே யிருப்பதால், மன மொருவழிப்பட்டு, எல்லாம் வல்ல இறைவனாகிய முழுமுதற் கடவுளைத் திரிகரண சுத்தியாய்த் தியானஞ் செய்து, அவனருளைப் பெறச் சிறந்ததோர் சாதகமா யிருக்கின்றது. பசிக்கொடுமை யென்கிற துக்கக் கலப்பு சம்பந்தப்பட் டிருப்பதால், அவ்வமயம் கடவுளைத் தியானிக்க மனம் நாடுகின்றது. இருதயம் பரிசுத்தமடைந்து இறைவன்பால் நேயம் மிகுகின்றது. மனம் இறைவனிடத்தில் லயிக்கின்றது. தன்னுள் லயிக்கின்றது. தன்னுள் தலைவனைக் காணும் பேறும் சித்திக்கின்றது. "துன்பமே துணைவனைக் காட்ட வல்லது" என்னும் ஆன்றோர் அமுதமொழியானது ஈண் டெய்த்துணரற்பாலது. தவிர, உபவாச தினங்களில் பால், பழம், கந்தமூலாதி சத்துவகுண ஆகாரங்களே உடலிற் சேர்வதால், ஞானம், அருள், தவம், வாய்மை யாதிய நன்மைகள், நமக்குண்டாகின்றன. உபவாச மிருத்தலினால், நமது தேகத்திலுள்ள சகல கருவிகளுக்கும் ஓய்வு ஏற்பட்டு, அசதி நீங்கிப் பழையபடி யவைகள் புதுப் பலத்தை யடைகின்றன. இவ்விதக் கருத்துக்களோடு உபவாசங்களை நமது முன்னோர்கள் ஏற்படுத்தி யிருக்க, தற்கால விரதானுஷ்டானிகள், அந்தோ! மிக்க விபரீத ஞான முடையவர்களாயிருக்கின்றனர். முதல் நா ளிரவு சாப்பிடப் புகும்பொழுதே 'நாளைய தினம் விரதம் உபவாச மிருக்கவேண்டுமே' யென்ற கவற்சி யுடையோராய்க் காலையில் பசியுண்டாகா திருக்க விலாப்புடைக்க அன்னத்தை யடைக்கின்றனர். காலையில் கொஞ்சமாகவே ஐந்தாறு வாழைப்பழம் அல்லது இரண்டு கோப்பை உப்புமாவும் ஒரு சொம்பு காபியும் அருந்துவது. பகலில் சம்பிரமமாகச் சாப்பாடானதும், இராத்திரிக்கு என்ன பலகாரஞ் செய்வது என்னும் எண்ணம் வந்துவிடுகின்றது. உடனே தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பலகாரம் சித்தமாகும். எப்போது இருட்டும் என் றெதிர்பார்த்திருந்து, இரா வந்ததும் வயிறாரப் புசிக்கிறது. இதுவோ உபவாசம்? இதை விட்டு என் சோறு தின்னலாகாது. இதெல்லாம் பலகாரத்திற் காசைப்பட்ட விரதமே. இத்தகைய விரதானுஷ்டானிகளைப் பார்த்தே நமது வேத நாயகம் பிள்ளையவர்கள்,

"பருகப்பசி யில்லாத போதுப வாசம்
பசித்தா லொருபானை பருக்கைக்கு நாசம்"

என்று வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். இனி கடைசியாக உபவாசத்தின் இரகசியார்த்தத்தை யாராயுமிடத்து, உபவாசம் என்பதற்கு, இரண்டு பொருள்கள் ஒன்றாய் வசிப்பது என்பது பொருள். இதன் பரியாய நாமங்களாகிய, ஒரு சந்தி, ஒரு பொழுது, முதலியவைகளும் இப்பொருள் படுதலை யுணர்க. ஜீவாத்ம பரமாத்துமங்களுடைய சமீப வாசமே உபவாசம். இதுவே வேதாந்தமாகிய உபநிஷத்துக்களின் கொள்கை. தவிர, "அன்ன மொடுங்கினால் ஐந்து மொடுங்கும்" என்னு மான்றோர் அமுத மொழிப்படி ஐம்புல வொடுக்கங் கூடுதலால் கடவுட்டியான மெளிதில் கைகூடி இஷ்ட சித்தியடைய ஹேதுவுண்டாகு மென்பதே



நமது முன்னோர்களது உபவாசத்தின் முக்கிய நோக்கமாகும். ஆகையால், சமயாபிமானிகளே! நீங்கள் நம் முன்னோர்களைப் போல அடிக்கடி உபவாசங்களை யனுஷ்டித்துக் கடவுளருளுக்குப் பாத்திரராவீர்களாக!

## பிள்ளையார் சுழி

புண்ணிய பூமியெனப் பல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப் பெறும் நம்மிந்திய தேசத்திலே, ஆஸ்திக சம்பந்த, சுபஹிருதய சன்மார்க்க மாந்தர்களும், சமயப் பற்றும் சைவாபிமானமும் நிறைந்து விளங்கும் சுத்தாத்துமாக்கள் பலரும், தங்களால் நிகழப் பெறும் ஆரண, உபநிடத, புராண முதலிய சகல ஞான, லௌகிக நூல்களிலும், திருமுறை, தஸ்தாவேஜு, செய்யுள், நிருபம் முதலிய யாவற்றிலும் "பிள்ளையார் சுழி" (உ) யைப் பயபக்தியுடன் எண்ணி நாட்டிய பின்னரே எழுதத் தொடங்குவதும், அல்லது குறிப்பிட்ட ஒரு வேலையை நடத்தத் தொடங்குவதும், பூர்வீகம் தொட்டு வழக்கமாக இருந்துகொண்டு வருகிறது. பிள்ளையார் சுழி என்பதற்கு "ஊமை எழுத்து" என்று ஆன்றோர் பொருள் கூறுவர். அதாவது பேசாத எழுத்து, சப்திக்குந் தன்மையில்லாதது. "வெட்டாத சத்திரம், பேசாத மந்திரம்" என்று பெரியோர்கள் கூறுவது மிதுவேயா மென்க. "பிள்ளையார் சுழி" என்பது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது மூத்த புதல்வராகிய விநாயகப் பெருமானைக் குறிக்கும் சுழி:—என்பதற்கு விந்து, குறி, புள்ளி, அடையாளம் என்பவை பொருள்கள். எனவே, பிள்ளையார் சுழி என்பதற்குச் "சகல காரியங்களுக்கு மிடையூறு வாராமல் தடுக்கும் விக்கின கர்த்தாவாகிய விநாயகப் பெருமானை முதன் முதல் நினைத்துக் குறிப்பிட்ட வேலையை யாரம்பித்தோம் அல்லது அவரைத் தொழுது கொண்டோம்" என்பதற் கறிகுறியாக முதன் முதல் பொறிக்கப்படுமோ ரடையாளம், மார்க்கு அல்லது குறியென்பதே பொருள். நமது முன்னோர்கள் ஏதேனுமொரு காரியத்தைத் தொடங்கி யாரம்பிக்குங்கால்,

"சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் தியாயே
சர்வ விக்னோப சாந்தயே"

என்று வாக்கினால் துதி செய்து தொழுவதும், தஸ்தாவேஜு, நிருபம், செய்யுள் முதலிய யாதாமொன்று தொடங்கி எழுதப் புகுங்கால், முன்னர் பிள்ளையார் சுழி இட்டுப் பின்னரே யெழுதுவதுமாகிய இவைகள் எடுத்துக்கொண்ட காரியம் எளிதில் விக்கினமின்றி முடியும் பொருட்டேயா மென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். விநாயகப் பெருமானை நினைத்துப் பின்றொடங்கிச் செய்யப்பெறுங் காரியம் எளிதில் விக்கினமின்றி நிறைவேறுமென்பது நம் முன்னோர்களின் கொள்கை. உண்மையு மதுவேயா மென்க.

இனி இச்சுழி நாட்டுவதின் காரணம் யாதென நிதானித்து ஆழ்ந்த கருத்தோடு ஆராயுமிடத்துப் பின் கண்ட இரகசியங்கள் வெளியாகின்றன. முதன் முதல் மாந்தர்களால் நினைக்கப் பெறும் விஷயாதிகளின் மூலமானது, ஒவ்வொருவருடைய இருதயத்திலும் விளங்கும் "அனாகதம்" என்ற ஆதார சக்தியின் வட்ட மலரிதழ்களில் உலவா நிற்கும் பிராண வாயுக்கள் ஒன்றுக்கொன்று வட்டமிட்டு உராய்ந்துகொள்ளுவதனால் உண்டாகும் சத்தமாகிய நாதத் தொனியோடு, ஐம்புலன்களினுஞ் சென்று பழகிய மனமானது கலப்பதினால் உண்டாகும் உணர்ச்சியால் நேர்வதாம். மேற்கண்ட ஆதார சக்தியானது தங்கப்பெறும் இடத்திற்கு "பிந்து" என்று பெயர். இச்சக்தியானது சில இதழ்கள் கொண்ட வட்ட வடிவமான ஓர் மலரென்றே தத்துவ நூல்கள் கூறுவதால், இது தங்கப்பெறும் மூலமான "பிந்து" வென்ற வஸ்துவும் வட்ட வடிவமானதே. ஆகவே இப்பிந்துவின் அடையாளம் "○"-இதுவாகும். இவ்வடையாளமே சகலத்திற்குங் காரணமாயிற்று. "பிரதமம் பிந்து ஸம்யுக்தம்—த்வீதியம் தண்டமுச்சதே" என்ற பிரமாணப்படி முதலிலே பிந்துவின் வடிவமும், இரண்டாவது தண்டம் என்ற "—" வடிவமும் குறிக்கவேண்டி யிருத்தலால், அவ்விரண்டும் "—○—" இவ்வடிவம் பெற்று நிற்கின்றன. இதனை வரிவடிவமா யெழுதுங் காலத்தில் இவ்வுருவம் அந்தரமாய் நிற்குமாதலால், அதற்குப் பீடம் ஒன்று அவசியம் வேண்டும். ஆகவே, அதன் கீழ் ஓர் ஆசனம் தந்து எழுதுவதே முறையென முற்காலத்தார் கொண்டெழுதி வந்தனராகையால் முடிவில் "உ" இக்குறி ஏற்பட்டு நிற்கின்றது. இதனையே நம் பெரியோர்கள் எழுதுங் காலத்தில் முதற்கண் வரையும் நியமம் பூண்டு, இன்றும் அவ்வழக்கம் நம்மவர்களிடைய இருந்து வருகின்றது. இது "பிள்ளையார் சுழி" தானென்பதற்குரிய மார்க்கம் யாதென வூன்றிப் பார்க்கும் போது பின் கண்டவாறு புலப்படுகிறது. அதாவது எவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கும் மாயையற்ற ஆதிமூர்த்தியாகிய நிர்மல விந்துரூப சக்தியே துஷ்ட நிக்கிரக இஷ்ட பரிபாலனார்த்தம், சிவபெருமானுக்குப் பிள்ளையாய்த் தோன்றித் தன் பூர்வ வடிவைப் புலப்படுத்தின தாகையால், அவ்வாறுதித்தவரைப் பிள்ளையாரென்றும், அவர் செயலாகிய செங்கோலும், அவர் வடிவமாகிய பிந்துவும், ஆகிய விரண்டுங் கூடியதைப் "பிள்ளையார் சுழி" என்றும் உலகினில் கூறும் வழக்கமாயிற்று என்பது உள்ளங்கை நெல்லி போல் நன்கு விளங்கக் கிடக்கின்றது. இப்பிள்ளையார் சக்தியின் பிரதாப வடிவமாறுதல்களைப் "பார்க்கவ புராணம்" என்ற விநாயக புராணத்தில் பரக்கக் காணலாம். ஆதி மூர்த்தியாகிய பரமசிவன் திரிபுர தகனம் செய்த காலத்துத் தேவர்களால் புனைந்து கொடுக்கப்பட்ட தேரின் உருளை, யச்சு முறிந்து விட்டதானது, அப்பெருமான் தன் காரியத்தை யாரம்பிக்கு முன் பிள்ளையாரைத் தியானிக்காத தப்பிதத்தினால் நேர்ந்ததென்று சுருதி வாயிலாய் நாம்

அறிவோமானால், முதற்கண் அப்பெருமானது வழிபாடின்றி ஒரு காரியத்தைச் செய்ய நம்மனம் எவ்வாறு சம்மதிக்கும்? இவரை வழிபடாத் தன்மையினால் எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானது செயலுக்கே ஒருவித முட்டுப்பாடு (தடை) ஏற்பட்டதென்றால் மும்மல வயப்பட்டு மாயையால் ஈடுபட்டழியும் மாந்தர்களாகிய நம்முடைய காரியங்களுக்கு எவ்வளவு தடை (இன்னல்) ஏற்படுமென்பதை நன்கு யோசித்துப் பாருங்கள். ஆகையால் சகோதர சகோதரிகளே! சைவாபிமானிகளே! நீங்கள் எடுத்துக்கொண்ட காரியமினிது முடியுமாறு உங்கள் மனோவாக்குக் காயங்களால் நம் விநாயகப் பெருமானைச் சிந்தித்து இத்தெய்வக் குறியைப் பதிவு செய்து எக்காலமு மின்பத்துடன் வாழ்வீர்களாக. விநாயகப் பெருமான் றுணை யுங்களுக்கு மென்மேலு முரித்தாகுக.

### பிறர் உடுத்திய உடைகளைச் சுத்தம் செய்யாமல் அப்படியே உபயோகித்தல் கூடாது.

இவ்விதியை நம் முன்னோர்கள் சர்வ ஜாக்கிரதையாய் நாளிது வரைக்கும் விடாமல் அனுஷ்டான முறையில் கையாண்டு வந்திருக்கிறார்கள். பிறர் உடுத்தியிருந்த உடைகளை யுடுத்தக் கூடாதென்று நமது மருத்துவ நூல்களெல்லாம் மிக்க பலமாகவும் அழுத்தமாகவுங் கண்டிக்கின்றன. நமது நாட்டு வைத்திய நிபுணர்களும், ஆங்கிலங் கற்றுப் பட்டதாரிகளாய் விளங்கும் டாக்டர்களும் இது விஷயத்தைக் கூடவே கூடாதென்று மறுக்கிறார்கள். பிறருடைய உடையை உடுத்துவதினால் தன்னுடைய சக்தி குன்றுவதுடன், அநேக வியாதிகளும் உண்டாகின்றன. ஒருவனுடைய தேகத்தைப்போல் இன்னொருவனுடைய தேகம் இருக்காது. சீதோஷ்ண நிலை வித்தியாசப்படும். ஒருவன் கெட்ட எண்ணமுடையவனா யிருக்கலாம். மற்றொருவன் நல்ல எண்ணமுடையவனா யிருக்கலாம். அவனவனுடைய எண்ணத்திற்குத் தக்கவாறு உடைகளில் வாசனை ஏற்படும். சிலர் மேல் தற்றுமை நாற்றம், கள் நாற்றம் முதலிய துர்க்கந்தங்கள் வீசுவதுண்டு. சிலர்மேல் சொறி சிரங்கு, படை, நமைச்சல், மேகத் தழும்பு முதலிய சர்ம வியாதிகள் இருப்பதுண்டு. சிலருக்கு நீரிழிவு முதலிய இந்திரிய வியாதிகளும் இருப்பதுண்டு. ஆகையால் அப்படிப்பட்டவர்களுடைய உடையை நாம் தெரியாமல் அணிந்துவிடுவோமானால், அவ்வாடைகளின் மூலமாய் அந்த நோய்கள் நம்மையும் பீடிக்கும் என்பதில் ஒரு சிறிது மையமில்லை. பிறகு அவன் பட்ட கஷ்டங்களும் இன்னல்களும் நாம் படும்படி நேரிடும். நம்முடைய ஆடைகளெல்லாம் பெரும்பாலும் பருத்தி நூலால் தயாரிக்கப்படுகின்றன வாதலாலும், பருத்தி நூலாடைகளின் மூலமாய் வியாதிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் சீக்கிரம் பரவுகின்றன வென்று வைத்திய சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றன ராதலாலும், ஒருவர் கட்டி யிருந்த ஆடையை எக்காரணங் கொண்டும் மற்றொருவர் கட்டவே கூடாது. அப்படிக் கட்டினால் அவரிடமுள்ள வியாதிகள் நமக்கும் உண்டாகுமென்பது திண்ணம். ஆகையால் நீங்கள் பிறருடைய உடை யணிவதைக் கனவிலுங் கருதாதீர்கள். அவைகளால் உங்களுக்கு இன்னலே தவிர நன்மைகள் யாதொன்றுமில்லை.

(தொடரும்.)

பழைய வழக்கமும் நல்லதா யிருக்கலாம்; புதிய வழக்கமும் தீயதா யிருக்கலாம். அல்லது புதியது நல்லதாயும் பழையது தீயதாயு மிருக்கலாம். பழையது அல்லது புதியது என்பதால் மட்டுமே ஒன்றை விரும்பிக் கைக்கொள்ளலோ, வெறுத்துக் கைவிடுதலோ கூடாது. எதையும் உள்ளூர ஆய்ந்த பின் நல்லதென்றோ தீயதென்றோ தீர்மானித்து அதனதன் தன்மைக்கேற்ப அனுஷ்டிக்கவோ விலக்கவோ வேண்டும். தீயதைத் தள்ள மனமில்லாமல் “ஐயோ! தலைமுறை தலைமுறையாக வந்த வழக்கமாயிற்றே எப்படி விடுவேன்!” என்று வாடாதே. நல்லதைக் கொள்ளப் பயந்து “அப்படா! நேற்றுப் பிறந்த வழக்கமாயிற்றே. அதை எப்படி என் வாழ்க்கையில் அடி வைக்க அனுமதிப்பேன் !” என்று அலறாதே.






## இன்பவல்லி

(கணவனுக்கேற்ற கற்பரசி)

[திருவாளர் சிறு. முனி. நடேச முதலியார் அவர்கள்]

அன்பாநந்தன் ஒரு வேந்தனிடத்தில் அமைச்சனா யிருந்தான். அவன் கூரிய அறிவுடையனாய், நல்லொழுக்கங்களுக்கு இருப்பிடமாய்ப் பெருமையோடு அடக்கமாய் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி இன்பவல்லி என்பவள். அவள் கணவனுக் கேற்றவளாய், கனிமொழி பேசுபவளாய், பிறர் வீடு புகாதவளாய், பிறர் முகம் பாராதவளாய், கணவன் சொற்படி ஒழுகி வந்தாள். அவர்கள் இருவரும் உயிரொன்றும் உடலிரண்டுமாய் உள்ளம் ஒருமித்து இன்ப வாழ்க்கை நடத்தி வந்தனர்.

இப்படி வாழ்ந்து வருகையில் ஒரு நாள் அரசன் அவர்கள் வீட்டு வழியே சவாரி செல்லுகையில் இன்பவல்லியைத் தற்செயலாய்க் காண நேரிட்டது. அரம்பையரைக் காட்டிலும் கட்டழ கமைந்த அவள் முகத்தைக் கண்டதும் அரசன் திடுக்கிட்டான். அவன் உள்ளம் அவளை நாடியது. செயலற்றுப் போனான். சற்று நேரத்தில் தெளிந்து இவ்வளவு அழகிய பெண்மணியும் நமது நாட்டில் இருக்கும் பெருமை பெற்றோமே என்று களித்து, அவள் யாவள் எனக் கேட்டுத் தெரிந்துகொண்டபின்பே அரண்மனை சேர்ந்தான். தன்னுடைய உள்ளத்தை அப்பெண்ணரசியின்பால் பறிகொடுத்து விட்டானாதலால் அன்றெல்லாம் அவன் ஊணும் உறக்கமும் கொள்ளாதவனாய்க் காமத்தீயால் கறுகி வாடினான். அவளை யடையவேண்டியதற்காகப் பல பல எண்ணங்கள் எண்ணினான். முடிவில் அவளை எப்படியேனும் அடைந்து கூடுவதே என்று தீர்மானித்துக்கொண்டான்.

மறுநாள் காலை அரசன் கொலுவுக்கு வந்ததும் அவ்வாண்டில் வரவேண்டிய திறைப் பணங்களெல்லாம் பாக்கி யில்லாமல் வசூலாயினவா வென்று கணக்காயரை வினவினான். அவர்கள் கணக்குகளைத் தணிக்கை செய்து ஒரு சிற்றரசனுடைய திறைப்பணம் மட்டில் அதுவரை வரவில்லை யென்றும் விடை பகர்ந்தார்கள். இதைக் கேட்ட அரசன் உள்ளத்தில் களித்து மேலுக்கு மிக சீற்றமுடையவன் போல் நடித்து அப்பணத்தை உடனே வசூலிக்க வேண்டுமென்றும், தவாறது வசூலிக்கத் தகுந்தவன் அன்பாநந்தனே யென்றும், அவன் சென்றால்தான் எளிதாய்ப் பெற்று வரலாமென்றும் மொழிந்து உடனே புறப்படும்படி கட்டளை யிட்டான். அன்பாநந்தனும் கட்டளையை மறுக்க முடியாதவனாய் ஒப்புக்கொண்டு விடைபெற்று வீடு சேர்ந்தான். அன்று பகல் உணவுண்டதும் மனைவி யிடத்தில் அரசனின் கட்டளைப்படி திறைப்பணம் வசூலிக்க வேற்றூருக்குப் போக நேரிட்டதைக் கூறித் தான் வரும்வரையில் கவலையின்றி யிருக்கும்படியும் விரைவில் திரும்பி விடுவதாகவும் தேருதல் மொழிந்து அன்று மாலையே வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

அன்பாநந்தன் எப்பொழுது வீட்டை விட்டுத் தொலைவானென்று எண்ணுது மெண்ணிக்கொண் டிருந்த அரசன் அவன் புறப்பட்டுவிட்ட செய்தி அறிந்ததும் அடங்கா மகிழ்ச்சி யடைந்து அப்பொழுதே அவளை அடைந்துவிட்டதாக இன்புற்று இரவை எதிர்பார்த்திருந்தான். சுமார் இரவு எட்டு மணியானதும் அன்பாநந்தனது வீட்டை யடைந்தான். அவனுடன் காப்பாளராய்ச் சென்ற வீரர்கள் உள்ளே சென்று அரசன் வரவை இன்பவல்லிக்கு அறிவித்தனர்.

அதைக் கேட்ட பெண்மணி "நம் கணவன் இல்லாத காலத்தில் இரவில் அரசன் நம்மில்லத்திற்கு வருமாறு என்ன நேரிட்டது?" என்று பலவாறு கவலையோடு எண்ணமிட்டுப் பின் வீட்டை நாடி வந்த அரசனை விசாரிக்காவிட்டால் குற்றமாகுமென்று கருதி உடனே வெளி வந்து அரசனை வணங்கி உள்ளேயழைத்துத் தக்க பீடத்தில் அமரும்படி வேண்டி, அவன் அமர்ந்த பின் அவன் எதிரே தூரத்தில் அடக்கத்தோடும் ஒடுங்கி நின்று அவனை நோக்கி, "வேந்தர் பெருமானே! தங்களுடைய வரவு நல்வரவாகட்டும்! நான் தங்களை தக்கவாறு வரவேற்கத் தவறி யிருக்கலாம். அதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். பெண்பாலாகிய என்னைப் பார்க்கிலும் எனது கணவர் இருந்திருப்பின் நன்றா யிருந்திருக்கும். தாங்கள் எங்கள் பால் இவ்வளவு அன்பு வைத்து இவ்வேழைக் குடிலுக்கு வரத்தக்க பேறு வாய்த்ததற்காக மகிழ்கிறேன். இந்நேரத்தில் தாங்கள் வர நேரிட்டதை உணரின் நாங்கள் என்ன தவறிழைத்து விட்டோமோ என்று அஞ்சுகிறேன்" என்று பண்ணையனைய உபசார மொழிகள் பகர்ந்தாள்.

இருக்கையி லிருந்த வண்ணம் அவளழகைக் கண்களால் வாரி உண்டு களித்திருக்கும் அரசன் அவளது குயிலினு மினிய குரல்வழி வந்த கனி மொழியாம் அமுதத்தைச் செவியார வுண்டு அடங்காக் களிப்புடையவனாய்க் காமக்கடலுள் முழுகிக் கரைகாணாது கலங்கி அப்பெண்மணியை நோக்கி, "என் உயிரே! உன்னை யன்றி நான் வரத்தக்க வேறு வேலையுண்டோ? உன்னை யடைவதன்றோ என்னுடைய பெரும்பேறு? என்னுயிர் உன்னையே அடைக்கலமாகக் கொண்டுவிட்டது. இனி உன்னை யணையாவிடின் நான் உயிர் வாழ முடியாது" என்று பிறர் மனைவியை நோக்கிக் கூறலாகாத மொழிகளை யெல்லாம் மொழிந்து அவளை தன் அரசி யென்றும் காதற் கனியென்றும் ஆசைக் கிளி யென்றும் வரம்பு மீறிய பல சொற்களை வாரி யிறைத்து அவளை யணுகி அவளது இணை யடிகளில் பணிந்தான். அவனுடைய தகாத செயல்களையும், அவன் அச்சமயம் அடைந்திருந்த நிலையையும், தன் கணவனில்லாத வேளையில் இராக்காலத்தில் தான் தனித்துச் சிக்கி யிருப்பதையும் அக்கற்பரசி கண்டு, "இவன் எண்ணத்துக்கு மாறான மொழிகளை இப்பொழுது கூறுவோமாயின் நம்மை எளிதில் விடான்; கற்பழிக்கவும் முயல்வான். இந்நிலைமையில் எதற்கும் அஞ்சான். அதனால் நாம் வீணே உயிர் துறக்க நேரும். நமது பிரிவாற்றாமையைக் கண்டு நமது கணவரும் மடிவார். அப்படி யாவதைக் காட்டிலும் இவனைத் தக்க சூழ்ச்சியால் நல்வழிப் படுத்தவேண்டும் இனியேனும் இவன் வேறு எந்தப் பெண்களையும் தொந்தரை செய்யாதபடி செய்யவேண்டும்" என்று உள்ளத்தில் நிர்மானித்துக்கொண்டு அவனை நோக்கி "அன்புடையவரே! தாங்கள் இவ்வடியாளை இச்சிக்கத் தக்க பேறு பெற்றதற்காக நான் மகிழ்ச்சி யடைகிறேன். தங்களைப் போன்ற அரசர்கள் பணியும் அழகுடையவளா வென்பது எனக்கே தெரியவில்லை. தங்களுடைய அழகுக்கும் அன்புக்கும் நான் எவ்வளவு? அப்படி யிருக்க, தாங்களே இன்று என்னை இச்சிக்கும்போது தங்களை யன்றி நான் வேறு யாரை அணைவது? இன்றல்லவோ நான் பெண்ணாகப் பிறந்த பயன்பெற்றேன்? தாங்கள் கவலையை விடுங்கள் தங்கள் கட்டளை யிப்படி யிருக்குமென்று அறிந்திருந்தால் நானே தங்களை அழைத்திருப்பேனே. இன்று என் துரதிர்ஷ்டத்தால் தங்களை அணைந்து மகிழ்ச்சியுறக் கொடுத்து வைக்கவில்லை. வீட்டுக்குப் புறம்பா யிருந்து இன்றுதான் தலை முழுக்காடினேன். நாளை இரவு இந்நேரத்துக்குத் தாங்கள் இங்கு எழுந்தருளுங்கள். நான் தங்கள் விருப்பத்தை முடிக்கத் தக்க நிலையில் இருப்பேன். தாங்கள் தான் என்னை ஆட்கொள்ள வேண்டும்" என்று இனிமையாக மொழிந்தாள். இதைச் செவியுற்ற அரசன் அவள் தனக்கு இணங்கி விட்டதாகவே மகிழ்ந்து. தன்னால் ஏது பிழை நேர்ந்திருந்தாலும் பொறுக்கும்படியும் நாளை இரவு வருவதாகவும் தன்னுடைய காதலைத் தணித்து உயிர் தரும்படியும் பன்முறையும் பலவாறு வேண்டிக்கொண்டு அங்கு நின்றும் அகன்றான்.

அரசன் அகன்றதன் பின் இன்பவல்லி அன்று தனக்கு நேரவிருந்த கேட்டையும், தன் கணவனில்லாமையையும், அரசனது தகாத எண்ணத்தையும், கடவுளருளால் தான் தப்பிய வகையையும் மறுநாள் புரிய வேண்டிய சூழ்ச்சியையும் எண்ணி எண்ணி அன்றிரவு முழுவதும் உறக்கமின்றிக் கவலையோடு கழித்துப் பொழுது புலர்ந்ததும் ஆட்களை விளித்துப் பலவகை வார்ப்புடையனவாயும் பல அளவுடையனவாயும் பலவகை நிறங்களுடையனவாயும் இருபது கண்ணாடிக் கிண்ணங்கள் வாங்கி வரும்படி கட்டளையிட்டாள். அன்று பகல் அரசனின் அரண்மனை யணுகி அந்தப்புரஞ் சென்று அரசன் மகளைக் கண்டாள். அமைச்சன் மனைவியைக் கண்ட அரசன் மகளும் அவளது வரவைக் கொண்டாடி அளவளாவி அங்கு வர நேர்ந்தது எதற்காக வென்று வினவினாள். இன்பவல்லி அரசன் மகளை நோக்கி "என் அரசியே! தங்களுக்கு என்மீது உண்மை யன்பிருக்குமானால் தாங்கள் விருந்துகளில் வரவேற்பதற்காக அணியும் தங்களது நல்லுடை ஒன்றை எனக்கு இன்று இரவு வரையில் இரவலாகத் தரவேண்டும். நாளை காலையில் தங்களிடம் சேர்த்துவிடுவேன். தாங்கள் என்மீது அன்பு கூர்ந்து ஏனென்று வினவாமல் துணை செய்யவேண்டும்" என்று அவள் உள்ளங் கனிந்துருகும்படி மொழிந்தாள். அரசன் மகளுக்குத் தன்னுடைய உடுப்பு அவளுக்கேன் என்று உள்ளக் கலக்க மெழுந்ததாயினும், அவள்மீதுள்ள அன்பினாலும் அவள் வினவ வேண்டாமென்று வேண்டிக்கொண்டிருப்பதாலும் யாதொன்றும் கேட்காமலே 'உன்விருப்படியே தருகிறேன் கொண்டு போ' வென்று உள்ளே சென்று தான் மிக்க விருப்பமாக உடுத்தும் உடையைக் கொண்டு வந்து கொடுத்து, "தோழி, நீ தகாத வழியில் செல்லுபவளல்ல வென்று எனக்கு நன்றாய்த் தெரியும். உனக்கு இதனால் தக்க துணை புரிந்ததாக ஏற்பட்டால் நான் மிக்க களிப்பெய்துவேன்" என்று கூறி விடை கொடுத்தாள்.

அரசன் மகளது உடுப்பைப் பெற்றுவந்த இன்பவல்லி அன்று மாலை தன் ஆட்களால் கொண்டு வரப்பட்ட கண்ணாடிக் கிண்ணங்களில் ஒரு வகை இனிப்பான பானத்தை நிரப்பி, கூடத்தில் ஒரு மேஜையின் மீது அவற்றை அழகாய்ப் பொருத்தி வைத்துவிட்டு, அரசன் வரும் வேளைக்கு ஒரு நாற்காலியில் அரசன் மகள் போலவே தோற்றும்படி உட்கார்ந்துகொண் டிருந்தாள்.

அரசன் 'இன்று நமது எண்ணம் கைகூடு'மென்று கருத்தி லெண்ணிக்கொண்டு பெருமகிழ்ச்சியோடு இன்பவல்லியின் வீட்டையடைந்து உள்ளே புகுந்தான். உட்சென்றதும் இன்பவல்லியைக் கண்டு தன் மகளெனவே எண்ணித் திகைத்துத் தன் மகள் அங்கு ஏன் வந்தாளென்று பெருங்கோபம் கொண்டானாயினும், அவளை இனிய மொழிகளால் வெளியேற்றிவிட்டுத் தன் எண்ணத்தை முற்றுவிக்க இன்பவல்லியைக் காணவேண்டுமென்று கருதி அவளைப் பார்த்து "மகளே! இந்த நேரத்திற்கு நீ ஏன் இவ்விடத்திற்கு வந்திருக்கிறாய்? உன் தாய் உன்னைக் காணாமல் வருந்துவாள். விரைவில் அரண்மனைக்குச் செல். நான் அமைச்சர் வந்துவிட்டாராவென்று அறிந்து விசாரித்துவிட்டு வருகிறேன்" என்றான். இன்பவல்லி உடனே எழுந்து தந்தையே! என் தோழி இங்கு வரவில்லையே! நான் இன்பவல்லி, தாங்கள் இந்த இருக்கையில் எழிந்தருளுங்கள். என் இன்னுயிர்க் கணவராகிய தங்கள் அன்புடைய அமைச்சர் இன்னும் வரக் காணேன். தங்கள் களைப்புத் தீர ஏழையாள் தயாரித்திருக்கும் இந்தப் பானங்களைச் சற்றே அருந்தும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" என்று இனிமையாக மொழிந்தாள்.

இருக்கையில் அமர்ந்தான் அரசன். உடனே இன்பவல்லி அக்கிண்ணங்களை ஒவ்வொன்றாயெடுத்து அரசனிடம் கொடுத்தாள்; அரசன் அவற்றைப் பருகினான். அவை யெல்லாம் ஒரே வகை இனிப்பாக இருப்பதை உணர்ந்தான். இது அவனுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. உள்ளம் நடுக்குற்றான். பிறகு அவள் தன் மகள்போல் உடுப்பணிந்து இருப்பதையும், மேஜையின்மீது கிண்ணங்கள் பலவகை வார்ப்புக்களுடனும் ஒன்றைப்போல் ஒன்று இல்லாமல் பலவகைப் பட்டனவாயும் பல நிறங்களுடனும் காணப்படுவதையும் எண்ணி, ஒன்றும் விளங்காதவனாய்க் காமத் தணலோடு வந்தவன் அத்தணலணைந்து பலவாறு கலக்க மெய்தி, அவளை நோக்கிப் "பெண்ணே! நீ என் மகள்போல் உடுப்பணிந்திருப்பதும், இக்கிண்ணங்கள் பலவகையாய் வார்ப்பிடப்பட்டும் பல அளவுகளை யுடையவையாயும் இருப்பினும் ஒரே இனிப்புடைய பானத்தால் நிரப்பப்பட்டிருப்பதும், நீ என்னைத் தந்தை என்றழைத்ததும் எனக்கு விளங்கவில்லை. நீயே விளக்க வேண்டும்" என்றான்.

அவன் உள்ளம் தடுமாறியதையும் முகம் வாட்ட முற்றதையும் வாய் குழறிப் பேசியதையும் கண்ட இன்பவல்லி இனி, அவனால் தனக்கு யாதொரு கெடுதியும் நேராதென்றும், தன் சொற்படி நடப்பான் என்றும் திடமுற்று அவனை நோக்கித் "தந்தையே! தங்களுக்கு இவை விளங்கி யிருக்காதென்று நான் நினைக்கவே மாட்டேன். தங்கள் அறிவுக்கு நான் எம்மட்டு? ஆயினும் தாங்கள் என் வாய்மொழியாகவே கேட்க விரும்புகிறீர்களென்று கருதுகிறேன். என்

சிற்றறிவுக்கெட்டிய வரையில் விளக்குகிறேன். பிழையிருப்பின் பொறுக்க வேண்டுகிறேன்.” என்று அவன் அடிகளில் விழுந்து வணங்கி எழுந்து “தாங்கள் நேற்றிரவு முடிவில் என்னிடம் விடைபெற்றுப் போகும்போது ‘நாளை என் உள்ளங் களிப்பிப்பாய்’ என்று கூறிப் போனீர்கள். கட்டளையின்படி தங்கள் உள்ளத்தைக் களிக்கச்செய்ய எது தக்கது என்று நேற்றிரவு முழுதும் யோசித்தேன். அதன் பயனாக தாங்கள் தங்கள் அருங்குமரியைக் கண்டு களிப்பதில் என்றும் பேரவா உடையீர்கள் என்பது எனது நினைவுக்கு வந்தது. அதிலும் தங்கள் மகள் விருப்பமாய் அணியும் இவ்வுடுப்பு தாங்களே நேரில் வாங்கித் தந்தது என்பதும் நான் அறிவேன். ஆகவே, தங்களைக் களிப்பிக்க எனக்கு எளிதாய்விட்டதென்று அகமகிழ்ந்து என் தோழியாகிய தங்கள் மகளிடமிருந்து அதைப் பெற்று வந்து அணிந்து கொண்டேன். இக்கிண்ணங்கள் பலவகையாயும் பல நிறமாயும் இருப்பது பெண்கள் பல வடிவுடனும் பல வயதுடனும் பல நிறங்களுடனும் இருப்பதைக் குறிக்கும்; இனிப்பு ஒன்றாயிருப்பது பெண்கள் எல்லாரிடத்தும் ஒரே இன்பந்தான் உண்டு என்னும் உண்மையைக் குறிக்கும். ஆகவே, உலகத்தில் எல்லாப் பெண்களும் வடிவத்தில் வேறுபட்டாலும் ஒரே இன்ப முடையவர்கள்தா மென்பதும், வடிவத்தைக் கண்டு பல பெண்களை யணைவதால் மட்டும் வேறு வேறு இன்பத்தை அடைவது எள்ளத்தனையும் இல்லை யென்பதும், தவறாக எண்ணுவது அறியாமையேயென்பதும் தெளிவாக விளக்கமாகின்றன. நான் தங்களைத் தந்தையே என்றது முற்றும் தகுதியே. எப்படியெனில், தாங்கள் என்னைக் கண்ணுற்றதும் உள்ளன்போடு ‘மகளே!’ என்று விளித்தீர்கள். இதனால் தாங்கள் மனமொழி மெய்களால் என்னை மகளாகக் கொண்டுவிட்டீர்கள். மனத்தால் நினைத்தீர்கள், மொழியால் மொழிந்தீர்கள். இனி மெய்யால் (உடலால்) தொடவில்லையே யெனின், பெற்ற மகளானாலும், உற்ற உடன் பிறந்தாளானாலும் ஆடவர் பெண்மக்களைக் குழந்தைப் பருவம் வரையில் மட்டுமே தீண்டவும் எடுக்கவும் அணைத்து உச்சி மோந்து உவகை கொள்ளவும் தகும்; பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் பெண் குழந்தைகளோடு அதிகம் நெருங்கிப் பழக மாட்டார்கள்; பருவம் வந்தெய்தி விட்டதாயின் அருகில் நெருங்கவும் செய்யார்கள்; வீணில் அடிக்கடி அவர்களோடு உரையாடவும் மாட்டார்கள். இது இந்தியராகிய நமது தொன்று தொட்ட அறநெறியாகும். பெற்ற மகளைக் காட்டிலும் வளர்த்த மகள் மேல் மிக்க அன்பு என்று சொல்வது வழக்கம். தங்கள் சோற்றை உண்டு வளரும் என்மீது தங்களுக்கு மிக்க அன்பு உண்டு என்பதில் என்ன தடை? ‘மகளே’ என்று தாங்கள் உள்ளன்போடு அழைத்தபோது தங்கள் உள்ளங் குளிரத் ‘தந்தையே’ என்று விடை பகர்ந்தது பொருத்தமே யல்லவா? அப்படியில்லையானால் என்னுடைய மகள் கடமையைத் தவறியதாகவன்றோ ஆகும். இப்பானத்தைத் தயாரித்து வைத்தது மகளே என்றவாய்க்கு அமுதமூட்டுவது கடமையென்றறிந்தே” னென்று இன்மொழிகளால் உரைத்தனள்.

இவற்றையெல்லாம் கேட்ட மன்னனின் உள்ளம் குழைந்து ஒரே நிலை யடைந்துவிட்டது. ‘இவளுரைகள் இன்னுங் கிடைக்குமோ’ வென் றெண்ணினன். ‘இவள் மக்கள் பிறப்புத்தானோ? அல்லது சரஸ்வதியே இவ்வடிவமாய் வந்தாளோ?’ என வியந்தான். ‘இவ்வளவு அறநெறிகளை எங்கு எப்படிக் கற்றாள்? இவள் அறிவின் கூர்மைதான் என்னே’ என்று விம்மிதங்கொண்டான். தன்னுடைய அறியாமையை நொந்தான்; தான் முன்னாள் கூறிய தகாத மொழிகளையெல்லாம் எண்ணினான்; ‘என்ன சபித்தாளோ’ என்று கலங்கினான்; ‘இப்படிப்பட்ட கற்பரசிக்கு என்ன தீங்கிழைக்க எண்ணினேன்’ என்று கவன்றான். ‘இதற்குத் தக்க பரிகாரம் யாது? என்று சற்று நேரம் சிந்தித்தான். உடனே எழுந்து அவளது அடிகளில் நிலந்தோய அடியுற்ற மரம்போல் வீழ்ந்தான்; தன் குற்றம் பொறுத்து மன்னிக்குமாறு வேண்டினான். இன்பவல்லி அவன் நன்னிலையெய்தினன் என்று திடமுற்று மகிழ்ந்து அவனை வாழ்த்தி எழுந்திருக்க வேண்டினாள். எழுந்து வாய் பொத்திக்கொண்டு அவளெதிரில் ஒரு அடிமைபோலவும் மகவைப் போலவும் பணிவுடன் நின்று, “அம்மணி! நான் உன்னை மகளாகக் கொள்ளும்படி விரும்பினாய்; அப்படி யன்று, நீ என்னை மகனாகக் கொள்வதே முறை. நீயே எனக்குத் தாய்; நீயே எனக்குத் தந்தை; நீயே எனக்கு நல்லாசிரியன்; நீயே எனக்குக் கடவுளும் ஆயினாய். உன்னை நான் மக்கட் பிறப்பாகக் கருதவில்லை; என்னை ஆட்கொள்ள எழுந்த ஓர் பெண் தெய்வமே யெனப் போற்றுகின்றேன். இஃ



# அறிவியல் பகுதி

## பூமி சாஸ்திரம்

(முன் தொடர்ச்சி)

(மு. த. வேலாயுதம் அவர்கள், வின்லங், சைகோன்)

### நான்காவது : உப்புக் கற்பாறை

இவ்வினம் இரு வகைப்படும். ஒன்று ஜிப்சம் (Gypsum) என்னும் உப்புக்கல். மற்றொன்று கடல் உப்பு. ஜிப்சம் என்னும் கல்லில் பளிங்கு போன்ற வஸ்து கலந்திருக்கிறது. ஜலத்தில் போட்டால் அது அவ்வளவு சுலபத்தில் கரைந்து போகாது. இக்கல்லின் சத்து சேர்ந்திருக்கும் ஜலம் சுத்தமானதல்ல. இத் தண்ணீரைக் கொண்டு பதார்த்தங்களை நன்றாய் வேகவைக்க முடியாது. சவர்க்காரத்தையும் இத் தண்ணீரைக் கொண்டு கரைக்க முடியாது. இந்தக் கல்லை 120 டிக்ரி உஷ்ணத்துடன் வேகவைத்தால் கதகதவென்று கொதிக்கும் சப்தம் கேட்கும். பின் அக்கல்லில் இருக்கும் தண்ணீர் சுத்தமாக அற்றுப்போம். தண்ணீர் நீங்கினால் அக்கல் துல்லிய வெண்மை நிறமாகும். பின்பு இதைப் பஸ்பமாக நொறுக்கலாம். இதற்கே ஆங்கிலத்தில் பிளாஸ்டர் (Plaster) என்று பெயர். பஸ்பமாக்கிய மாவைக் குழைத்து அச்சுகள் செய்யலாம். இதைக் கொண்டு சுவர்களுக்கு வெள்ளை அடிப்பதும் உண்டு. இன்னும் வச்சிரப் பசையுடன் இம்மாவைக் கலந்து சுவர்களில் சாந்து அடித்தால் சுவர் சலவைக் கல்போல் மிகவும் பளபளப்பாய் இருக்கும்.

2-வது இனம்-கடல் உப்பு : கடல் உப்பை அறியாதாரிலர். சமையலுக்கு ஒவ்வொருவரும் உப்பை உபயோகப்படுத்துகிறோம். உப்பு சுலபத்தில் கரைந்துபோகக்கூடிய வஸ்து. ஆகையினால்தான் உப்பைத் தண்ணீர் தாக்காமல் படிக்குச் சுற்றிலும் களிமண் போட்டு அணைகட்டிக் காபந்து பண்ணுவார்கள். களிமண் அணையின்றேல் உப்பு கரைந்து போகும். உப்பு பளபளப்பாகவும்,

(284-வது பக்கத் தொடர்ச்சி)

துண்மை. நீ என்னிட மின்று மொழிந்தவற்றை எல்லாம் மறைமொழியாகப் போற்றுவேன். அவை என் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்துவிட்டன. இனி அவற்றைப் பிறரால் எதனாலும் பிடுங்கவே முடியாது. அவை என் உள்ளத்திருந்த கழுமலம்எல்லாம் அறக் களைந்து இன்ப ஊற்றைத் திறந்துவிட்டன. இன்றே நான் புனிதனானேன். உன் திருவடிகளே எனக்குச் சரண். அவற்றை என்றும் நான் மறக்கமுடியாது. அவையே நான் இதுகாறும் இழைத்துவிட்ட துன்பக் கடலினின்றும் என்னைக் கரையேற்றத் தக்க புணையாகும். அறியாமற் செய்ய நினைத்த என்னுடைய பிழைகளை மன்னிக்கும்படி மன்றாடுகிறேன்” என்றான்.

அரசனது மனமாற்றத்தையும் அவன் தன் பிழை யுணர்ந்து வருந்தியதையும் கண்ட இன்பவல்லி உவகை பூத்தவளாகிப் பல நன்மொழிகளால் அவனைத் தேற்றினாள். உடனே அவன் அங்கு நின்றும் வெளிப்பட்டு அரண்மனை யடைந்தான். முன்போல் இல்லாமல் நாளுக்கு நாள் ஒழுக்கங்களில் சிறந்து மேன்மை யெய்தினான்.

அமைச்சனும் அடுத்த சில நாட்களுக்குள் திறைப்பணத்தோடு திரும்பினான். அரசன் அவனைக் கண்டு களித்து அவன் மனைவியிடம் தான் நடந்துகொண்ட முறை தவறிய செய்கையையும் இன்பவல்லி தன்னைத் திருத்தியதையும் அவனிடம் மொழிந்து, ‘அவளை மனைவியாகக் கொண்ட நீயே மக்களுட் சிறந்தவ’னென்று புகழ்ந்து இனி அவனே தன் உயிர் நட்பினனாகவும் முதன் மந்திரியாகவும் இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினான். அமைச்சனும் அங்ஙனமே ஒத்துக்கொண்டு தன் இல்லம் அடைந்து மனைவியைக் கண்டு நிகழ்ந்தவைகளை அறிந்து அவளுடைய அறிவுக்கும் கற்பின் உறுதிக்கும் அவளைப் பாராட்டி அளவிலா மகிழ்ச்சி யடைந்தான். சதிபதிக ளிருவரும் முன்னிலும் பன்மடங்கு அன்பு பூண்டிருந்தனர். அரசனும் அவர்களை முன்னையிலும் மேலாக மதித்து அளவற்ற செல்வங்களை யளித்துப் போற்றி வந்தான்.

செம்மை நிறமாகவும், ரோஸ் நிறமாகவும், பச்சை நிறமாகவும், கப்பு நிறமாகவும் காணப்படும். இவ்வாறு பல நிறங்களாய்க் காணப்படுவதின் காரணம் அதிலுள்ள அசுத்தங்களே. உப்பு பூமிக்குள் மலைபோல் இருப்பதும் உண்டு. இதற்கு உப்புமலை என்று பெயர். உப்பு பூமிக்குள் இருப்பதை எவ்வாறு தெரிந்துகொள்ளுவதெனின் மேற்படி மலையிருக்கும் பூமியின் மேல் மட்டத்திலிருந்து புறப்படும் ஊற்றுத் தண்ணீரால் கண்டறியலாம். இத்தண்ணீர் உப்பு கரிக்கும். உப்பு இருவகையாய் எடுக்கப்படும். கடல் தண்ணீரை இறைத்துப் பாத்திகள் கட்டிச் சூரிய வெப்பத்தால் உலர்ந்த பின் உப்பை எடுக்கிறார்கள். இன்னும் சுரங்கத்தில் இருந்து உலோகங்கள் எடுப்பது போல் பூமியை வளைவாகத் தோண்டிப் படிகள் இறக்கி உப்பு எடுப்பதும் உண்டு. உப்பு மலைகள், லொர்ரேன், ஜெர்மனி, போலண்டு, அல்ஜரி, ஸ்பெயின் முதலிய நாடுகளில் உண்டு.

உற்பத்தி:—உப்புத் தண்ணீரை ஓர் அகண்ட பாத்திரத்தில் வார்த்து வைப்போமானால் சில தினங்களுக்குள் அப்பாத்திரத்தில் பளிங்கு போன்ற உப்பு இருப்பதைக் காணலாம். கடல் தண்ணீரில், ஜிப்சம், குளோரின் சோடியம், பொட்டாசியம் முதலிய பலவித உப்புகளின் சாரம் கலந்திருக்கிறது. ஒரு லீட்டர் கடல் தண்ணீரில் 1 கிராம் 4 (184) ஜிப்சமும், 28 கிராம் குளோரீன் சோடியமும் மற்ற பொட்டாசியம் முதலிய உப்புகளின் சாரமும் கரைந்திருக்கின்றன. ஒரு லீட்டர் கடல் தண்ணீரில் 20 கிராம் உப்பு எடுக்கலாம். கடல் தண்ணீரைப் பாத்திகள் கட்டி விட்டோமானால், வெகு சுலபத்தில் ஜலம் ஆவி ரூபமடையும். அப்பொழுது, பாத்தியின் அடியில் வண்டல்கள் தங்கி நிற்கும். இதற்குப் பின்னரே நாம் சமையலுக்கு உபயோகிக்கும் உப்பு தங்கி நிற்கிறது. என் முதலில் ஜிப்சம் என்னும் உப்பு தங்கி நிற்கிறதென்றால், கடல் உப்பைவிட ஜிப்சம் என்னும் உப்பு அவ்வளவு சுலபத்தில் கரையாத வஸ்து வாகையால், இயற்கையின் தத்துவத்தை நோக்க, அங்ஙனம் நிற்க இடம் உண்டு. பொட்டாஷ் என்னும் உப்பும் தங்கி நிற்பது உண்டு. இந்த உப்பைக் கொண்டுதான் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு எருவிட்டுப் பயிர் செய்கிறார்கள்.

சில நிலங்களில் எப்பொழுதும் உப்பின் சாரம் நிறைந்திருக்கும். அந்நிலங்களில் பார்வைக்குப் பளிங்கு பொடிகளாலுண்டாவது போன்று வெண்மையான பிரகாசமிருக்கும். அத்தகையநிலங்களில் மேற்கண்ட ஜிப்சம் என்னும் உப்பும், சமையலுக்கு உபயோகப்படுத்தும் கடல் உப்பும் கலந்திருக்கும். அத்தகைய நிலங்களைக் களர் நிலம் எனச் சொல்லுவதுண்டு.

ஒஷியான் மகா சமுத்திரக் கரை ஓரங்களிலும் மெடிட்டரேனியன் கரை ஓரத்திலும் அதிக விசாலமான தொட்டிகள் கற்களினால் கட்டி, அதில் கடல் தண்ணீரைப் பாய்ச்சுகிறார்கள். சூரிய வெப்பத்தினால் தண்ணீர் ஆவி ரூப மடைகின்றது. அப்பொழுது தொட்டிகளில் உப்பு படிந்து நிற்கிறது. பின்னரே உப்பை இரும்பு ஆயுதங்களைக் கொண்டு கட்டிகளாக உடைத்து எடுப்பார்கள். அதற்குப் பின்னரே சமையலுக்கு உபயோகிக்க உப்பைச் சுத்தம் செய்வார்கள்.

உபயோகம்: உப்பு சமையலுக்கு மிகவும் இன்றியமையாதது. ஜீரண சக்திக்கு ஏற்றது. எலும்புகளுக்கு மிகவும் உறுதியை அளிக்கவல்லது; உடலுக்குள் இருக்கும் பல அசுத்தங்களையும் பற்பலவாற்றானும் வெளியே கழிக்கும் ஆற்றலுள்ளது. இரசாயன முறையால் பார்க்கப்புகின், உப்பு அநேக வகைப்படும். கடல் ஓரங்களில் எடுக்கப்படும் அல்லது செய்யப்படும் உப்பைப் பற்றி வெகு ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். ஏன் எனில், முற்கூறிய உப்பில் சமையலுக்கேற்ற உப்பேயன்றி ஏனைய உப்பு வகைகளுங் கலந்திருக்கின்றன. சென்ற ஆண்டு, மகாத்மா காந்தியார் உப்புப் போர் தொடங்கிய காலத்தில் தொண்டர்கள் எடுக்கப்படும் உப்பால் நோயணுகுகிறது; அஜீரணம் ஏற்படுகிறது; உப்பை எடுக்கும் முறை வேறு என உப்பு இலாக்கா அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையை வாசகர்கள் கண்டிருக்கலாம். இரசாயன முறையில் அஃது மிகவும் உண்மையே. நாம் முன்னரே கடல் தண்ணீரில் ஜிப்சம் என்னும் உப்பு, சமையல் உப்பு, மற்றும் ஏனைய உப்புகள் கலந்திருக்கின்றனவெனப் பார்த்தோம். அவற்றில் ஜிப்சம் என்னும் உப்பு அஜீரணத்தை உண்டாக்கவல்லது.

உப்பு மனிதர்களுக்கு எவ்வளவு உபயோகப்படுகிறதோ அவ்வளவும் மிருகங்களுக்கும் தாவர வர்க்கங்களுக்கும் மிகவும் பிரயோஜன முள்ளது. இப்பொழுதும் மேனாட்டார்கள் மாட்டுக் கொட்டகையில் ஒரு கட்டி உப்பை இரும்பு சங்கிலியைக் கொண்டு கட்டித் தொங்கவிடுவதுண்டு. மிருகங்கள் வேண்டியபோது உப்பை நாக்கினால் நக்கிக் கொள்ளும். சாதாரணமாய்த் தாவர வர்க்கங்களுக்கு உப்பு மிகவும் அத்தியாவசியம். இன்றேல் தாவர வர்க்கங்கள் நன்றாய்ச் செழிப்படையா. பயிரிடுவதற்கு முன்னரே, உப்பு சேர்ப்பான் வேண்டி, விவசாயிகள் பொட்டாசியம் சேல்ட் என்னும் எருவை வாங்கித் தங்கள் நிலங்களில் போடுவதைக் காணலாம். ஆனால் நிலங்களின் தன்மையை உணர்ந்து எரு போடுவதுதான் நல்லது.

மனிதனுக்கு உப்பு மிகவும் இன்றியமையாத பதார்த்தமாகும். "உப்பில்லா பண்டம் குப்பையிலே" என்பதை ஈண்டு நோக்குதல் நலனுடைத்தாம். மனிதனுக்கு வேண்டிய அறுவகைப் பதார்த்தங்களில் உப்பும் ஒன்று. அறுவகைப் பதார்த்தங்களாவன:—

முதலாவது : தண்ணீர்

இரண்டாவது : ரொட்டி, உருளைக்கிழங்கு, அரிசி முதலிய சத்துள்ள பதார்த்தங்கள்.

இதன் தொடர்ச்சியை 292-ம் பக்கத்தில் பார்க்க.






## குன்றைக் கூழாங்கல் லாக்கினேன்

(திரு. அ. கு. ம. சே. சோ. செட்டியார்)

"அப்பா......டா" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். "ஏன் அப்பா அவ்வளவு அலுப்பு? என்ன அவ்வளவு கடினமான வேலை" என்கிறீரா? பக்கத்துத் தெருவில் ஒரு கலியாணத்திற்குப் போய் வந்தேன். "இதற்கா இவ்வளவு ஆயாசம்! மலையைத் தூக்கி வந்தவன்போல் அலுத்துப் பேசுகிறாயே!" என்று நகைப்பீர்கள். என்னை நேரிற் பார்த்திருந்தா லல்லவோ தெரியும்? எழுந்து நடப்பதென்றால் ஒரு தசை மலையைத்தான் தூக்கிச் செல்ல வேண்டும். எழுந்திருப்பது ஒரு பிரமப் பிரயத்தனம்; எழுந்துவிட்டால் உட்காருவதொரு பகீரதப் பிரயத்தனம். கையைத் தூக்குவதும் கஷ்டம்; தலையை அசைப்பதும் கஷ்டம். குனிந்து பார்ப்பதோ, எப்படி யிருக்குமென்றே தெரியாது. இந்த நிலையில் பக்கத்துத் தெருவுக்குச் சென்று வருவதென்றால் இலேசா யிருக்கிறதா? எனக்கென்று தனியாகத் தயாரித்த வண்டியில்தானேறிச் சென்றேன். இருந்தாலும், ஏறவேண்டாவா? இறங்க வேண்டாவா? நல்ல வேளையாகக் கடவுள் எனக்குக் கொஞ்சம் பணம் கொடுத்திருக்கிறார். அதனால் தான் கை கால்களைத் தூக்கவும், போஜனம் ஊட்டவும், மற்றச் சௌகரியங்களைச் செய்யவும் ஆட்கள் வைத்துக்கொள்ள முடிந்தது. இல்லாவிட்டால் என் கதி அதோகதிதான்.

இவ்வளவோடு முடிந்ததா என் கஷ்டம்? சிறிது தூரம் நடந்தால் வழியில் போகிறவர்கள் கண்ணெல்லாம் என்மேல்தான். "ஐயோ பாவம்!" என்பானொருவன். "ஏனோ இப்படிப் பெருத்து விட்டார்!" என்பான் மற்றொருவன். "கபடற்றுப் பருத்து விட்டார்" என்பான் பின்னொருவன். சிறு பையன்களோ, சொல்ல வேண்டியதில்லை. "குதிர் போகிறது; மலை யசைகிறது; யானைக் குட்டி நகருகிறது" என்றெல்லாம் பரிகசிப்பார்கள். "எந்தக் கடையில் அரிசி வாங்குகிறாரோ தெரியவில்லை" என்று சொல்லிவிட்டுக் கொல்லென்று சிரிப்பார்கள். ஐயோ! என் மனைவியுங் கூட வெறுப்புடன் எள்ளி நகையாட ஆரம்பித்தாள்.

இந்தத் தொல்லையை எப்படி ஒழிப்பது? மெல்லிய தேக முடையவர்களைக் கண்டால், அவர்கள் சுலபமாக ஓடி யாடுவதைக் கண்டால், என் மனம் பொறாமையால் துடிதுடிக்கும். "பணமெல்லாம் போனாலும் தேகம் இளைத்தால் போதுமே" என்ற பேராசை கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டேன். ஒரு எம். பி. பி. எஸ். அல்ல; ஒரு எம். டி. அல்ல. சித்த வைத்தியமல்ல; யுநானி வைத்தியமல்ல; ஆயுர்வேதமல்ல. எல்லாம் பயனற்றன. சனடோஜனும், சிட்டுக்குருவி லேகியமும், அயக்காந்த திராவகமும் கொடுத்துக் கொழுக்க வைக்கத் தெரியுமே யொழிய ஊளைச் சதையைக் கரைக்க எவரும் அறியார்போ லிருக்கிறது.

கடைசியில் ஒரு புண்ணியவான் அகப்பட்டார். "ஏனோ பாபம் வீண் செலவு! இதற்கெல்லாம் மருந்தென் செயும்? எதற்குத்தான் மருந்தென் செயும்? இயற்கை வழி தவறி வாழ்ந்தால் இப்படித்தான் இயற்கை யன்னை தண்டிப்பாள்." என்றார். இயற்கையும், செயற்கையும்! இதெல்லாம் யாருக்குத் தெரியும்? இந்தப் பிரசங்கம் என் சதையைக் கரைக்குமா? "ஐயா வழியைச் சீக்கிரம் சொல்லுங்களேன்" என்றேன். "வழியைத்தான் சொல்கின்றேன். கோபித்துக்கொள்ளாமல் என் கேள்விகளுக்கெல்லாம் சற்றுப் பதில் சொல்லும் என்றார்.

"சுமாராகப் பணம் இருக்கிறதா?"

"நிரம்பத்தான் இருக்கிறது. வழி சொன்னால் ஆயிரக் கணக்கிலும் கொடுக்கிறேன்"

"இருக்கட்டும்; எனக்கு வேண்டா. சாதாரணமாகச் சாப்பிடுவது எப்படிப்பட்ட உணவு?"

"அதற்கொன்றும் குறைவில்லை. நல்ல பதார்த்தங்கள்தான்; நெய்தான்; பால்தான்; தயிர்தான்."

"ஓஹோ! வேறு ஏதாவது சிற்றுண்டி உண்டா?"

"காலையிலும் மாலையிலும் மட்டும் உண்டு."

"வயிற்றுச் சமாசாரம் அவ்வளவோடாவது நிற்குமா?"

"வேறொன்றுங் கிடையாது; சாக்கலெட்டுகள் மட்டும் அடிக்கடி தின்பேன்."

இதைக் கேட்டவுடனே அவர் திடுக்கிட்டுப் போனார். "போராக் குறைக்குப் பொன்னியம்மன் குறையா? அதுவும் உண்டா? தினம் எவ்வளவு சாக்கலெட் தின்பீர்?" என்றார். "இரண்டு டப்பிகளுக்குமே லில்லை. நூற்றைம்பது; அதிகப்பட்டால் இருநூறுதான் தின்பேன்" என்றேன்.

இதெல்லாம் அவருக்கு வேடிக்கையா யிருந்தது. "ஐயா, செய்வதெல்லாம் அக்கிரமம். கொழுத்த திண்டி. ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. சாப்பாட்டைக் குறைக்க வேண்டும். நெய், பாலெல்லாம் விலகவேண்டும்" என்றார். அரைமனதாகவே "சரி" யென்றேன்.

"அது மட்டும் போதாது; சாக்கலெட் தின்னும் வழக்கத்தை அடியோடு விட்டுவிட வேண்டும்."

ஐயோ, அதை எப்படி விடுவேன்? 5 நிமிஷங்கட்கொரு தடவையாவது ஒரு சாக்கலெட் இல்லாது என்றால் இருக்க முடியாதே. என்ன ருசி! என்ன மணம்! எவ்வளவு இனிப்பு! கருணையோடு அதைத் தயார் செய்தனுப்பும் மேல் நாட்டாரைப் போற்றிக்கொண் டல்லவோ இருந்தேன். அவ்வளவு ருசியான ஒரு பண்டமும் நீங்கிழைக்குமா? வேறு விதியில்லை: 'உம்' என்றும் சொல்லவில்லை, 'மாட்டேன்'னென்றும் சொல்லவில்லை. வாயைத் திறக்கா திருந்துவிட்டேன்.

"என்ன சோமு செட்டியார்! கஷ்டமா யிருக்கிறது போலும். அது கிடக்கட்டும், வேலை ஏதாவதுண்டா?

"தினம் ஐந்தாறு தடவைக்கு மேலும் கையெழுத்துப் போடுவேன். மிகவும் கஷ்டம்."

"நல்ல வேலை! மிருகங்கள் வாழ்க்கையைப் பார்த்திருக்கிறீரா? எந்த மிருகமாவது அளவுக்கு மிஞ்சிப் பருத்து அவஸ்தைப் படுகிறதா? ஏன்? அவைகள் ஒரு நாளும் அளவுக்கு மிஞ்சியும் தின்பதில்லை; இயற்கைக்கு விரோதமான பொருள்களையும் உண்பதில்லை"

"சரி, கொழுப்புச் சத்துள்ள சாப்பாட்டை நீக்கி, சாக்கலெட்டையும் கொஞ்சம் விலக்கினால் கஷ்டம் தீருமா?"

"போதாது. மிருகங்கள் தின்பதோடு மட்டும் நிற்கின்றனவா? ஏதாவது ஒரு வழியில் ஓயாது உழைத்துக்கொண் டிருக்கின்றன. அதனால்தான் அவைகள் தேக திடமாக இருக்கின்றன. உமது தேகத்தில் சரியான திட மிருக்கிறதா? ஐயா, கையெழுத்துப் போடுவது ஒரு வேலையாகுமா? உடம்பையும் உறுப்புக்களையும் அசைத்து வேலை செய்ய வேண்டாவா?"

இதை யெல்லாம் கேட்டேன். ஒன்றும் செய்யக் கூடிய காரியமா யில்லை. சாப்பாட்டைக் குறைக்க வேண்டுமாம். எனக்கு உயிர் தருவதுபோன்ற ருசியான சாக்கலெட்டைத் தொடக் கூடாதாம். அவற்றோடுகூட உடம்பை அசைக்க வேண்டுமாம்; உழைக்க வேண்டுமாம். ஒரு பக்கம் வெறுப்பு; ஒரு பக்கம் கவலை. "ஐயா, வேறு வழியே யில்லையா?" என்றேன். "வேறொன்றும் பலிக்காது" என்றார். சரியென்று அதிருப்தியோடு விடை பெற்றுக்கொண்டேன்.

சில நாட்கள் யோசித்தேன். கஷ்டமோ பொறுக்க முடியவில்லை. சித்திரை மாதமும் பிறந்துவிட்டது. எந்நேரமும் புழுக்கமும் வியர்வையும் நரகவேதனைபோல் வாட்டின. அக் கஷ்டங்களால் தான் எனது நண்பர் சொன்ன வழியின்மீது என் மனம் சென்றது. "முடியுமா, பார்க்கலாம்" என்று எண்ணி ஒருவாறு அதை அநுஷ்டிக்கத் தீர்மானித்தேன். சாப்பாட்டில் நெய் முதலியவற்றைக் குறைத்துக்கொண்டேன். ஆனால் சாக்கலெட்! ஐயோ! அதை நிறுத்துவது மிகக் கடினமாயிற்று. எந்நேரமும் என் சாய்வு நாற்காலியின் பக்கமே ஒரு டப்பி இருக்கும். நினைத்தபோதெல்லாம் கை கருணையுடன் தாராளமாக வாரி வாய்க்கு ஊட்டிவிடும். அதை எப்படி நிறுத்துவது? என் மனதைச் சரிப்படுத்தினாலும் கையையும் வாயையும் கட்டுப்படுத்த முடியாதுபோ லிருந்தது. என்னென்னவோ உபாயங்களை யெல்லாம் யோசித்தேன். முடிவில் எனக்குள்ளேயே ஒரு விதி ஏற்படுத்திக்கொண்டேன். உடலை அசைக்கவேண்டுமென்று அவர் சொன்னாரல்லவா? அதனால் ஒருவேளை சாக்கலெட்டின் தீமை குறையலாம். ஆகையால் அதையும் சேர்த்துக் கொண்டேன். சாக்கலெட்டை நிறுத்துவது கடினம். ஆனால் வேலை கொழுப்பைக் கரைக்கும். மேலும் வேலையாலுண்டாகும் கஷ்டத்தைக் கண்டாவது கைக்கும் வாய்க்கும் கருணை பிறக்கலாம். ஒரு சாக்கலெட் தின்றால் இருபதடி நடக்கவேண்டுமெனத் தீர்மானித்தேன். என்னை வற்புறுத்துபவர் ஒருவருமில்லை. இருந்தாலும், என் தீர்மானத்தைச் சிறிதும் நழுவவிடாது நிறைவேற்றக் கங்கணங் கட்டிக்கொண்டேன்.

முதல் நாள் என்னையு மறியாமல் என் கை ஒரு சாக்கலெட் எடுத்து வாயில் வைத்துவிட்டது. அதுவும் சந்தடி செய்யாமல் விழுங்கிவிட்டது. சரி, உடனே கஷ்டப்பட்டு எழுந்தேன். பேரவஸ்தையுடன் இருபதடி நடந்துவிட்டு நாற்காலியில் விழுந்தேன். அன்றெல்லாம் ஐந்தாறு சாக்கலெட்டுகள்தான் தின்றிருப்பேன். ஆனால் அறுபதடி நடப்பது எவ்வளவு கடினம்? நானடைந்த களைப்புக்கு அளவே யில்லை. இந்த அவஸ்தை படுவதைக் காட்டிலும் வாயைக் கட்டிக்கொள்ளுவதே சுலபமென நினைத்தேன். ஆனால் அது அடங்கின பாடில்லை. ஆயினும் கஷ்டம் அதிகரிக்க அதிகரிக்க, சாக்கலெட்டின் தொகையும் குறைந்துகொண்டே வந்தது. ஒரு வாரத்திலேயே குணம் தெரிந்தது. கைகால்களை அசைப்பது சிறிது சுலபமாயிற்று. ஆகையால் 20 அடி என்பதை 30, 40 என உயர்த்தி 100 அடிக்குக் கொண்டு வந்தேன். இரண்டு மாதங்களுக்குள் பாதி தசை கரைந்துவிட்டது. நடப்பதும் சுலபமாயிற்று. அதனால் நல்ல அனுகூல மேற்படவே அது ஒரு உற்சாகமாகவும் இருந்தது. நாளடைவில் சாதாரணமான தேகத்தை யடைந்தேன்.



இப்பொழுது தினம் இரண்டு மூன்று சாக்கலெட்டுகட்குமேல் தின்பதில்லை. நடைக்கும் குறைவில்லை. வண்டியின் அவசியமும் குறைந்துவிட்டது. உடம்பினால் கஷ்டம் சிறிதுமில்லை. மேனியும் அழகா யிருக்கிறது. இப்பொழுது எதிர்ப்படும் சிறுவர்களெல்லாம் என்னை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு வாய் பொத்திக்கொண்டு செல்கிறார்கள். எனக்கு வழி சொல்லிய நண்பரையொருநாள் பார்த்து "வந்தனமையா, கவனிக்காமற் செல்கிறீரே" என்றேன். அவர் திடுக்கிட்டு "யார்! சோமசுந்தரம் செட்டியாரா!" என்றார். பிறகு அவரிடம் என் கதையை யெல்லாம் விஸ்தாரமாகக் கூறினேன். என் நண்பர்களெல்லாமே என்னைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். என் மனைவியும் விருப்பத்துடன் நோக்குகின்றாள். நான் முன்னிருந்த நிலையைப் பற்றி இப்பொழுது நானே வேடிக்கையாகப் பேசிச் சிரிப்பதுண்டு.

---

# இலகு வைத்தியம்

[டாக்டர் திரு. கண்ணுசாமி அவர்கள், திருவாரூர்]

குக்கட்டிப் பூண்டு இலை ஒரு பிடியும் மிளகு 21-ம் சேர்த்து அரைத்துப் பாக்களவு விழுங்கி அல்லது நீராகாரம் விட்டுக் கரைத்து மூன்று காலையில் மட்டும் சாப்பிட்டுப் புளிப்பு நீக்கி மோர் சேர்த்துக்கொண்டு ஆகாரம் சாப்பிட்டால் மேக வெட்டை, கிரந்தி, புண் முதலியவை குணமாகும். நோய் நாட்பட்டதாயிருந்தால் உப்பில்லாப் பத்திய மிருக்கவும்.

குப்பைமேனி இலையை அரைத்துச் சுண்டைக்காயளவு சாப்பிட்டு ஷை சாற்றை மேலே தடவினால் பூரான் கடி விஷம் நீங்கும்.

நாலு பலம் வெடியுப்பை எருக்கம்பால் விட்டு அரைத்து ஒரு பலம் வெள்ளைப் பாஷாணக் கட்டி மேல் தடவி உருட்டிச் சீலைமண் சுற்றி இரண்டு மூன்று விறுடியில் இலகுபுடமிட்டு எடுத்துக் கவசம் நீக்கிப் பாஷாணக் கட்டியை ஜாக்கிரதையாக விஷம் என்று லேபிள் ஒட்டிப் பெட்டியில் பூட்டி வைத்துக்கொண்டு தேள் கொட்டினால் துளி தண்ணீர் விட்டு இழைத்துக் கொட்டு வாயில் தடவினால் வலி கடுப்பு நீங்கும்.

ஆதண்ட இலையை வாட்டி இரணங்களில் பத்து இருபது இலை வைத்துக் கட்டினால் ஆறாத இரணங்களும் ஆறிவிடும்.

கோரைக் கிழங்கு, சந்தனத்தூள், பற்படாகம், வெட்டிவேர், விலாமிச்சிவேர், சுக்கு இவைகளைச் சம எடையாக இடித்துக் கஷாயம் செய்து கொடுத்து வந்தால் பித்த ஜுரம் நிவர்த்தியாகும்.

பிஞ்சு கடுக்காயை இடித்து ஈனாத பசுக்கிடாரி மூத்திரத்தில் ஒரு நாள் ஊறவைத்துக் கசக்கிப் பிழிந்துவிட்டு நல்ல தண்ணீரில் ஒரு நாள் ஊறவிட்டுக் கசக்கிப் பிழிந்துலர்த்திச் சரியெடை பஞ்சாப் சாலாமிசிரியைத் துளி நெய் விட்டு வறுத்து இடித்துச் சேர்த்து பவுடராகக் கலந்துகொண்டு திருகடி யளவு வீதம் காய்ச்சிய பாலுடன் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி யுண்டாகும்.

ஆவாரம்பட்டைக் கியாழம், வெங்காயச்சாறு, பசுவின்பால் வகைக்குப் படி 1 கலந்து மல்லிசிரகம், லவங்கப் பட்டை வகைக்குப் பலம் ஒன்று பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் துட்டெடை வீதம் சாப்பிட்டு வந்தால் மதுமேகம் வெட்டைச் சூடு அஸ்தி சூடு குணமாகும்.

கடுக்காய்த் தோல் மிளகு அதிமதுரம் 3-ம் சரி எடை வறுத்துப் பொடித்துத் திருகடியளவு காலை மாலை தேனில் கொடுக்கப் புகை யிருமல் குணமாகும்.

ஆவாரம் விதை தேத்தான் விதை ஆவாரம் பிசின் கடுக்காய் விளாம்பிசின் இவைகளைச் சூரணம் செய்து அரை ரூபா யெடை வீதம் பசு மோரில் கலக்கிக் காலையில் மட்டும் கொடுக்க நீரிழிவு குணமாகும்.

பசுவின் பாலில் மான் கொம்பை இழைத்துக் கலக்கி அரைமூடி எலுமிச்சம் பழம் பிழிந்து கொடுக்க இரத்தபேதி குணமாகும். மூலத்தில் இரத்தம் போவது நிற்கும்.

நெல்லிக்காய்க் கெந்தகத்தைப் பசுவின்பால், எருமைச் சாணி கரைத்த தெளிவு, பசுவின் மோர், மணத்தக்காளிச் சாறு, வெங்காயச்சாறு, சோற்றுக் கற்றாழைச் சாறு, கரும்பு சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் 10-10 தடவை உருக்கி ஊற்றிச் சுத்தமாய்க் கழுவிப் போட்டுக் கல்வத்தில் 6 மணி நேரம் அரைத்து நெல்லிடை வீதம் நெய்யில் சாப்பிட்டுப் பால் நெய் தயிருடன் நல்ல ஆகாரம் செய்துவரச் சகல மேகங்களும் குணமாகி இரத்த விருத்தியும் எதிர்பாராத தாது புஷ்டியும் உண்டாகும்.

# என்றும் மறையாத இன்மொழிகள்

## கிராமபோன் ரிகார்டில் மகாத்மா உபதேசம்

“அறுபது வயதாகி விட்டது. ஆதலால் இப்பொழுது தான் நான் முதல் தடவையாகவும், கடைசித் தடவையாகவும் பிளேட்டில் என் பேச்சைக் கொடுக்கின்றேன். வேண்டுமென்றால் இந்தப் பிளேட்டைக் கொண்டு மக்கள் வெகு நாட்களுக்குக் கேட்கலாமல்லவா?” என்று கூறிக்கொண்டே காந்திஜி கொலம்பியா கிராமபோன் கம்பெனியாரின் இயந்திரத்தின் முன்னே பேசினார். அன்று தாம் ராஜீயத்தைப்பற்றிப் பேசப் போவதில்லை யென்றும், அத்யாத்ம தத்துவமாகப் பேசப் போவதாகவும் கூறினார். இந்த கிராமபோன் ரிகார்டில் வரும் லாபத்தில் பெரும் பகுதி சர்க்கா சங்கத்திற்குத் தரப்படுமாம்.

“உலகிலுள்ள ஒவ்வொன்றையும் ஒரு சூக்ஷம சக்தி இயக்கிக்கொண் டிருக்கிறது. அதை நான் உணர்கின்றேன். ஆனால் அதைப் பார்த்ததில்லை. இப் பார்க்கொணாத சக்தியை எதிர்ப்பது கூடாத காரியம். எனது புலன்கள் இச்சக்தியை உணர்கின்றன. அக்காரணத்தைக் கொண்டே ‘கடவுள்’ என்று ஒருவர் இருக்கிறாரென நான் கூறுகின்றேன்.

“சாதாரணமாய் உலகத்தில் யார் அரசன், எவன் ஆளுகின்றான் என்பது பாமரர்களுக்குத் தெரியாது. ஆயினும் ஒருவர் ஆண்டுகொண்டுதானிருக்கிறார். அதே மாதிரி நமக்குத் தெரியாமல் அகிலாண்டத்தையும் ஆள்கின்றார் பகவான்.

“சில வருடங்களுக்கு முன்னே நான் மைசூரில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண் டிருந்தபோது அநேக கிராமவாசிகளைச் சந்தித்தேன். மைசூரை யார் ஆண்டு வருகிறாரென்பது அப்பாமர மக்களில் அநேகருக்குத் தெரியாது. ‘கடவுள் ஆளுகின்றார்’ என்று சிலர் சொன்னார்கள். கடவுளின் எதிரே நான் அணுவினும் கேவலமானவன். அரசருக்கெல்லாம் அரசரான அவரது அருள் எளிதில் கிடைக்குமா? ஆனால் அந்த மைசூர்ப் பிரஜைகள் தங்கள் ராஜ்யத்தைப் பற்றி உணர்வதைப் போல் நானும் பரமனின் ராஜ்யத்தைப் பற்றி உணர்கின்றேன். அண்டாண்டமெங்கும் ஓர் ஒழுங்கா யுளது; மாற்ற முடியாத வண்ணம் ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு தொழில் உளது. எல்லாவற்றையும் அடக்கி யாளும் அந்தச் சித் சக்தியே ‘ஆண்டவன்.’

“குருட்டுச் சட்டத்தைப் போட்டு உலகை யாள முடியாது. இப்போது ஜடப் பொருள்களிலும் உயிருளது எனத் திரு. ஜே. ஸி. போஸ் நிரூபித்து வருகிறார். இவ்வளவு உயிர்களையும் எது இயங்குவிக்கிறதோ அச்சக்திதான் ‘பரமாத்மா.’

“அவரும், அவரது சட்டமும் ஒன்றே. எனக்கு அவரைப்பற்றியோ, அவரது சட்டத்தைப்பற்றியோ ஒன்றும் தெரியாது. ஆதலால் நான் அவரை மறுக்க விரும்புவதில்லை. உலகில் எவ்வளவோ விதமான சக்திகள் உள. அவைகளை மறுப்பதனால் எனக்கேதாவது பலனுண்டோ? அவ்வாறே கடவுளது சக்தியை எதிர்ப்பதாலும் பயனில்லை. ஆனால் அவரது கட்டளைகட்குக் கீழ்ப்படிந்தால் வெகு சுலபமாக நமது ஆயுட் காலத்தைக் கழிக்கலாம் என்பது நிச்சயம். என்னைச் சுற்றிலும் உள்ளவை மாறிக்கொண்டே வருவதையும், சில மாண்டு வருவதையும், நான் காண்கின்றேன். ஆனால் இவைகளுக் கிடையே யிருந்தும் மாறாத சாகாத சக்தியொன்று உலகை ஆட்டுவித்துக்கொண் டிருக்கிறது. அது தான் உலகைச் சிருட்டிப்பது; அழிப்பது; மறுபடியும் தோற்றுவிப்பது. அந்தச் சக்தி தான் பரமாத்மா. வேறொன்றும் அதற்கிணையாக இல்லை யாதலால் எனது புலன்களை அந்தச் சக்தியிடம் சமர்ப்பணம் செய்கிறேன்.

“இந்தச் சக்தி அருள் மயமானதா? துவேஷமுடையாதா? இது முற்றிலும் அருள் மயமானதாக நான் காண்கின்றேன். ஏனெனில், உலகில் சாவின் மத்தியில் வாழ்வு பொங்குகின்றது; அசத்தியத்தின் இடையே சத்தியம் நிலவுகின்றது; இருளின் இடையே ஒளி உறைகின்றது. அக்காரணங்களால் கடவுள் தான் அந்தராத்மா; அவர் தாம் சத்தியம்; அவர் தாம் ஒளி என்று நான் தேர்கின்றேன். அவர் ப்ரேமஸ்வரூபி; அவர் தான் பூரண சுத்தமானவர்.

“கேவலம் அறிவுக்கு மட்டும் இன்ப மூட்டுவதானா கடவுள்? இல்லை. கடவுள் என்றால் அவர் இதயத்தை மாற்றும் வல்லமையோ டிருக்கவேண்டும். தம் பக்தர்களது சின்னஞ் சிறிய வேலைகளிலும் அவர் தோன்ற வேண்டும். இத்தகைய அத்யாத்மிகத் தோற்றம் ஐம்புலன்களுக்கும் அப்பாலுள்ளது. ஐம்புலன்கள் எப்போதும் ஏமாற்றும் இயல்புடையன. ஆனால் புலன்களுக்குப் புறத்தே பெறும் உணர்ச்சி அழிக்கொணாதது. ஆண்டவனின் தரிசனத்தை அடைந்தவர்கள் அத்தகைய உணர்ச்சி பெற்றவர்கள்.

“ஒவ்வொரு தேசத்திலும் இத்தகைய மகான்கள் தொடர்ந்தாற்போலத் தோன்றி வருகின்றனர். இந்தச் சத்தியத்தை மறுப்பது தன்னையே எதிர்ப்பது போலாகும். இத்தகைய உணர்ச்சி பெறுதற்கு முன் தளராத நம்பிக்கை அத்யாவசியமானது. தன்னோடு ஆண்டவன் இருப்பதாக எண்ணுகின்றவன் உறுதியான நம்பிக்கையோடு வாழ வேண்டும். நம்பிக்கை கொண்டு வாழ்வது சுலபமான வழியாகும். இந்த உலகத்தில் நற்குணமே ஆள்வதாக நம்பவேண்டும். அதாவது ‘ஸத்திய மேவ ஜயதி’, ‘அன்பே ஆண்டவன்’ என்பவைகளில் பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும். இதற்கு எதிரிடையாய்த் தோன்றுபவைகளை மறந்துவிட வேண்டும்.

“காரணங்களைக் கூறிக் காரியத்தை விளக்க யான் அறியேன். ஏனெனில் காரணங்களைக்




உயர் பதவி யடைவோ ரனைவரும் தங்கள் உயர்விற் கேதுவான குணங்களைத் தம் தாய்மாரிடமிருந்தே பெறுகின்றனர். விலங்குகள் அறியாத விதி ஏதாவதிருப்பின் அது இஃதே. —மிச்சலெட்

ஆரோக்கியத்தைக் காட்டிலும் ஐஸ்வரியமில்லை; மனக்களிப்பைக் காட்டிலும் மகிழ்ச்சியுமில்லை.
பைபிள்

ஒருவனுக்கு உணவு அளிப்பதைக் காட்டிலும் அதை அவனே தேடிக்கொள்ளும் வழியைக் காட்டுவதே சிறந்தது. உதவி புரிவதைக் காட்டிலும் பிறர்க்குதவி செய்யக் கற்றுக் கொடுப்பதே சிலாக்கியம்.
ஆவ்பரி.

“ரோஜாச் செடியில் முள்ளிருக்கிறதே” என முறையிடாதே. முட் செடியிலும் ஒப்பிலா மலரிருக்கின்றதே என உளம்பூரிப்பாயாக. —ஆவ்பரி.

நமது குறைகளில் சில உடன் பிறந்தவை; மற்றவை கல்வியால் விளைந்தவை. இவ்விரண்டு தாத்தவை யுள்ளும் எவை அதிக தீங்கிழைப்பவை என்பதுதான் கேள்வி.
கதே.

நண்பனிடம் செலுத்தும் அன்பு சுவரில் மோதித் திரும்பி விடும் பந்துபோலல்லாது இலக்கான பொருளில் தைக்கும் அம்புபோ லிருக்க வேண்டும்.
குவார்லஸ்.

வண்டுக்குக் குடிசையில் மலரும் மலரில் கூடத் தேன் கிடைத்துவிடும். வண்ணாத்திப் பூச்சிக்கோ, அரண்மனைத் தோட்டத்திலும் ஒரு துளி தேன் கூடக் கிட்டாது.
புல்லர்.

குழந்தைகள் பாடம் கற்கும் பொழுது கஷ்டமாயுள்ள மொழிகளைக் கவனியாது விட்டுச் செல்வர். அதுபோலவே சிலர் தங்கள் குறைகளைக் கவனியாதிருக்கின்றனர்.
லெய்ட்டன்.

உண்மையிலேயே தர்ம மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவன் இதர தர்மங்களும் சத்தியத்தைத் தேடிக் காண்பதற்கேற்ற மார்க்கங்களே யென உணரவேண்டும்.— ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

நான் என் வாலிபத்தை வீணாக்க விரும்பேன். அதுவே நான் சிலாக்கியமாகக் கருதுவது. தேச சேவையிற் செலவிடப்படாத வாலிபப் பருவம் இருந்தென்ன, போயென்ன? வாலிபர்களே, எழுந்திருங்கள். சேவை செய்ய முன்வாருங்கள்.
திலகர்.

அஹிம்ஸை இல்லாத சத்தியாக்கிரகம் மாலுமி இல்லாக் கப்பலாகும். மற்றவர்க்கு எவ்வித இன்னலு மிழைக்காமல் நம்மையே நாம் துன்புறுத்திக்கொள்ளுமுகத்தான் பிறரை மாற்றுவதே சத்தியாக்கிரகம்.
மகாத்மா காந்தி.

அஹிம்ஸையைக் கடைப்பிடித் தொழுகுபவனுக்கு அன்பே துணைக் கருவியாகும். நமக்குத் தீங்கிழைப்பவரை நாம் வெறுத்துத் தள்ளலாகாது. அவர்களிடம் அன்பு செலுத்துவதாலேயே அவர்களது தீயகுணங்களைப் போக்கவேண்டும்.
ஷை

தீமையெனத் தோன்றுபவைகளுடன் ஒத்துழைக்கமறுப்பதே ஒத்துழையாமையாம்.
ஷை

கோபமும் ஆத்திரமும் தோன்றும்பொழுது அவற்றை யடக்கி மனத்தை அன்புமய மாக்கல் வேண்டும். கோபத்திற் கிடங் கொடுப்பவன் சில நிமிஷங்கள் தன்னையே தான் மறந்து மிருகமாகிறான்.
மகாத்மா.

(290-வது பக்கத் தொடர்ச்சி)

கடந்தது ‘நம்பிக்கை’. அதே போல உலகில் ஏன் அக்ரமம் இருக்கின்றது என்பதை விளக்கவும் யானறியேன். கடவுள் உலகில் தீமையைப் புகுத்திவிட்டு அவரும் பொறுமையாகச் சகித்துக்கொண் டிருக்கிறார் என்று தான் எனக்குத் தோன்றுகிறது. அவரிடம் துளியேனும் தீமை கிடையாது. தீமையைப் புகுத்தியவர் அவரே யாயினும் அவரைத் தீமை அணுகாது. தீமையை எதிர்த்துப் போர் புரியாவிட்டால் கடவுளை நான் அறியவே முடியாது. என்னுடைய குறைந்த அனுபவத்தினின்றே இதை நான் திண்ணமாகக் கூறுவேன். நான் சுத்தமாகப் பாடு படப்பட அவருடைய அருகில் செல்கின்றேன். என்றைய தினம் எனது நம்பிக்கை ஹிமாலயத்தைப் போன்று அசையாமலும், பனிச் சிகரங்களைப் போன்று சுத்தமாகவும் ஆகின்றதோ அன்று ஆண்டவனை முற்றிலும் உணர்வே னென்பதும் நிச்சயம்.” (சு. ச.)

மகாத்மாவினது கண்ணியக் குரலையும் திண்ணிய உபதேசங்களையும் கொண்டு தமது செவிகட்கு இன்பத்தையும் இதயத்திற்கு அமைதியையும் ஊட்ட அவாவும் மாந்தர்க்கு இப் பொன்மொழிகள் ஒரு சாசுவத நிதியாகத் திகழுமன்றோ?

# ஐ. சி. எஸ். வர்க்கத்தினரின் சம்பளம்

## திரு. ஆர்தர் ஆஸ்பர்ன் அவர்களின் அபிப்பிராயம்

பல்லாயிரக் கணக்கான ஏழை இந்திய மக்கள் கஞ்சியில்லாது பட்டினி கிடந்து வாட, துரைத்தன உத்தியோகஸ்தர்கள் எவ்விதம் வாழ்கின்றனர் என்பதைப் பற்றித் திரு. ஆர்தர் ஆஸ்பர்ன் என்பவர் தாம் அனுபவத்தில் அறிந்ததை “மான்செஸ்டர் கார்டியன்” பத்திரிகையில் கீழ்வருமாறு எழுதுகிறார்:—

“இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தர்கள்--இந்திய ராணுவத்திலும் பிரிட்டிஷ் ராணுவத்திலும் உள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுங்கூட — சொந்தத்தில் வழி யற்றவர்களாயினும், தாங்கள் இந்தியாவிற் பெறும் கொழுத்த சம்பளங்களின் உதவியால் மூன்று வருடங்கட் கொருதடவையாவது ஐரோப்பாவுக்கு வந்து செல்லுகிறார்கள், அதாவது 14,000 மைல்கள் சுற்றிச் செல்கிறார்கள் என்பதை ஞாபகமூட்டுவதே தங்கள் பத்திரிகையில் வெளிவந்த திரு ரெய்லி அவர்கள் கடிதத்திற்கு மிகவும் பொருத்தமான பதிலாகும். சாதாரணமாக அவர்கள் “பி அண்டு ஓ” மார்க்கமாகவோ வேறு மார்க்கமாகவோ இரண்டாம் வகுப்பிலேயே பிரயாணம் செய்கிறார்கள். அவர்கட்கு மேலதிகாரிகளா யுள்ளவர்கள் முதல் வகுப்பில் பிரயாணம் செய்கிறார்கள். இந்திய ராணுவத்தைச் சேர்ந்த கீழ் உத்தியோகஸ்தர்களும் மிகச் சொற்ப காலமே உத்தியோகம் வகித்தவர்களும் கூட இன்னும் அடிக்கடி ஐரோப்பாவுக்கு வந்து திரும்புகிறார்கள்.

“சொந்தப் பொருள் வசதியில்லாத கீழ் உத்தியோகஸ்தனாயிருந்த காலத்தில் இந்தியாவில் நான் அனுபவித்த சுகங்களே இதற்குப் போதிய சான்றாகும். நான் இந்தியாவுக்குச் சென்ற முதல் மூன்று வருடங்களிலேயே முழுச் சம்பளத்துடன் 11 மாத ஓய்வு எடுத்துக்கொண்டேன். அரசாங்க விதிப்படி எனக்குக் கிடைக்கவேண்டியதும் முழுச் சம்பளம்தான். இதுவேயல்லாமல் 48 மணி நேரம் முதல் 10 நாட்கள் வரைச் செல்லும் எண்ணற்ற சிறு ஓய்வுகளும் எடுத்துக்கொண்டேன். இந்தியாவில் நான் மூன்று நாட்களுக் கொரு தடவையே வேலைகளைக் கவனிப்பேன். அப்பொழுதும் 4, 5 மணி நேரமோ அதற்குங் குறைவாகவோதான் உழைப்பேன். சாதாரணமாகப் பகல் வேளையில் எனக்கு வேலையே கிடையாது. அப்பொழுது அண்டையிலுள்ள இடங்களில் மான் வேட்டைக்காகச் செல்வேன். நான் உடலுழைப்பில் ஊதாரியாகவுமிருக்கவில்லை, உலோபியாகவு மிருக்கவில்லை. ஆனால் எனது மேலதிகாரிகளோ, நான் உழைத்துழைத்து

(286-வது பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது: மாமிசம், அவரை முதலிய அஜோட் பதார்த்தங்கள்.

நான்காவது: எண்ணெய் வகையரா, கொழுப்பு, வெண்ணெய் முதலிய கொழுப்புள்ள பதார்த்தங்கள்.

ஐந்தாவது: சர்க்கரை, வெல்லம், பழங்கள் முதலிய இனிப்புள்ள பதார்த்தங்கள்.

ஆறாவது: சமையல் உப்பு பாஸ்பேட் லைம், (phosphate lime) கார்பனட் லைம் (carbonate lime) முதலிய உப்புப் பதார்த்தங்கள்.

இவற்றை நோக்கி, உப்பு மிகவும் இன்றியமையாத பொருள் எனக் கண்டறிதல் வேண்டும்.

உப்பு இயற்கைப் பொருள். எந்தக் காலத்திலிருந்து உப்பைச் சமையலுக்கு உபயோகித்துக் கொண்டு வருகிறார்களென்பதைக் கணக்கிட்டுக் கூற முடியவில்லை. உப்பின் உண்மை விளங்கி, பகிரங்கமாகக் கண்டுபிடித்த காலம் ஒன்று இருந்தே தீரவேண்டும். ஆதியில் சிலர் இன்று கிடைக்கும் சமையல் உப்பின்றியே ஆகாராதிகளை உண்டிருக்கலாம். ஆனால் எந்தக் காலத்திலும், “உப்பு”, என்னும் இயற்கைப் பொருள் இருந்து வருகிறதென்பதை ஒருவராலும் மறுக்க இயலாது.

பதார்த்தங்களைக் கெடாதபடி பத்திரப்படுத்தி வைப்பதற்கு உப்பு மிகவும் உபயோகமானது. உப்புள்ள பண்டம் ஒருபொழுதும் அழுகிப் போகாது. உதாரணமாக ஊறுகாயை எடுத்துக் கொள்ளுவோம். உப்புத் தண்ணீரைக் கொண்டு ஊறவைத்த காயாகையால் ஒருபோதும் அது கெட்டுப்போகாது. பல வருடங்கள் காபந்து பண்ணி வைத்திருக்கலாம். பண்டை நாகரிகம் வாய்ந்த கிரேக்கர், இந்தியர், ரோமானியர் முதலியோர் உப்பின் தன்மையை நன்குணர்ந்தே பற்பல பொருள்களையும் அழுக வைக்காமற் படிக்கு மேற்கண்ட உப்பைக் கொண்டே காபந்து பண்ணி வந்தனர் என்பதைச் சரித்திரத்தின் வாயிலாய் நன்குணரலாம். பிணங்களை அவர்கள் அநேக வருட காலம் காபந்து செய்து வைத்தமை உப்பு, விபூதி முதலியவைகளினாலேயே தான். இன்றும் நமது நாட்டில் சவக்குழியில் விபூதி, உப்பு முதலியவைகளைப் போட்டுப் பிணங்களைப் புதைக்கின்றார்கள். இப்படிச் செய்வதனால், பிரேதங்கள் வெகு நாளைக்குக் கெட்டுப் போகாமல் இருக்கும். சில நாடுகளில் உப்பைக் கொண்டு செய்யும் சடங்குகள் சொற்பமல்ல. உதாரணமாக நந்தமிழ் நாட்டில் உப்பு, மிளகாய், மயிர் முதலியவைகளைக் கொண்டு திருஷ்டி கழிப்பதைக் காணலாம்.

(தொடரும்)



உடலைக் கரைத்துவிடுவதாகக் கண்டிக்கும் அவ்வளவு கருணையுள்ளவரா யிருந்தனர்.

“நாங்கள் அப்பொழுது பெற்ற சம்பளம் போதாதென்று நாங்களெல்லோரும் முணுமுணுத்தோம். ஏனெனில் இந்தியாவிலுள்ள மற்ற ஆங்கில உத்தியோகஸ்தரெல்லாம் அதை விட மிகவும் அதிகமாகப் பெற்றுவந்ததாகத் தெரிந்தது. (அத்தொகையும் முன்னினும் அதிகரித்துள்ளது.) ஆனால் நான் வாங்கிய (போதாதென்று கருதப்பட்ட) அந்தத் தொகையிலேயே நான் ஏழு வேலையாட்களும், எப்பொழுதும் ஒரு குதிரையும், சில சமயங்களில் இரண்டும், வைத்துக்கொண்டும், உத்தீபனங் கொடுக்கும் ஓட்டல் ஒன்றுக்குப் பெருந்தொகை கொடுத்துக்கொண்டும் ஆடம்பரமாகவே வாழ்ந்தேன். இவற்றோடு மாலை வேளைகளில் பொழுது போக்க நடனங்களுண்டு. இந்திய அற்புதங்களைச் சேகரிப்பதிலும் வேறு அனாவசியமான வழிகளிலும் பொருளைச் செலவழிப்பதும் சகஜமா யிருந்தது. இவை மட்டுமல்ல; இங்கிலாந்தில் நான் தையற்காரருக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிகளையும் வேறு கடன்களையும் கொடுத்துத் தீர்த்தேன். இப்பொழுதும் நான் இந்தியாவி லிருப்பேனாயின் என்னுடைய சம்பளமும் வேறு வருவாய்களும் சேர்ந்து வருடத்துக்குச் சுமார் 2000 பவுண்டு, அதாவது மாதம் ரூ. 2000 ஆயிருக்கும். நான் வேலைசெய்ய வேண்டியநேரமும் குறைந்திருக்கும். எனக்குக் கிடைக்கக்கூடிய ஓய்வுக் காலமும் கட்டாயம் நீண்டிருக்கும்.

“இந்தியாவைப் பற்றி நான் எழுதியுள்ள புத்தகத்தில் நான் எடுத்துக்காட்டியுள்ளபடி இந்தியன் பாதி பட்டினி கிடந்து ஒரு பெருந் தொகையினரான, அகங்காரம் நிறைந்த காலாட்களுடைய சம்பளத்தையும் பென்ஷனையும் கொடுக்கும்படி வற்புறுத்தப்படும் தொழிலாளனாகவே இருக்கிறான். அந்த ஆட்கள் திறமை மிக்கவர்கள்தான்; அவர்கள் அவனது ஒழுங்கீனமான வாழ்க்கை இடத்தில் சில பாகங்களை நல்ல நிலையில் வைத்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் தங்கள் கொழுத்த சம்பளங்களையும் பென்ஷன்களையும் தாங்கள் இங்கிலாந்துக்குச் செல்வதற்கு வேண்டிய செலவையும் கொடுப்பதற்காக ஒவ்வொரு சாப்பாட்டிலும் ஒரு பாகத்தை இழக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்துகிறார்கள். ஆங்கிலேய குழந்தைகட்கு இந்திய சீதோஷ்ண நிலை பிடிக்கவில்லையென்பதும், இந்தியாவிலுள்ள ஆங்கில உத்தியோகஸ்தர்கள் இந்திய சமூகத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இலவசப் பள்ளிகட்குத் தங்கள் மக்களை அனுப்பாமல் பெருந்தொகையான செலவு கொள்ளும் பொதுப் பள்ளிகட்கு (Public Schools) அனுப்பக் கருதுகிறார்களென்பதும் இந்தியனது குற்றங்களல்லவே. நம்மையாவது நமது மக்களையாவது இந்தியாவிற் புகும்படி இந்தியன் ஒருகாலும் கேட்டுக் கொள்ளவில்லை. அந்நாட்டின் சீதோஷ்ண நிலை நமக்குப் பிடிக்கவில்லையென்றால் வெகு சுலபமான பரிகாரம் நம்மிடமே இருக்கிறது. நாம் எவ்வளவு கெட்டிக்காரரா யிருந்தாலும் சரி, எந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தருக்கும் வருடம் ஆயிரம் பௌண்டுக்கு மேல் தருவதோ, அவர் இங்கிலாந்தில் வருடத்துக்கு 500-க்கு மேல் தாராளமாகச் செலவழிக்குமாறு அவருக்குப் பென்ஷன் தருவதோ இந்தியனால் முடியாத காரியமென்பது மறுக்க முடியாத உண்மை யாகும்.”

ஐ. சி. எஸ். வர்க்கத்தினரைச் சேர்ந்த ஆங்கிலேயரொருவரே இவ்வாறு எழுதியிருக்கிறார். இந்தியன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ மாடுபோலுழைத்துச் சம்பாதிக்கும் பணம் இப்படிக் கொள்ளை போகிறது. குதிரைகட்கும் மோட்டார்கட்கும், ஆடைகட்கும் அணிகட்கும், கொழுத்த தின்டிக்கும் உயர்ந்த சாராயத்துக்கும், வேட்டைகட்கும், நடனங்கட்கும், வேறு உல்லாசமான பொழுது போக்குகட்குமாக லக்ஷக் கணக்கான பணம் வாரி இறைக்கப்படுகிறது. இந்தப் பணத்தையெல்லாம் சம்பாதித்துக் கொடுக்கும், இந்தியனோ அரை வயிற்றுச் சாப்பாட்டோடும் ஒரு வேளைப் பட்டினியோடும் வாடி வருந்தி, வரிப்பளுவைத் தாங்க முடியாமல் “ஐயோ! முதுகொடிந்து போகும்போ லிருக்கிறதே” என்று அலறி யழுகிறான். மாதா வயிறெரிய மகேஸ்வர பூஜை செய்வது எந்தத் தெய்வத்துக்குத்தான் சம்மதமோ?

## எது லாபம்?

உங்களுக்குப் பல நன்மைகளை யளித்து, உங்களைப் பல வழிகளிலும் உயர்த்துவதையே தன் கடமையாகக் கொண்டுழைக்கின்றான் நமது ‘மித்திரன்’. அவனுக்கு உணவு முதலியவை யளித்து ஆதரிப்பது உங்கள் கடமை யல்லவா? அவன் உங்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் ஒன்றரை ரூபாய் தான். அந்தத் தொகையை எப்படிச் செலுத்தலாம்? அவன் சார்பாக உங்களிடம் வந்து உபந்நியாசங்கள் நிகழ்த்தும் பிரசாரகர்களிடம் தரலாம். இல்லை, மணியார்டர் மூலம் அனுப்பலாம். இரண்டும் செய்யவில்லை யென்றால், மித்திரனே ஓடி வந்து “ஐயா, வி. பி. யில் வந்துவிட்டேன். எப்படியாவது பணங் கட்டி என்னை ஆதரியுங்கள்” என்று உங்கள் வாயிலில் நிற்கின்றான். பிரசாரகரிடம் கொடுத்து விட்டால் ரூ. 1—8—0. மணியார்டர் மூலம் அனுப்பினால் ரூ. 1—10—0. வி. பி. யில் வந்தபின் பணம் கட்டினால் ரூ. 1—14—0. எது உங்களுக்கு லாபம்? நீங்களே யோசியுங்கள்.




உபாத்தியாயர்:—கிருஷ்ணு! இராமர் காட்டுக்குப் போயிராவிட்டால் என்ன ஆயிருக்கும்?

கிருஷ்ணன்:—இந்தச் சனியனுன பரீக்ஷைக்கு இராமாயணத்தைப் படிக்கும் கஷ்டம் இல்லாதிருக்கும்.

* *

ஒருவர்:—ஐயா, க்ஷேமந்தானு? எத்தனை பிள்ளைகள்?

மற்றொருவர்:—வழியில் கண்டபோதெல்லாம் சொல்லிவிட முடியுமா? ஒரு ஓய்வு நாளில் வீட்டுக்கு வாரும், எண்ணிச் சொல்லுகிறேன்.

* *

பையன்:—அப்பா, மனிதன் குரங்கிலிருந்து உற்பத்தியானுனுமே. அதை எப்படி நம்புகிறது?

தகப்பன்:—உன் சேஷ்டைகளே போதாவா? அதற்கு வேறு ஆதாரமும் வேண்டுமோ?

* *

பெண்ணின் தகப்பன்:—ஓய் சம்மந்தியாரே! உமது மகன் மகாக்கெட்டிக்காரன் என்றீரே; ஒன்றும் காணுேமே.

பிள்ளையின் தகப்பன் :— இப்பொழுதுந்தான் சொல்லுகிறேன். எதிற் கெட்டிக்காரனென்று சொன்னேனு?

பெ. த:—எதில்தான் கெட்டிக்காரன் சொல்லுமே?

பி. த:—மாமனுரிடம் பணம் வாங்குவதில் தான் மிக மிகக் கெட்டிக்காரன்.

* *

உபாத்தியாயர் :—சீ! மடையா, இப்பொழுது தான் சொன்னேன்; இதற்குள் மறந்துவிட்டேனென்கிருயே.

மாணவன்:—ஐயா, நீர்தானே நேற்றுச் சொன்னீர் மறதி பெரிய மனிதர்களது குணங்களிலொன்று என்று?

* *

ஒருவர்:—ஐயா, மேல் நாடுகளில் லக்ஷக்கணக்கான பேர் நிர்வாணமாய் வாழ்கிருர்களாமே. நிர்வாண சங்கங்களும் பல நிறுவப்பட்டிருக்கின்றனவாமே.

மற்றொருவர்:—சரி, கன்னிமேயோவுக்கு ஜே கூறுங்கள்.

* *

சங்கரன்:—வட்டமேஜை மகாநாடு எப்படியிருக்கிறது?

சம்பு:—வட்டமிட்டுக் கொண்டேயிருக்கிறது. வட்டத்தை எத்தனை தடவைகள் சுற்றினுலும் ஒரே இடத்துக்குத்தான் வரவேண்டும். அம்மகாநாட்டார் எவ்வளவு பேசிக் கொட்டினுலும் உப்புசப்பற்ற முடிவுக்குத்தான் வருகிருர்கள். சரியான வழியில் அடி வைத்தபாடில்லை.

* *

மனைவி :—ஐயோ, வீட்டில் உப்பு மிளகாய் கூட இல்லையே. இந்த நிலையில் இப்படிக்கூட ரூபாய் ரூபாயாக ரேவில் தொலைக்கலாமா?

கணவன்:—சே, சே உனக்கொன்றும் தெரியாது. காந்திமகான் சொல்வதைக் கேட்டாயா? ஒருவரும் தங்களுக்கென்று பணம் வைத்துக்கொள்ளக் கூடாது. அனைவரும் வறுமையையே மேற்கொள்ள வேண்டுமென்றுதான் அவர் உபதேசிக்கிருர்.

* *

உலகறிந்தவர்:—சமீபத்தில் ஒரு உபவாசப் போட்டி வைக்கப்போகிருர்களாம். எவன் அதிக நாள் அன்னுகாரமின்றியிருக்கிருனே அவனுக்குப் பரிசாம்.

அனுபவ சித்தர்:—அப்படியானுல் அந்தப் பரிசு இந்தியத் தொழிலாளனுக்குத் தான் கிடைக்கும்.

* *

கவிவாணர்:—ஐயா, உங்கள் தொழிலுக்கு மிஞ்சின தொழிலே கிடையாது. மேழி பிடிக்குங் கை, வேல்வேந்தர் நோக்குங் கை.

விவசாயி:—அதனுல் தான் துரைத்தனத்தார் எங்கள் வயிற்றையடிப்பதிலேயே கண்ணுயிருக்கிருர்கள் போலும்.

* *

கணவன்:—அடுத்த மாதத்திலிருந்து நீ வெகு சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தவேண்டும்.

மனைவி;—சரி, இப்பொழுது ஒரே ஒரு ரவை நெக்லேஸும், இரண்டு ரவை வளையல்களும் ஒரு ஜதை நீல ரவைக் கம்மல்களும் மட்டும் வாங்கிக் கொடுத்துவிடுங்கள்.

* *

தகப்பன்:—என்னடா இது, நேற்றுத்தான் பரீக்ஷை ஆரம்பித்தது. இன்றைக்கு இப்படித் தூங்குகிருயே?

மகன்:—நேற்றே மற்ற பரீக்ஷைகளுக்கெல்லாம் போக வேண்டாதபடி எழுதிவிட்டேன்.



# காந்தியார் படலம்

வட்டமேஜை மகாநாடென்னவோ வாய்திறந்தபாடில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் அபிப்பிராயமோ மூடு மந்திரமாகவே இருக்கிறது. ஆனுல் மகாத்மா மட்டும் தமது கோரிக்கைகளையும், தாம் எதிர்பார்ப்பதென்னவென்பதையும், தாம் வேண்டுபவைகள் கிடைக்காவிடின் தாம் என்ன விதமாக நடந்துகொள்வாரென்பதையும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் வெளிப்படையாக எடுத்துக் கூறிக்கொண்டேயிருக்கிருர். ஆனுல் எந்தச் சமயத்திலும் அவர் தமது அஹிம்ஸா தர்மத்தை வற்புறுத்தாது விடுகிருரில்லை.

லண்டன் தேசியச் சபையாரது வரவேற்புக்குப் பதிலுரையாக அவர் "எங்கள் விடுதலைக்காக நாங்கள் லக்ஷக் கணக்கில் உயிரைத் தியாகம் செய்ய வேண்டியிருப்பினும் நான் அதை ஒரு பிரமாதமாகக் கருதேன். ஆனுல் அஹிம்ஸையைக் கைவிடாமலும் சத்தியத்தினின்றும் வழுவாமலுமே காங்கிரஸ் சுதந்தரப் போரை நடத்துமென நம்புகின்றேன். விடுதலையடைவதற்காக நாங்கள் லக்ஷக் கணக்கான உயிர்களை அற்பணம் செய்ய வேண்டியிருந்தாலும்சரி, 'இந்தியா மனித இரத்தத்தைச் சிந்தாமலே போர் புரிந்து விடுதலையடைந்தது' எனப் பிற்கால சரித்திரக்காரர்கள் புகழும்படியிருக்கவேண்டுமென்பதே எனது பிரார்த்தனையாகும்" எனக் கூறியுள்ளார்.

* * *

சமரஸக் கமிட்டியின் முறிவைப்பற்றி, அது வீணுய் முடிந்ததற்காகத் தாம் வருந்துவதாகவும், ஆயினும் நம்பிக்கை நெகிழவில்லையென்றும், அத்தோல்விக்கு உண்மையான காரணம் மகாநாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களே என்றும், வகுப்புச் சமரஸம் ஏற்பட்ட பின்னர் தான் அரசியல் திட்டத்தை முடிவுகட்ட வேண்டுமென்பது தமது கருத்துக் கொவ்வாதென்றும், இத்தகைய தோல்விகளைக் கண்டும் அவற்றைப் பற்றிப் பத்திரிகைகள் வெகு சாமர்த்தியமாக எழுதும் விஷயங்களைக் கண்டும் எவரும் அஞ்சவேண்டியதில்லையென்றும் கூறினுர்.

இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கிடைத்தால் காந்திஜீ என்ன செய்வார் என்பது பலர் மனத்திடை எழும் கேள்வியாக இருக்கலாம். அதுபற்றி அவர் ஒரு நிருபரிடம் கூறிய மொழிகளாவன:—

"எனக்கு அதிகாரம் இருந்தால் வாய் செத்த பூச்சிகளான எனது ஏழைகளைத் தட்டியெழுப்பிப் பேசுவதற்குத் தைரியமளிப்பேன். வயிருர அன்னமளிப்பேன். வேலை செய்யுமாறு கட்டாயப் படுத்துவேன். அவர்களுக்கு இந்திய முறையில் கல்வி புகட்டுவேன்.

"பின்னும், நாட்டில் புதிய சாலைகளும் அழகமைந்த பாதைகளும் போடுவேன். இந்தியாவில் குடிசைக் கைத்தொழில்கள் சங்கிலிபோல் இணைப்பாக நியமிக்கப்படுமென நான் கனுக் காண்கின்றேன்.

"இந்தியா சுதந்தரத்தை அடைந்த பின் நான் தேசத்துக்குத் தலைமை வகிப்பேனு, அல்லது ஆஸ்ரமத்தில் அமைதியுடன் காலங் கழிப்பேனு என்பது காலத்தைப் பொறுத்திருக்கிறது......"

* * *

இந்து முஸ்லிம் சச்சரவுக்கும் சுயராஜ்யத்துக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி, "பிரிட்டன் பிடியினின்றும் இந்தியா விலகிக்கொண்ட உடனே இந்துக்களும் மகம்மதியரும் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு மடிவார்களென்னும் அபிப்பிராயத்தை இந்தியாவின் விரோதிகள் பரப்பிவருகிருர்கள். எனக்கு அவ்வாறு தோன்றவேயில்லை. பிரிட்டிஷார் வருமுன் இவ்விரு திறத்தாரும் சமரசமாகத்தானே வாழ்ந்து வந்தார்கள். அப்படி அவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டாலும் பயமில்லை. ஒரு கக்ஷியும் வெற்றியடையப் போகிறதில்லை. சிறிது நாட்களுக்குள் சமாதானத்தையே தழுவுவார்களென்பது திண்ணம். இதற்குமுன் இங்கு மங்கும் சில சச்சரவுகள் நடப்பதுண்டு. இப்போது அங்கெல்லாமும் சமாதானம் திகழவில்லையா? இந்தப் பிரிவினையை ஒரு சாக்காகக் கூறி பிரிட்டன் சுயராஜ்யத்தைப் பிடித்து வைத்திருப்பது நியாயமல்ல." எனக் கூறியுள்ளார்.

* * *

லங்காஷயர் விஜயத்தின்போது "ஹேஸ் பாரம்" என்னுமிடத்தில் தங்கியிருக்கையில் லங்காஷயரில் வேலையில்லாது திண்டாடும் லக்ஷக் கணக்கான ஏழைகளின் பிரதிநிதிகள் மகாத்மாவைக் கண்டனர். அவர்களிடம் அவர் இந்தியாது அவஸ்தையைக் கண்ணுடிபோல் எடுத்துக்காட்டிவிட்டார்.

"விதேசித் துணிகளையும் சாராய வகைகளையும் பகிஷ்கரிக்கும் உரிமைக்காகக் கடந்த மார்ச் மாதமுதல் நான் இர்வின் பிரபுவிடம் வாதாடி வந்தேன். சலுகை காட்டும் வழியாக அப் பகிஷ்காரத்தை 3 மாதங்கள் நிறுத்தி வைத்துப் பின் தொடங்கலாமென இர்வின் கூறினுர். 'ஐயோ! 3 நிமிஷங்கள் கூட நிறுத்த முடியாதே' என்றேன் நான். உங்களூரில் 30 லக்ஷம் பேருக்கு வேலையில்லை. இந்தியாவிலோ 30 கோடி மக்களுக்கு வருஷத்தில்

பாதி நாட்களுக்கு வேலையில்லையே; வயிற்றுக்குக் கஞ்சியில்லையே. இத்துன்பத்தினை உலகம் எவ்வளவு காலம் தான் சகித்திருக்குமோ தெரியவில்லை. இந்தியர்கள் வேலையில்லாது திண்டாடுகிறார்கள்; நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகிறார்கள்; கடவுளிடம் அவர்கட்கிருந்த நம்பிக்கையும் நழுவிக்கொண்டே யிருக்கிறது. கடவுளைப் பற்றி நான் அவர்களிடம் பேசுவதில்லை; பேசவும் முடியாது. அதோ ஓடுகிற நாயிடம் வேண்டுமாயினும் கடவுளைப் பற்றிப் பேசலாம். இந்திய ஏழைகளிடம் எப்படிப் பேசுவது? அவர்கள் கண்கள் குழி விழுந்து ஒளி மங்கிப் பஞ்சடைந்து கிடக்கின்றன. கஞ்சியே அவர்கட்குக் கடவுள். அதைக் கண்ணிற் காட்டினால் தான் அவர்கள் கடவுளை நம்புவார்கள்.

"வேலையே யில்லாது திண்டாடும் இவர்கட்குச் சொற்ப வேலையையாவது கொடுப்பதே என் கடமை என உணர்ந்தேன். அதனாலேயே ராட்டினத்தை யளித்தேன்.

"வறண்டு கிடக்கும் தங்கள் வயிறுகளைக் காட்டி இந்தியாவின் கோடிக் கணக்கான ஏழைகள் உங்கள் கதவுகளைத் தட்டுகையில் நீங்கள் அசட்டையாக இருக்க முடியுமா? அவர்கள் துயரத்துக்கு முன்பு உங்கள் துயரம் எங்கே? இந்திய ஏழைகளது பிரேதங்களின் மீது நீங்கள் கொழுக்க எண்ணாதீர்கள்; ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து, அவர்களை வயிற்றிலடித்துப் பிழைப்புத் தேடாதீர்கள். வேண்டாம், அது பரம பாவம்" என அவர்கள் மனத்தைக் கரைக்குமாறு அவர் மொழிந்தார்.

டார்லென் நகர சபைத் தலைவரைச் சந்தித்த பொழுது அவர் "உலக மக்கட்தொகுதியில் ஐந்திலொரு பங்கினர் மானத்தையும் தன் மதிப்பையுமிழந்து கிடக்கிறார்களே. அதற்கென்செய்வது? வழிசொல்லுங்களேன்." என்றார்.

* * *

மகாநாட்டின் நிலைமையைக் கண்ட சிலர் காந்திஜீ சில தினங்களில் மகாநாட்டிலிருந்து விலகி இந்தியாவுக்குச் சென்று போரைத் துவக்குவாரென்றும், செல்வம் இராணுவம் ஆகிய முக்கிய பிரச்சினைகளின்மீது முறிவு ஏற்படுமென்றும் கருதுகின்றனர்.

* * *

அக்டோபர் 16-ந்தேதி நாணயச் செலவாணியைப்பற்றி நடந்த கூட்டத்தில் அத்தகைய கூட்டங்கள் இனி கூட்டப்படாதெனத் தலைவர் அறிவித்தது கேட்டு, அப்படிக் கூடாததைப் பற்றித் தமக்குக் கவலை யில்லை யென்றும், ஆனால் சர்க்காரின் நாணயச் செலவாணி முறை இந்தியப் பொது மக்களது நன்மைக்கு விரோதமானதே யெனத் தாம் உறுதியாகக் கருதுவதாயும் மகாத்மா கூறினார். இராணுவம் நாணயச் செலவாணி இரண்டைப் பற்றிய பேச்சுக்களும் அவருக்கு அதிருப்தியையே அளித்துள்ளன. சர்க்காரார் எவ்வளவு சாமர்த்தியமாகக் காலங் கடத்தினாலும் அவர்கள் தமது திட்டமான ஏற்பாட்டை வெளியிடாது தப்ப காந்திஜி இடங்கொடாரென எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

18உ வட்புரூக் ஸ்தலக்கூட்டத்தில் எழுந்த கடுமையான கேள்விகட்குப் பதிலாக, "தான் இந்தியாவை விட்டு வெளியேறிவிடுவதாக பிரிட்டன் அறிவிக்குமாயின், உடனே இந்தியாவிலுள்ள பல வகுப்புக்களும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளும். இந்தியச் சர்க்காரே அவைகளிடை பிளவுண்டாக்கி வருகிறது. அத்தகைய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன் இந்தியர் வாழ்க்கையில் நஞ்சு கலக்கும் அந்நியப் பொருள் விலக்கப்படுவது அத்தியாவசியம். பிரிட்டிஷ் பொதுமக்கள் சர்க்காரை நெருக்கி வற்புறுத்தினாலொழிய மகாநாட்டால் ஒரு பயனும் அடையப் போவதில்லை" எனக் கூறினார். ஆகாகானுடனும் முஸ்லீம்களுடனும் ஒரு ஒப்பந்தத்துக்கு வரும் விஷயத்தில் தாம் நம்பிக்கை இழந்ததாகப் பொருள் படும்படி அவர் பேசியுள்ளார்.

* * *

பல ஜில்லாக்களிலும் போல ஐக்கிய மாகாணத்திலும் குடிகள் வரியாலடைந்துள்ள பெருங் கஷ்டத்தை நோக்கிச் சர்க்கார் தக்க சௌகரியங்கள் செய்யாவிடின் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கியே தீரவேண்டுமெனக் காங்கிரஸ் அபிப்பிராயப்பட்டதால் அது விஷயமாக காந்திஜியின் அனுமதியையும் அபிப்பிராயத்தையும் ஜவார்லால் கேட்டிருந்தார். "அலஹாபாத்தின் நிலைமைக்கு எது உசிதமெனப் படுகிறதோ அதை உடனே செய்யுங்கள்" என மகாத்மா தந்தி அனுப்பினார்.

* * *

ராய்ட்டர் நிருபரிடம், "நான் ஜவஹர்லாலுக்கனுப்பிய தந்திக்கும் மகாநாட்டுக்கும் சம்பந்தமொன்றுமில்லை. அதில் ஐக்கிய மாகாணத்தின் நிலைமையைப் பற்றியே குறிக்கப்பட்டிருக்கிறது. எப்படியாவது மகாநாடு நன்கு நடைபெற என்னாலான முயற்சிகள் செய்வேன். இதுவரையிலும் அவ்விதமே செய்து வந்துள்ளேன். அதன் நடவடிக்கைக்கு யாதொரு தடையும் விளைத்ததில்லை. அது முறியுமாயின் அதற்குக் காரணம் அதன் வலிவின்மையே. ஏனெனில் காங்கிரஸ் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லையென நான் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எடுத்துக்காட்டியிருக்கிறேன்" என்றார்.

* * *

"தனித்தொகுதியினால் தீண்டாதாருக்கும் இந்துக்களுக்கும் உள்ள சச்சரவு அதிகப்படும். இருவரையும் ஒரே தொகுதியாகச் சேர்ப்பதே சமரசத்துக்குத் தக்க சந்தர்ப்பம் தருவதாகும்" என்பதே அவர் தீண்டாதார் தனித்தொகுதியை மறுப்பதற்குக் காரணம்.

* * *

தாம் வெறுங்கையோடு திரும்பினால் மிகக் கடுமையான பகிஷ்காரம் ஆரம்பிக்கப்படுமென்றும், இங்கிலாந்து இந்திய வியாபாரத்தை அடியோடு தத்தம் செய்யவேண்டியதுதானென்றும் அடிகள் எச்சரித்தது பிரிட்டிஷார் மனத்திற் பதிந்துள்ளது. அப்படி அவரை யனுப்புவதின் பயன் இந்தியாவும் இங்கிலாந்தும் கொடிய விரோதிகளாவதுதானென்றும் சட்ட மறுப்பும் அடக்குமுறையும் கடுமையாக பயங்கரமான வழியில் அமுலுக்கு வருமென்றும் அவர்கள் அறிந்துள்ளனர். போர் தொடங்கிவிடின் அடக்கு முறைகளையோ கலகங்களையோ தணிக்கும் விஷயத்தில் எவரும் தலையிடமுடியாது என லண்டன் வியாபாரிகளும் வேறு அனுபவமுள்ள அறிஞர்களும் கருதுகின்றனர். அதனால் காந்திஜியை அவ்வாறு ஏமாற்றி அதிருப்தியுடன் அனுப்பா திருக்குமாறு அவர்கள் வாதிக்கிறார்கள். கௌரவமான முறையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வாய்த்த சந்தர்ப்பத்தை இழக்காதிருக்குமாறு வற்புறுத்த விஷயஞானமுடையவர்கள் மந்திரி சபைக்கொரு மகஜர் அனுப்ப உத்தேசித்துள்ளனர். ஆர்ச் பிஷப் முதலிய பிரபல மதக்குருக்களும் ஏனையரும் இதிற் கையொப்பமிடுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

கிறிஸ்துவ மதப்பிரசாரகர்கள் கூட்டத்தில் காந்திஜீ, வகுப்புப் பிரச்சினைத் தகராரையும் சுதேச மன்னரது குறுக்கான போக்கையும் அதிகமாக்கிக் காட்டுவது நியாயமல்லவெனக் கூறி, ஒப்பந்தத்தின் அவசியத்தை வற்புறுத்தினார்.

* * *

மற்றொரு சமயத்தில் அவர் வெளிப்படையாகக் கூறிய மொழிகளாவன:—

"இந்தியாவின் கோரிக்கைக்கு அனுகூலமாக ஆங்கிலேயர் மனத்தை மாற்றவே இங்கு வந்தேன். இவ்வேலையில் வேண்டிய அளவு பொறுமையை நான் தேடிக்கொள்ளவேண்டும். மிகவும் பணிவாக வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டவன் நான். மனமாறுதலுக்கான உபாயங்களையெல்லாம் அனுஷ்டிக்க வேண்டியவன் நான். ஆனால் சில சமயங்களில் பொறுமையும் போதவில்லை. ஆகவே, சிறிது உண்மையையும் வெளியிட வேண்டியதா யிருக்கிறது. அது சிலரது கோபத்தை எழுப்புகிறது. மகாநாட்டு அமைப்பைப்பற்றி யான் கூறியதே உதாரணமாகும். ஆனால் மன மாறுதலுக்கான உபாயங்களெல்லாம் வீணாக முடிந்துவிடின் நான் தாராளமாக இந்தியாவுக்குத் திரும்பவேண்டியதுதான். புதிய உணர்ச்சி நிறைந்த இந்தியப் பொதுமக்கள் பூரண சுயேச்சைக்குக் குறைவான எதையும் ஏற்கப்போவதில்லையென நான் உங்களுக்குத் திடமாக அறிவிக்கிறேன். உங்களுக்கு விருப்பமுண்டேல் உங்கள் உதவியைக்கொண்டே சுயேச்சையைப் பெறுகிறோம். நீங்கள் ஒத்துழைக்க மறுப்பீரேல் உங்கள் உதவியின்றியே அதைப் பெறப்போகிறோம். நாங்கள் சுதந்தர மடைவதைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியப்போகிறதில்லை. தவறுகளிழைக்கவும் உரிமை வேண்டுமெனத் துடிக்கின்றது இந்தியா. வெற்றி காணாதபடித் தவறே செய்துவரும் ஜாதியினரான நீங்கள் இந்தியா சுதந்திரம் பெறலாகாதெனக் கூறுவது உங்கட்கே அழகுதானா?"

மற்றொரு சமயம் மொழிந்த வீர வசனங்கள்:—

"இந்திய சமூகங்களினிடையே பிரிட்டிஷ் ஆட்சி ஒரு ஆப்புப்போலுளது. அதைப் பிடுங்கி எறிந்துவிட்டால் பிரிந்த பாகங்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்துவிடும். அன்னியர் மிருக பலத்தின் மூலம் அடக்கி யொடுக்கிச் சமாதானத்தைப் புகுத்துவதைவிடச் சுதந்தர நாட்டில் ஆரம்பத்தில் ஏற்படும் குழப்பமே மேலானது. அக்குழப்பம் தணிந்த உடன் மீண்டும் ஒற்றுமை தோன்றிவிடும். வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகள் நன்கு தேர்ந்தெடுக்கப்படாதவர்களா யில்லாததால் தான் மகாநாடு முட்டுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியால் நன்மை ஏற்பட்டுள்ளதா இல்லையா எனத் தீர்மானிப்பது யார்? பிரிட்டிஷாராகிய நீங்களா, நாங்களா? சக்கரத்தினடியில் சிக்கியவனுக்கேயன்றி அவனனுபவிக்கும் துன்பம் மற்றையோருக்குத் தெரியாது. தாதாபாய் நௌரோஜி, பிரோஸிஷா மேதா, ரானடே, கோகலே முதலிய அறிஞர்கள் பிரிட்டிஷ் சம்பந்தத்தைப் பாராட்டியவர்களாயினும் பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியா வறுமையை வாங்கிக் கொண்டது, பேடியாய் விட்டது எனத்தான் கூறியுள்ளார்கள்.

"நாம் பலவீனமான சமூகத்தாரா? அப்படியிருப்பினும் பாதகமில்லை. நமக்கு அஞ்சா நெஞ்சமுள்ளது. எவ்வளவுதான் மெலிந்திருந்தாலும் நமது ஆண்களாவது பெண்களாவது போலீஸ் தடியடிக்கு அஞ்சி யோடினதில்லை. எவ்வளவுதான் சர்க்கார் நல்லதாயிருந்தாலும் சுயராஜ்யச் சர்க்காராகுமா? பிரிட்டிஷாரே, நீங்கள் எவ்வளவு தவறு செய்பவர்கள்? எங்களுக்குத் தவறு செய்யும் உரிமையை எப்படி நீங்கள் மறுக்க முடியும்? அன்னியருடைய ஆட்சியை வெறுத்து வெறுத்துப் பல்லாயிரக் கணக்கான மக்களது நெஞ்சம் இரும்பாய்விட்டது."

காங்கிரஸ் இந்தியாவிலுள்ள பல சபைகளிலொன்றன்று. மற்றெல்லாவற்றிலும் பெரியது, பிரதானமானது. விடுதலைக்காகப் போராடும் சபை அஃதொன்றே. அதற்காக நினைக்கமுடியாத துன்பங்களை இந்து, முஸ்லிம், சீக்கியர், பார்சியர், கிறிஸ்துவர் முதலிய பல பிரிவினரும் சேர்ந்த இந்திய மக்கள் சகித்தனர். அச்சமயம் மைனாரிட்டி மெஜாரிட்டி பேச்சு எதுவும் தலைகாட்டவில்லை. காங்கிரஸ் எல்லாச் சமூகங்கட்கும் பூரண சுதந்தரங் கொடுக்கத் தயாராயிருக்கிறது. என்றும் அவர் கூறியுள்ளார்.

* *

வேறு கர்ஜனைகள்:—

"இந்தியா ஒரு பெரிய சிறை. நாங்கள் கைதிகளாய்க் கிடக்கிறோம். நீங்கள் (ஆங்கிலேயர்) சிறைக் காவலர்கள். என்றாயினும் நாங்கள் உத்திரவாதம் கூறவேண்டும்; நீங்களும் பதில் கூறித்தானாக வேண்டும். உங்கட்கும் எங்கட்கும் ஏற்பட்டுள்ள இவ்வியற்கைக்கு விரோதமான சம்பந்தம் சகிக்க முடியாதது. போதும் போதும் நம்முறவு! இன்றே அது முடிவடையுமாறு கோருகிறேன்."

"சுதந்தரம் கொடுக்கல்-வாங்கல் பொருளல்ல. நாங்கள் அதைப் பாடுபட்டே பெறவேண்டும். கடவுட் கிருபையால் உங்கள் கையிலிருந்து அதைப்

பிடுங்கிக்கொள்வோம். எங்கள் நாட்டின் விடுதலைக்காக நாங்கள் இதுவரை செய்த தியாகமே போதுமெனக் கருதினோம். ஆனால் அது ஆங்கிலேயர் இதயத்தில் இன்னும் துளியும் தைக்கவில்லை. ஆகவே, இனி நான் இந்தியாவுக்குத் திரும்பத் தயார்! எனது தாய்நாட்டு வீரர்களை மீண்டும் தியாக அக்கினியிற் குளிக்குமாறு தூண்டவும் தயார்! முன்னினும் கடும்போர் புரியவும் தயார்!"

வகுப்புப் பிரச்னையைப்பற்றித் தம் முன் பின் அபிப்பிராயங்கள், முஸ்லிம் பிரதிநிதிகள், சங்கடமான நிலைமையினின்றும் விடுதலையடையும் வழி ஆகியவை பற்றிய கேள்விகட்குப் பதிலளிக்கையில், மகாநாட்டில் கலந்துள்ள பிரதிநிதிகள் சரியான பிரதிநிதிகளல்லர்; வகுப்பு வாதிகளென்பது பற்றியே சர்க்காரால் பொறுக்கப்பட்டவர்கள்; தத்தம் வகுப்பினரிலேயே பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்படாது மறுக்கப்படுபவர்கள் என்பதே வகுப்புப்பிரச்னை அவ்வளவு பிரமாதமானதல்ல வென்னும் அபிப்பிராய மாறுதலேற்பட்டதற்குக் காரணமென்றும்; மகாநாட்டுக்குச் சென்றுள்ள முஸ்லிம்கள் சரியான பிரதிநிதிகளல்லவென்றும், உண்மையான தேசிய முஸ்லீம்கள் சிலரை மகாநாட்டிற் சம்பந்தப்படாதிருக்கும்படித் தாமே கேட்டுக்கொண்டதாகவும், தம்மைப் பொறுத்த மட்டில் முஸல்மான்கள் என்ன கேட்டாலும் கொடுத்துவிடுவாரென்றும், சீக்கியரிடம் தமக்கேற்பட்ட தோல்விக்கு அவர்கள் பிரதிநிதிகள் அவ்வகுப்பினராலேயே தேர்ந்தெடுக்கப் படாமையே காரணமென்றும், நமக்குக் கிடைக்கக்கூடிய தின்னதென்று தெரிந்தால் உடனே ஒற்றுமைக்காகப் பெரிதும் முயல்வாரென்றும்; சங்கடத்தினின்றும் விடுபட எவ்வளவோ வழிகளுண்டென்றும், வகுப்புப் பிரச்னையைப் பிரமாத மாக்கியுள்ளதே ஒரு பெரும் முட்டுக்கட்டையா யுள்ளதென்றும், அது தீர்ந்தாலும் தீராவிட்டாலும் இந்தியா சுதந்தரமடைந்தபின் சில நாட்கள் கஷ்டமிருக்கலாமென்றும், அதற்காகச் சுதந்தரத்தைப் பிடித்து வைத்திருத்தல் கூடாதென்றும், தியாகமே அதை யடைதற்கு அருகதை யுடையவராக வழியென்றும், தமது கோரிக்கை நிறைவேருவிடில் பகிஷ்காரம் முன்னினும் கடுமையா யிருக்குமென்றும் கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் எல்லாப் பாகங்களிலும் ஆண் பெண் இருபாலாரும் அவர்கள் அனுபவித்து வரும் சுதந்தரத்தை இந்தியருக்கும் அளிக்கவேண்டுமென்பதே தமது கோரிக்கை என உணர்ந்து தமக்கு ஆதரவளிக்கின்றனரென்றும், அவர்களுதவியால் மறுபடியும் சுதந்தரத்திற்காகச் செய்யப்படும் தியாகமும் முயர்சியும் நற்பயனளிக்கக்கூடுமென்றும், அச்சமயத்திலே மனிதர்களை மிருகபலங் கொண்டு தாக்குவது இராதெனத் தாம் நம்புவதாகவும், தமது நண்பர்கள் மிகுந்த ஆங்கிலேய சமூகத்தில் மனிதவர்க்கத்தை மிகவும் தாழ்த்தக்கூடிய மிருக சுபாவம் புகுந்துவிட்டதற்காகப் பெரிதும் வருந்தி அதைத் தலையெடுக்கவிடாது நசுக்குவதற்காகவும் இங்கிலாந்தின் மிருக சுபாவத்தை இந்தியா தன் அஹிம்ஸா தர்மத்தினுல் மாற்றவேண்டுமென்பதற்காகவுமே, தாம் தமது முழுச் சக்தியையும் உபயோகித்துப் பாடுபடுவதாகவும் மற்றொரு சமயம் அடிகளார் கூறியுள்ளார்.

## சோதியின் சுடர்கள்

"வட்டமேஜைக்கு எத்தனையோ பிரதிநிதிகள் சென்றுளார்கள். அவர்கள் சர்க்காரார் நாணயச் சாலையில் அடிக்கும் ரூபாய் போன்றவர்கள். பார்வைக்கொரு மதிப்பு; உண்மை மதிப்பு அதைவிட மிகக் குறைவு. ஒரு ரூபாய் நாணயத்தில் இருப்பது 4 அணு வெள்ளிதான். ஆனால் மகாத்மாவோ, தங்க மோஹரா போன்றவர். பார்வை விலையொன்று, உண்மை விலையொன்று அல்ல. அவரே நமது நாட்டின் உண்மையான பிரதிநிதியும் தலைவரும் ஆவர்".— காந்தி ஜயந்தியில் G. V. தேஷ்முக் கூறியது.

ஒரு நாள் பல ஏழைக் குழந்தைகளுடன் நமது 63 வயது குழந்தை வேடிக்கையாக வார்த்தையாடிற்று. "உங்கள் ஊர் விளையாட்டுகளென்னென்ன? உங்களூர்க் காற்று சீதோஷ்ண நிலையெல்லாம் எவ்வாறிருக்கும்" எனப் பல் கேள்விகள் பிறந்தன. அவற்றிற்கெல்லாம் அவர் அமைதியோடும் அன்போடும் வேடிக்கையாகவும் பதிலளித்தார். "உங்கள் பாஷை எப்படி யிருக்கும்?" என்ற கேள்விதான் மகாத்மாவின் உபதேசத்துக்குச் சந்தர்ப்பமளித்தது. ஹிந்தி "பிதா"வுக்கும் ஆங்கில"பாதர்" (Father) லத்தீன் "பேடர்" இவைகட்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தைக் கூறி அவையெல்லாம் ஒரே பதத்திலிருந்து தோன்றின என விளக்கினார். பிறகு 'மதர்', 'மாதா' என்பவற்றின் ஒற்றுமையைக் காட்டினார். இவ்வாறெல்லாம் கூறிய பின் "இதனால் என்ன தெரிகிறது?" என்றார். "நாமெல்லாம் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிகிறது" என ஒரு குழந்தை மொழிந்தது. "ஆம் நாமெல்லாம் ஒரே குடும்பத்தவரே; எல்லோரும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும்" என்றார் மகாத்மா, "எங்களை யடித்தால் நாங்கள் கட்டாயம் திருப்பி அடிப்போம்" எனச் சில பையன்கள் கூறினர். காந்தியார் அதுகேட்டு அனைவர்க்கும் அஹிம்ஸையைப் போதித்தார். குழர்தைகளெல்லாம் குதூகலமாய்த் தலையசைத்தனவாம்.

*

"காந்திஜீ ஒரு மகானென்று தான் முதன் முதலாகக் கூறவேண்டும். பிறகுதான் அவரை ராஜீயவாதி யெனக் கூறலாம்............படத்திலிருந்து அவர் உருவம் சாதாரணமானதெனக் கருதலாம். ஆனால் அவருருவம் ஆகர்ஷணம் மிகுந்தது. அவர் பேச்சு ஹாஸ்யம் நிறைந்தது..........'செல்வம்' உபயோகமற்ற வஸ்து என்பது அவரது சித்தாந்தம். மனிதன் தனது ஊணையும் உடையையும் தானே தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பது அவர் உபதேசம்.........அவர் சொன்ன சொல் தவருத உத்தமர். தாம் உட்பட்ட எந்த நிபந்தனையையும் கடைசிவரை கடைப்பிடித்தொழுகும் பிடிவாத முள்ளவர். தம் சொந்த ஜனங்களின் எதிர்ப்புக்கும் அஞ்சாதவர்."—'முழந்துண்டு பக்கிரி' யென்ற நூல் வரைந்த ராபர்ட் பார்னே இவ்வாறு நமது மகாத்மாவைப் புகழ்ந்துள்ளார். இவரே அவரது ஆகர்ஷண சக்திக்கு உதாரணமாயுள்ளார்.



*

"பெரியார்கள் தூங்குவதிலும் விசேஷமுண்டு. காந்திஜி மும்முரமாக வேலை செய்துகொண்டிருக்கிறார்; திடீரெனக் கண் மூடுகிறார்; உடனே கண் விழிக்கிறார். இதுவே அவர் உறக்கத்தின் மகிமை ஒரு சமயம் அவர் எழுதவேண்டிய விஷயமொன்றைச் சொல்லிக்கொண்டே வந்தார். (தேசாய் எழுதி வந்தார்) திடீரென அவர் கண்கள் மூடின. இரண்டு நிமிஷ நிசப்தம். அவரது வீர விழிகள் அலர்ந்தன. உடனே தூங்காதவர் போலவே தாம் விட்ட இடத்திலிருந்து சாதாரணமாகத் தொடர்ந்து சொல்லலானார். நெப்போலியன் தூக்கமும் இவ்வாறனதே." என மகாத்மாவிடம் அத்தியந்த பக்தி பூண்ட மிஸ்டர் போலக் என்பாரது மனைவியார் எழுதுகிறார்.

*

கடிகாரம் ஓய்ந்தாலும் காந்திஜீ ஓயார்:—63-வது வயதில் அடிகளார் எவ்வளவு அபாரமாக உழைக்கிறாரென்பதைக் கண்டு எவரும் ஆச்சரியப்படாதிருக்க முடியாது. அவரது தினசரி உழைப்பைக் காட்ட அவர் டயரியில் குறித்துள்ள ஒரு நாள் வேலைகளைக் கீழே தருகிறோம்.

*

காலை 1 மணி கிங்ஸ்லி ஹாலுக்கு வருதல்.
,, 1-45 ,, நூல் நூற்றல்.
,, 1-50 ,, டயரி எழுதுதல்.
,, 2 முதல் 3-45 வரை தூக்கம்.
,, 3-45 முதல் 5 வரை பிரார்த்தனை.
,, 5 முதல் 6 வரை தூக்கம்.
,, 6 முதல் 7 வரை உலாவுதல், பேட்டி.
,, 7 முதல் 8 காலைக்கடன், ஸ்நானம்.
,, 8 முதல் 8-30 ஆகாரம்.
,, 8-30 முதல் 9-15 வரை கிங்ஸ்லி ஹாலிலிருந்து கின்காட்ஸ் பிரிட்ஜ் போதல்
,, 9-15 முதல் 10-45 வரை ஒரு நிருபர், சித்திர நிபுணர், சீக்கியர், ஒரு வியாபாரி இவர்களுக்குப் பேட்டி.
,, 10-45—11 ஜேம்ஸ் மாளிகை.
,, 11—1 ஷை
மாலை 1—2-45 மாலை ஆகாரம்.
,, 3—5-30 முஸ்லிம்களோடு பேச்சு.
,, 5-30—7 இந்தியா மந்திரியோடு பேச்சு.
இரவு 7—8 வீடு திரும்புதல், இரவு போஜனம், பிரார்த்தனை.
,, 8—9-10 மதுவிலக்குப் பிரசாரக் கூட்டத்தில் பிரசங்கம்.
,, 9-10 போபால் நவாபைப் பார்க்கப்போதல்.

*

"காந்தி" முயல்:—கிங்ஸ்லிஹாலில் மகாத்மாவைச் சூழ்ந்துகொண்டு பல ஏழைக் குழந்தைகள் அடிக்கடி குலவி விளையாடும். ஒரு நாள் அவர் ஒரு புட்டி நிறையப் பட்டாணி அடைத்து "உத்தேசமாக இதிலுள்ள பட்டாணி எத்தனை யென்று சொல்வோருக்கு ஒரு பரிசு" என்றார். காலின் என்னும் 3 வயது சிறுவன் சொன்னதே ஏறக்குறைய சரியாயிருந்தது. மகாத்மா அவனுக்கொரு முயல் குட்டி தந்தார். அக்குட்டி ஞாபகார்த்தமாக 'காந்தி' எனப் பெயரிடப்பட்டது.

"மகாத்மாகாந்தி" ஆடு:—ஜலிங்டனில் நடந்த ஆட்டுப் பண்ணைக் காட்சியில் மகாத்மா அரைமணி நேரம் சந்தோஷமாகக் காலங்கழித்தார்; அவருக்குப் பாலளித்து வரும் ஆடொன்றுக்கே பரிசளிக்கப்பட்டது. அவ்வாடும் "மகாத்மா காந்தி" எனப் பெயர் பெற்றது. தமக்குப் பாலளித்து வரும் இரண்டு ஆடுகளைத் தடவிக் கொடுத்து, இந்தியாவில் அரைப்பட்டனி கிடக்கும் மக்களைப் போலவே அவர்களாடு மாடுகளும் மெலிந்து கிடக்கின்றன; பிரிட்டனிலுள்ள ஆடு மாடுகளெல்லாம் மிக உயர்ந்தவையா யிருக்கின்றனவென அவர் கூறினார்.

*

மோட்டார் விபத்து:—

25-ந் தேதி ஆக்ஸ்போர்டில் ஒரு குறுகிய வீதியில் மகாத்மா ஏறிச்சென்ற மோட்டார் ராய்ட்டர் விசேஷ நிருபர் மோட்டாருடன் மோதுவதினின்றும் தெய்வாதீனமாய்த் தப்பிற்று. இரண்டுக்கு மிடையே சில அங்குல இடமே இருந்தது. இப்படி நேரவிருந்த பெரிய விபத்தைக் கண்ட மகாத்மா குலுங்கக் குலுங்க நகைத்தாராம். என்னே அவரது மனவன்மை! எமனையும் எட்ட நிறுத்திப் பேசுவார்போ லிருக்கிறதே.

*

அடிகளாருக்கும் இங்கிலாந்து குழந்தைகட்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தம் காந்தத்துக்கும் இரும்புக்குமுள்ளது போலவே யிருக்கிறது. அக்குழந்தைகளின் உள்ளங்களை அவர் ஒருங்கே கொள்ளை கொண்டுள்ளார். அவர்கள் அவரைப்பற்றிக் கூறும் கனிமொழிகளையும் அவரிடம் நடந்து கொள்ளும் அன்பான முறைகளையும் காண்போர் ஒருவேளை அவர்கள் பெரியவர்களாகும் காலத்தில் அவர்களுக்கும் இந்தியருக்கும் வெகுசுலபமாகப் பரஸ்பரம் ஏற்படும் போலும் எனத்தான் நினைக்க வேண்டி யிருக்கிறது.

பத்து வயதுக்கும் குறைந்த ஒரு சிறுமி, அன்பிலும், தியாக சிந்தையிலும், பொதுநல உழைப்பிலும், எளிய வாழ்க்கையிலும் மகாத்மாவை ஸெயிண்ட் பிரான்ஸிஸ் ஆப் அஸிஸிக்கு ஒப்பிட்டு ஒரு வியாசம் வரைந்துள்ளாள்.




கெட்டியான இரும்பு தூண்களைவிடப் போலாயுள்ள இரும்பு குழாய்களே அதிக பளுவைத் தாங்குகின்றனவாம்.

* *

மிருகங்களில் மிகவும் வேகமாய் ஓடக்கூடியது கலைமான். சிறுத்தை அவ்வளவு வேகமாய் ஓடுமாயினும் அதிக தூரம் ஓடாதாம்.

* *

11-வயது ஆங்கிலச் சிறுவ னொருவன் தனது முயற்சியால் ஒரு சிறிய மோட்டாரைச் செய்து ஓட்டிச் சென்றான்.

* *

கப்பல் யாத்திரை செய்வோர் கடல் நோய்வாய்ப்பட்டால் அதை எந்த மருந்தும் போக்காதாம்.

* *

திராக்ஷை ரசத்துடன் தேனைக் கலந்து வைப்பதால் அதை எக்காலத்தும் கெடாமல் வைத்திருக்க முடியுமாம்.

* *

மீன் செதில்களில் பல நுட்பமான கோடுகள் உண்டு. அவை வருடத்திற்குப் பதினாறு வீதம் வளரும். இதை வைத்துக்கொண்டு மீன்களின் வயதை நிச்சயிக்கலாம்.

* *

இங்கிலாந்தில் கடலோரத்திலுள்ள கூழாங்கற்களுடன் நவரத்தினக் கற்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன வென்று திரு. ஏ. டப்ள்யூ ஆலன் கூறுகிறார்.

* *

துருக்கியிலுள்ள ஹாஜி அகமது என்பவருக்கு வயது 136. அங்குள்ளவர்களில் அவரே வயதில் மூத்தவர்.

* *

ஐரோப்பிய பாஷைகளில் அதிகமாகப் பேசப்படுவது ஆங்கிலம். சுமார் 16 கோடி ஜனங்கள் அதைப் பேசுகிறார்கள்.

* *

ரசாயன முறையால் மனிதரது புத்தியையும் யோசனையாயும் க்ஷணத்தில் மாற்றிவிடலாமாம்.

* *

லண்டனில் தபால்களைப் பிரிக்கும் உத்தியோகஸ்தரில் ஒரு பகுதியிலுள்ளவர் சுமார் 6700 தெருக்களை மனப்பாடம் செய்து வைத்திருக்கவேண்டும்.

'ஹௌஸ் ஆப் காமன்ஸ்' என்னும் பொதுமக்கள் மன்றத்திலுள்ள கக்ஷிகளின் நிலைமை

| | | |
|---|---|---|
| கன்சர்வேடிவ்கள் | 473 | வோட்டுகள் |
| நேஷனல் லேபர்கள் | 13 | ,, |
| லைமன் லிபரல்கள் | 35 | ,, |
| ஸாமுவேல் லிபரல்கள் | 33 | ,, |
| ஆக துரைத்தன ஆதரவாளர்கள் மொத்தத் தொகை | 554 | ,, |

எதிர்ப்புக் கக்ஷியினரில் லேபர்கள் 50 பேரும், லாயிட் ஜார்ஜ் இன்டிபென்டன்ட் லிபரல்கள் 4 பேரும், மற்ற இன்டிபென்டன்ட்கள் 7 பேரும் உள்ளனர்.

* *

நிகழும் நவம்பர் மாதம் 6-ந் தேதி திருவாங்கூர் மகாராஜா இராஜ்ய பாரத்தை ஏற்றார். இச்சம்பவம், ஆடம்பரமான ஊர்வலங்கள், பெருந்தொகையான தானங்கள், கைதிகள் விடுதலை முதலிய பல வழிகளில் மிகவும் கொண்டாடப்பெற்றது.

* *

பிரான்ஸ் தேசத்தையும் இங்கிலாந்தையும் பிரிக்கும் இங்லிஷ் கால்வாயைக் கப்பல் மூலமாகவும் ஆகாய விமானத்தின் மூலமாகவும் கடந்ததையும், சிலர் நீந்திச் சென்று கடந்ததையும் கேட்டிருக்கிறோம். ஆனால் கனடாவைச் சேர்ந்த ஒருவர் சமுத்திரத்தின் மட்டத்திற்குக் கீழுள்ள பூமியின் மீதே சென்று இதைக் கடக்க யத்தனிக்கப் போகிறாராம்.

* *

நியூஸிலந்திற் கருகிலுள்ள சில தீவுகளில் மூன்று கண்களுள்ள பல்லிகள் வசிக்கின்றனவாம்.

* *

நியூயார்க்கிலுள்ள ஒரு சிறிய சிகப்புக் கோழி ஒரு விசித்திரமான முட்டை யிட்டதாம். தட்டையான அம்முட்டையின் மேல் கெடிகாரத்தின் மணிக் குறிப்புக்கள் காணப்படுகின்றனவாம். ஒரு முழு வட்டமும் அதில் பன்னிரண்டு சமமான பாகங்களும் உள்ளனவாம்.

* *

பீகிங்கில் ஒரு கோர்ட்டில் வாதியாகச் சென்றிருந்த ஒரு மாது இடையில் நீதிபதியை அனுமதி கேட்டுக்கொண்டு பக்கத்திலிருந்த ஓர் அறைக்குச் சென்றாள். சிறிது நேரம் பொறுத்து அவள் பிறந்த குழந்தையும் கையுமாய்த் திரும்பினாள். அதைக் கண்ட நீதிபதி ஆச்சரியத்தால் நாற்காலியினின்று விழப் போனாராம்.



# செங்குந்த யாத்திரைவாசி

## இடித்தவள் புடைத்தவள் எட்டப்போனாள்; எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டாள்

எனதன்பார்ந்த செங்குந்த வீரர்களே! சென்ற மாத மித்திரனில் யான் குறையாக விட்டுள்ள நீலகண்ட படலத்தைப் பூர்த்தி செய்யுமுன் எதிர்பாராது நிகழ்ந்த ஒரு விஷயத்தை முன்னிட்டு உங்களுக்கு இரண்டொரு வார்த்தை சொல்ல வேண்டி யிருக்கிறது. அதற்குச் சிறிது கவனமாய்ச் செவிசாய்க்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

'இடித்தவள் புடைத்தவள் எட்டப்போனாள்; எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டாள்' என்பது நம் தண்டமிழ் நாட்டின்கண் வழங்கி வரும் பழமொழிகளில் ஒன்றென்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும் அநேகர் அத்தகைய சம்பவத்தை நேரில் கண்டிருக்க மாட்டீர்கள். ஆனால் நான் சமீபத்தில் பிரத்தியக்ஷமாகக் கண்டேன். உங்களுக்கும் அதனைக் காட்டுவேன். சிறிது கவனியுங்கள்.

யான் மேற்கொண்டுள்ள விரதத்தைப் பற்றி நீங்கள் யாவரும் அறிவீர்கள். எனதரிய சகோதரர் வதியும் கிராமங்கள் (க்ஷேத்திரங்கள்) தோறும் செல்வான் வேண்டிக் காடுமேடெல்லாம் சுற்றியடிக்கும் கஷ்டத்தை யானறிவேன். கிணற்றுத் தவளைகளா யிருந்து உலகம் இன்னதென்பதை யறியாது 'புளியங்காய்க்குப் புளிப்பு குத்தவேண்டுமோ?' என்று சொல்லி இறுமாந்து கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் எனதன்பிற்குரிய சகோதரர்கள் சிறியேனது அனுபவத்தைக் கொண்டாவது ஈடேற முயல்வார்களா என்று எண்ணி யான் வரைந்து வரும் 'செங்குந்த யாத்திரைவாசி' என்னும் வியாசத்தைச் சென்ற மித்திரனில் யான் கண்டபோது திடுக்கிட்டேன். ஏன்? இடித்துப் புடைத்தவன் யான்; எட்ட இருந்து எட்டிப் பார்த்த ஒருவர் அதைக் கொட்டிக்கொண்டு போய்விட்டார். இதுவும் உங்களுக்கு விளங்கவில்லை என்றால் இன்னும் தெளிவாகச் சொல்லுகிறேன். சென்ற மாதத்திய 'செங்குந்த யாத்திரைவாசி' திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் பெயரால் வெளி வந்தது தான் அது.

யான் இதுகாறும் என் பெயரை வெளிப்படுத்தாமல் இருந்தமையால் தன் பெயரைப் போட்டுக் கொண்டாரோ என்று முதலில் சந்தேகித்தேன். திரு. மா. அ. க. வை நான் நன்கறிவேனாகையால் அவ்வாறு அவர் ஒருபோதும் செய்திருக்க மாட்டார் எனத் தீர்மானித்தேன். பின்னர் யான் சென்னைக்குச் சென்றிருந்தபோது மா. அ. க. வையும் மற்றையோரையும் கண்டு கேட்டேன். கேட்டபின் அது நேர்ந்த விதத்தை உணர்ந்தேன். மா. அ. க. வைக் கண்டு பேசியபோது வேறு சிலர் எழுதியனுப்பப்பட்டு இவ்வாறு தவறாக அவர் பெயரால் வெளி வந்த வியாசங்களுள் இது மூன்றாவதெனத் தெரிய வந்தது. நமது ஈரோடு மகாநாட்டிற்கு முன் கொங்கு நாட்டுத் தலங்களின் மான்மியம் அங்குள்ள ஒரு பெரியவரால் தயாரிக்கப்பட்டுத் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் மூலம் மித்திரன் ஆபீசுக்கு அனுப்பப்பட்டதாம். அவ்வியாசமும் மா. அ. க வின் பெயராலேயே பிரசுரிக்கப்பட்டது. அதுவே முதல் முதலாக தவறுதலாய் மா. அ. க. வின் பெயரால் வெளி வந்தது. கொங்கு தலங்களின் மான்மியம் மா. அ. க வின் பெயரால் வெளி வந்ததைக்குறித்துத் திரு. பி. செ. மா. அது எழுதிய பெரியாருக்குச் சமாதானம் சொல்லவும் நேர்ந்ததாம். ஆனால் அப்படி எனக்கு யாரும் சமாதானம் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆயினும் யான் என் அனுபவத்தைக் கொண்டு கஷ்டப்பட்டு எழுதிய வியாசம் மற்றொருவர் பெயரால் வெளி வருவது எனக்குப் பிடிக்கவில்லை. இதனால் யாரும் என்பேரில் மன வருத்தம் கொள்ளக்கூடாது. திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்களை யான் நெடுநாளாக அறிவேனாகையால் அவரிடம் இவ்வாறு எழுதுவதாக இருக்கிறேன் என்றும் சொன்னேன். அவரும் சம்மதித்துள்ளார். தவறு நிகழ்ந்ததைக் குறித்துத் துணையாசிரியர் மனம் வருந்தியதோடு அப்பெயரைத் துண்டு கடிதத்தால் மறைத்தும் வைத்தார். எனக்கும் சமாதானம் கூற முன் வந்தார்.

அநேக சகோதரர்கள் என் பெயரையும் ஊரையும் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். அது தற்சமயம் முடியாது. போகப் போகப் பார்த்துக் கொள்வோம். யான் யாத்திரை முடிவில் தெரிவிக்கின்றேன். இப்போது என் சொல்லக்கூடாதென்றாலோ, என் யாத்திரைக்குத் தடை ஏற்படும். என் திட்டப்படி யான் நடக்க முடியாது. தெரிவிப்பின் உங்கள் ஊர்கள் தோறும் வந்து உங்களிடையே அளவளாவியும் நீங்கள் என்னை இன்னானெனக் கண்டுகொள்ளாதவாறு யான் இப்போது நடமாடுவது போல் நடமாட முடியாது. யான் கொண்ட விரதம் தவறிவிடும். எனது குருமூர்த்திகளின் உத்தரவையும் மீறியவனாவேன். ஆகையால்தான் என் யாத்திரை பூர்த்தியாகட்டு மென்கிறேன். சிறியவனாகிய என்னை மன்னித்து ஆசீர்வதிப்பீர்களாக!

### நீலகண்ட படலத் தொடர்ச்சி

சித்திர:—ஆ! ஹா!! ஸ்வாமி கொடிக்கவி என்னும் நச்சுவாளால் ஈந்தெறியப்பட்ட 42 கிராமங்களும் என்ன பாடு பட்டன! எத்தனை வீண் வியாஜ்ஜியங்கள்! எத்தனை அடிதடி! எத்தனை பூர்களில் பிற இனத்தவரும் இதனால் வருந்த நேர்ந்தது! எவ்வளவு பண நஷ்டம்! எவ்வளவு மனஸ்தாபம்! எத்தனை கோயில்கள் பாழடைந்தன! எத்தனை வய

துக்கு வந்த பெண்மணிகளும், ஆண் பிள்ளைகளும் எத்தனை வருஷங்கள் கல்யாணமாகாமலிருந்தனர். மகா மும்முரமான கக்ஷி. இதில் நசுக்குண்டவர்கள் பெரும்பாலும் ஏழை மக்களே. இதுகாறும் அந்த நாடு ஒன்றுசேரவே இல்லை. இவ்வளவிற்கும் நா. நீலகண்ட முதலியாரின் குட்டிக் கலகந்தான் காரணம். இவர் மரணமடைந்த பிறகுதான் (நாடு குலைந்தாலும்) திருமணம் முதலிய விவகாரங்கள் ஒருவாறு முடிவடைந்தன. இவரை இறந்த பிறகும் பழிக்காதவர்களும் சபிக்காதவர்களும் இல்லை. இவருக்குத் தண்டனை...........

வீரவா:—சித்திரகுப்த! போதும்! இதோடு போதும்! இதற்குமேல் வேண்டா. இப்படி இன்னும் எத்தனை நாட்டாண்மைக்காரர்கள் இருக்கிறார்கள்?

சித்திர:—ஸ்வாமி! அதற்கும் ஓர் அளவுண்டோ? எத்தனை பேர் வேண்டுமானாலும் தயாராகத் தருவித்துள்ளேன்.

நாரதர்:—(முகத்தை ஒரு மாதிரிக் காட்டிக்கொண்டு தாழ்ந்த குரலில்) நன்றாய் வந்து அகப்பட்டுக்கொண்டேன். வேலை யெல்லாம் கெட்டுப் போகிறது. இது வரையில் எத்தனையோ லோகங்களுக்குப் போயிருப்பேன்.

வீரவா:—(நாரதரைப் பார்த்து) நாரதரே அவசரமா?

நாரதர்:—இல்லவே இல்லை ஸ்வாமி. விசாரணை நடந்தால்தான் போவேன். இதைவிட எனக்கென்ன வேலை? பிரங்கி மகாரிஷியைக் கேளுங்கள், நான் என்ன சொல்லிக்கொண் டிருந்தேன் என்று. கடைசி வரையில் இருந்தால்தான் எனக்கும் திருப்தி, தேவரீருக்கும் திருப்தி. ஆனால் எப்போது முடியுமென்பதுதான் தெரியவில்லை. முடியும் போது முடியட்டும். இனி எனக்கும் பயமில்லை.

நீலகண்ட படலம் முற்றிற்று.

---

# கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சீபுரம் ஐயங்கார்பாளையம் தெரு, செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம்

ஷை சங்க ஆதரவில் 10—10—31 மாலை 7 மணிக்கு ஸ்ரீ பணாமணீஸ்வரர் ஆலயத்தில் திரு. A. பெருமாள் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கத்துக்கும் தலைவர் முன்னுரைக்கும் பிறகு "பழியஞ்சின படலம்" என்பதுபற்றித் திரு. R. வீரபத்திரன் அவர்கள் நீண்டதோர் பிரசங்கம் செய்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியவர்கள் சபை வணக்கம் கூற இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

ஷை ஆலயத்தில் 20—10—31 மாலை 6 மணிக்கு ஷை சங்கத் தலைவர் திருவாளர் M. அன்னப்ப முதலியார் தலைமையில் கூடிய நிர்வாக சபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

1. இதுகாறும் செலுத்திவந்த சந்தாத்தொகை இரண்டு அணாவுக்குப் பதிலாக ஐப்பசி மாத முதல் மாதம் 1 அணா செலுத்தவேண்டும்.
2. இச்சங்கத்திற்குத் திரு. M. கோவிந்தராஜன் அவர்களே துணைக்காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். பலர் புதிய அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள்.

25—10—31 மாலை 7 மணிக்கு ஸ்ரீ பணாமணீஸ்வரர் ஆலயத்தில் திரு. R. வீரபத்திரன் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், கௌதம புத்தர், கண்ணப்ப நாயனார் முத்திபெற்ற வரலாறு, நம்பிக்கையின் விளைவு முதலியவைகளைப் பற்றி முறையே திருவாளர்கள் M. கோவிந்தராஜன் A. பெருமாள், M. சண்முக சுந்திரம் ஆகியோர் வெகு அழகாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

31—10—31 மாலை 7 மணிக்குத் திருவாளர் M. அன்னப்ப முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் தலைவர் முன்னுரைக்குப் பின் திருவாளர் K. கந்தசாமி என்னும் மாணவர், "பேராசையின் விளைவு" என்பதைப் பற்றி உபந்நியசித்த பிறகு திருவாளர்கள் M. கோவிந்தராஜன், M. சண்முக சுந்திரம் அவர்கள் முறையே வள்ளல்களில் ஒருவராகிய பாரி; இராமலிங்க சுவாமிகள் கல்வி கற்ற வரலாறு முதலியவைகளைப் பற்றிச் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு $9\frac{1}{2}$ மணிக்குக் கலைந்தது.

---

## தென்னாற்காடு ஜில்லா

### சின்னதச்சூர்

26—9—31 அன்றிரவு 8 மணிக்கு உயர்திரு ஆனந்த துரைசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய பொதுக் கூட்டத்தில், தலைச் சங்கப் பிரசாரகர் தமிழ்ப் புலவர் குமரகுரு முதலியார் "வல்லான் காவியமும், சமூக முன்னேற்றமும்" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசி முடித்த பின் இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

27—9—31 காலையில் அவ்வூர் குலாபிமானப் பெரியோர்களால் சந்தா வசூலித்துத் தரப்பெற்றுப் புதிய சந்தாக்களும் சேர்த்துத் தரப்பெற்றன. அன்றிரவு, 8-30 மணிக்குக் கூடிய பொதுக் கூட்டத்தில் சங்கப் பிரசாரகர் "இளையான்குடி மாறர் இயல்பும் செங்குந்தர் சீர்திருத்தமும்" என்னும்



சொற்பொழி வாற்றியபின் இரவு 10-30 மணிக்கு வந்தனோபசாரங் கூறப்பெற்று மகாசிவ கோஷத்திடையே கூட்டம் இனிது கலைந்தது.

மறுநாள் காலையில், அவ்வூர்க் குலாபிமானிகள் சந்தாவசூல் செய்து புதியசந்தாக்களும் சேர்த்த பின் 8-30-க்குக் கூடிய பொதுக்கூட்டத்தில் "முருகன் உற்பவமும் நம்மவர் கடமையும்" என்பது பற்றித் தமிழ்ப் புலவர் குமரகுரு முதலியார் அவர்கள் உபந்நியசித்த பின், இரவு சுமார் 11-30 மணிக்குக் கூட்டம் ஆனந்தகோஷத்திடையே இனிது கலைந்தது.

### எசாலம்

28—9—31 அன்றிரவு 8-மணிக்கு உயர்திரு க. இருசப்ப முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய பொதுக் கூட்டத்தில் நமது பிரசாரகர் "சிவ சமயமும், செங்குந்தரும்" என்பது பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். 5 தீர்மானங்கள் நிறைவேறின. அவை வருமாறு:

1. மகாத்மா காந்திஜி அவர்கள் சொல்லைக் கடைப் பிடித்து நடப்பதுடன் யாவரும் கதரணிய வேண்டும்.
2. நம்மவர்கள் இனி இராட்டினம் பஞ்சு இவைகளைத் தயார் செய்து அதன் மூலம் கதருடைகளைச் சேகரித்துப் பரப்பவேண்டும்.
3. இனி நமது பிள்ளைகட்கெல்லாம் அவசியம் உயர்தரக் கல்வியைக் கற்பிக்க வேண்டும்.
4. நம்மவர் சைவநெறிகளைத் தவறாது அனுஷ்டிக்க வேண்டும்.
5. நமது ஊரிலும் இன்னும் ஒரு ஆண்டிலாவது அவசியம் ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டும்.

வந்தனோபசாரங் கூறியபின், சுமார் 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### சிதம்பரம்

27-9-31 மாலை 6 மணிக்கு C. P. இரத்தின சபாபதி முதலியார் B.A. B.L., அவர்கள் தலைமையில் 2-வது கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் C. P. குமாரசுவாமி முதலியார் நமது சமூக முன்னேற்றம் என்பதைப்பற்றிப் பேசினார். பின் க. முருகேச முதலியார் கல்வி என்பதைப்பற்றிப் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின் உபதலைவர் உபகாரியதரிசி நிதி காப்பாளர் நிர்வாக சபை அங்கத்தினர் முதலியவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் சுமார் 10 மணிக்கு இனிது முடிந்தது.

1-11-31 மாலை 6 மணிக்குச் சிதம்பரம் மன்னார்குடி ரேர்ட்டு தெருவிலிருக்கும் பெண்பாடசாலையில் அ. முத்தைய முதலியார் அவர்கள் தலைமையில் 3-வது கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் அண்ணாமலை பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் ஆறுமுக முதலியார் அவர்கள் "நமது முன்னோர்களும் நாமும்" என்பதுபற்றி மிக அழகாகப் பேசினார்கள். அதற்குப் பின்பு காஞ்சிபுரம் அ. நமச்சிவாய முதலியார் அவர்கள் நமது தொழில் முன்னேற்றம் என்பது பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின்பு நிறைவேறிய தீர்மானங்களாவன:—

1. இக்கழகத்திற்கு 18 வயதுக்கு மேற்பட்ட செங்குந்தர் அனைவரும் உறுப்பினரே.
2. இக்கழகம் மாதம் ஒரு முறை 3-வது ஞாயிற்றுக்கிழமை கூடவேண்டும்.
3. இக்கழகத்தில் சேர்ந்த சந்தாதாரர் அனைவரும் சந்தாவை இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை கொடுத்துவிட வேண்டும்.
4. உலக விஷயங்களை அறிந்துகொள்வதற்காகப் பத்திரிகை வரவழைக்க வேண்டும்.
5. நிர்வாக சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவசியம் வரவேண்டும். வாராவிட்டால் வாராததற்குரிய காரணங்களைக் காரியதரிசிக்கு அறிவிக்க வேண்டும்.
6. மூன்று கூட்டங்கட்கு வாராத அங்கத்தினர் அவ்வங்கத்தினர் பதவியை இழைப்பர்.

வந்தனோபசாரங் கூறிக் கூட்டம் இரவு சுமார் 9 மணிக்கு இனிது முடிந்தது.

### T. புதுப்பாளையம்

13-10-31 இரவு 8-மணிக்கு ஸ்ரீவாஸஸ பக்தஜன சபை கோஷ்டியார் திருவாளர் மு. அ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் கீழ்க்கண்ட சொற் பொழிவுகள் நிகழ்ந்தன.

கல்வி அவசியம்—S. குப்புராவ், ஹெட்மாஸ்டர் போர்ட் ஸ்கூல். காந்தி, கத்தரும் மக்கள் கடமையும்—ஜி. முனிசாமி முலியார், போர்டு ஸ்கூல். செல்வம் நிலையாமையும், கல்வியின் மாட்சியும்—ச. வை. துரைசாமி முதலியார் தேசீய செங்குந்த சமூக சிக்கனம்—ஆ. சு. வைத்திலிங்க முதலியார். செங்குந்தரும் ஜீவகாருண்யமும்—ச. நா. குமரகுரு முதலியார், தலைச் சங்கப் பிரசாகர்.

தீர்மானங்கள்:—தலைச் சங்கத்துக்கு வாழ்த்து. நாமும் அதன் சார்பாக ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டுவ தவசியம். ஆண், பெண், இருபாலாரும் அவசியக் கல்வியின் நலனை புணர்ந்து பயில வேண்டும். இனி ஒவ்வொரு குடும்பத்ினரும் தமது பிள்ளைகளைக் கல்விச் சாலைக்குக் கட்டாயம் அனுப்ப வேண்டும். செங்குந்த ரனைவரும் ஜீவகாருண்ய நெறியினைக் கைக்கொள்ளவேண்டும்.

நமது ஆண் பெண்க ளனைவரையும் நெசவிலும் நூற்றலிலும் தேர்ச்சி பெறச் செய்வதுடன் கதரைப் பெரிதும் ஆதரிக்க வேண்டும். போதை வஸ்துக்களைக் கண்டித்து விலக்க அடிக்கடிப் பிரசங்கங்கள் செய்ய வேண்டும். முன்னேற்ற வழிகாட்டியாகிய மித்திரனை ஒவ்வொரு குடும்பத்தினரும் ஆதரிக்க வேண்டும்.

வரவேற்பு நன்கொடை வழங்கப்பட்ட பின், "நட்பு முறையும் நன்றி பாராட்டலும்" என்பது பற்றிப் பிரசாரகர் சொற்பொழி வாற்றினார். வந்தனோபசாரத்துக்குப் பின் "ஜே" கோஷத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம்

12—10—31 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு உயர்திரு நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய கூட்டத்தில் இராப்பள்ளிக்கூட விஷயத்தை அடுத்த வருடம் வரை ஒத்திவைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது. பின்னர் சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்த்தலுக்காக ஒன்பது பேர்களடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கப்பெற்றது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### தேவகோட்டை ஸ்ரீமுருகானந்த தர்ம வைத்தியசாலை

இவ்வாண்டு ஐப்பசித் திங்கள் க-ம் நாள் கூடிய கூட்டத்தில் திருநெல்வேலி ஜில்லா சிந்தாமணி உயர் சைவத்திருவாளர் பா. நயினர் முதலியாரவர்கள் கல்வியின் பெருமை, சைவ சமயம், ஜீவகாருண்யம், செங்குந்தர் சீர்திருத்தம் என்னும் விடயங்களைப்பற்றி அரிய சொற்பொழி வாற்றினபின் ஷை வைத்தியசாலை அதிபர் S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியாரவர்கள் ஆயுள்வேதம் நோய் அனுகாவிதி தர்ம வைத்தியம் என்னும் விடயங்களை எடுத்துப் பேசினர். பின் செங்குந்தர் யாவரும் ஒருங்கு சேர்ந்து சங்கத்தின் சார்பாகஒரு கூட்டம் நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டு வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

### செங்குந்த மகாஜன சங்கம்

இம்மதி ஆறும் நாள் குருவாரத்தன்று. இரவு 8-மணிக்குக் கூடிய கூட்டத்தில் திருநெல்வேலி ஜில்லா சிந்தாமணி உயர் சைவத்திருவாளர் பா. நயினர் முதலியாரவர்கள் தலைமை வகித்துச் செங்குந்தர் முன்னேற்றம், ஆன்றோர் கவித்திறன், தற்கால நிலைமை, ஒழுக்கம், ஜீவ்காருண்யம், ஒற்றுமை முதலிய விஷயங்களைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினார். திரு. நாக வீரப்ப முதலியார் செங்குந்தர் வரலாறும், திரு. சொ. நா. காளிமுத்து முதலியார் வல்லான் காவியமும், ஸ்ரீமுருகானந்த தர்ம வைத்தியசாலை அதிபர் S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியார் என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் விஷயமும் பேசியபின், தலைவர்கள் முடிவுரை யாற்ற தலைவரவர்கள் ருத்திராக்க மாலை, கதர் மாலை, புஷ்ப மாலை சூட்டப்பெற்றார். வாழ்த்துப்பா கூறி விபூதி, பிரசாதம், கற்கண்டு, சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றபின் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

---

## திருநெல்வேலி ஜில்லா

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் சங்கரநயினர் கோயில்.

18—8—31-ல் செங்குந்தர் அம்மாமடம் தெருவில் இரவு 8 மணிக்குத் தி. ப. க. அருணகிரி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் பி. திருவுடையா முதலியார் அவர்கள் சமூக முன்னேற்றத்திற்கான சொற்பெருக் காற்றினர்கள். S. பிச்சாண்டி முதலியார் அவர்கள் ஆலயமும், கடவுளும் என்பது பற்றிப் பேசினர்கள். பண்டிட் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் பக்தி என்பது குறித்துப் பேசியபின் மாணவர் S. சுப்பையா ஒற்றுமை என்பது பற்றிப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் மணி 12-க்கு இனிது கலைந்தது.

18—8—31-ல் தருமர் கோவில் தெருவில் இரவு 7 மணிக்குக் காங்கிரஸ் பொதுக் கூட்டம் பி. திருவுடையா முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தேசாபிமானி சுவாமி பாரத நேசன் அவர்கள் சமூக தேசீய முன்னேற்றத்திற்கான சொற்பெருக்காற்றினர்கள். S. பிச்சாண்டி முதலியார் கதர் என்பது பற்றிப் பேசினர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் மணி 12-க்கு இனிது கலைந்தது.

4—9—31-ல் தேனப்பபுரம் 1 நெ. தெருவில் இரவு மணி 8-க்குப் பி. திருவுடையா முதலியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் பண்டிட் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசிய பின் நம்மவர்கள் அன்னியநாட்டு துணிகளைப் பகிஷ்கரித்து நமக்கு வேண்டிய ஆடைகளை நாமே செய்து அணிந்துகொள்ள வேண்டும். கதர் அபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேறியது. தலைவர் அவர்கள் முடிவுரையாகக் கச்சிப் பிளவுக்குக்காரணம் கல்வி, ஆராய்ச்சியின்மையென்னும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் மிக அவசியம் என்றும் வற்புறுத்திப் பேசினர்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் மணி 11-க்கு இனிது நிறைவேறியது.

2—10—31-ல் தலைச்சங்கப் பிரசாரகர் திருவாளர் தி. அ. சண்முக முதலியார் அவர்கள் பகல் 11½-க்குப் பல பிரமுகர்களால் சிறப்பாக வரவேற்று உபசரிக்கப்பட்டார்கள். அன்றிரவு 8-க்குத் தருமர் கோவில் தெருவில் M. திருவுடையா முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் பிரசாரகர் அவர்கள் நமது சமூக முன்னேற்றத்திற்கான அனேக வழிகளைத் தெளிவாக விளக்கிக் காட்டினர்கள். பண்டிட் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் புராதனப் பழக்க வழக்கங்கள் என்பன பற்றிப் பேசினர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பட்டுக் கூட்டம் மணி 12-க்குக் கலைந்தது.

3—10—31-ல் செங்குந்தர் மாதவின் கோவில் தெருவில் இரவு மணி 9-க்குப் பா. திருவுடையா முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் திருவாளர் தி. அ. சண்முக முதலியார் அவர்கள் ஒழுக்கம், புலால் மறுத்தல் என்பவை பற்றி உருக்கமாகப் பேசினர்கள். தலைவர் அவர்கள் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் மணி 11-க்கு இனிது கலைந்தது.

5870